## பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கத்மே நுபுவ்வதின் அருள் எப்போதும் தொடர்கிறது | 1 |
| 2. | திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான அந்தஸ்து மற்றும் உயர் தகுதி | 2 |
| 3. | ஸலவாத் ஓதுவதன் முக்கியத்துவமும் அருள்களும் | 4 |
| 4. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான மிகவும் மேலான மகிமை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்கள் | 6 |
| 5. | பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்னான போதனைகள் | 8 |
| 6. | ஹுஸூர் அவர்கள் இலண்டன் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலிலுள்ள தாஹிர் ஹாலில் 28 டிசம்பர் 2016 அன்று ஆற்றிய நிறைவுரை | 9 |
| 7. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை (நீதி, நேர்மையின் ஒளியில்) | 18 |
| 8. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை (அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர் என்ற நிலையில்) | 24 |


## ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் காத்தமுன்னபிய்யீன் என்பதன் உண்மையான விளக்கம்

அஹ்ஸாப் அதிகாரத்தின் 41 –வது வசனத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காத்தமுன்னபிய்யீன் என்ற மகத்தான பட்டத்தை வழங்கியுள்ளான். காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு கீழ்க்காணும் பொருள்கள் இருக்கின்றன:

**(1)** எல்லா நபிமார்களை விடவும் சிறந்தவர்

**(2)** நபித்துவம் இந்த நபியின் மூலமாகவே அதன் முழுமையையும் சிறப்பையும் எட்டியது. அதன் பக்கம்,

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கி –யுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன் என்ற வசனம் சுட்டிக் காட்டுகின்றது. **(5:4)**

**(3)** நபிமார்களின் முத்திரை. அதாவது காத்தம் என்பதன் ஒரு பொருள் முத்திரையாகும். பெருமானார் (ஸல்) அவர்களின் சாட்சி முத்திரை இல்லாமல் ஆன்மீகத்தின் எந்தவொரு தகுதியையும் அந்தஸ்தையும் எவரும் பெற முடியாது என்பது இதன் கருத்தாகும். அதனை இந்த வசனம் உண்மைப்படுத்துகின்றது.

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ அதாவது நீர் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். **(3:32)**

எனவே, அல்லாஹ்வை நேசிப்பது, அவர்களைப் பின்பற்றுவதையே சார்ந்திருக்கும்போது அவர்களைப் பின்பற்றாமலும் அவர்களின் சாட்சி முத்திரை இல்லாமலும் ஆன்மீகத்தின் எந்தவொரு தகுதியும் அந்தஸ்தும் ஒருவருக்கு கிடைப்பது எப்படி சாத்தியமாக முடியும்?

காத்தமுன்னபிய்யீன் என்பதன் ஒரு பொருள் நபிமார்களின் ஆன்மீகத் தந்தை என்பதாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் பெருமானார் (ஸல்) அவர்கள் எந்தவோர் ஆண் மகனுக்கும் பௌதீக தந்தையாக இருப்பதை மறுத்துக் கூறியுள்ளான். ஏனென்றால், பௌதீகத் தந்தையாக இருப்பது மிகவும் கீழ்நிலையிலுள்ள ஒரு தகுதியாகும். ஆனால், ஆன்மீகத் தந்தையாக இருப்பது ஒரு மிகப் பெரும் தகுதியாகும். எனவே அல்லாஹ், எங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் பௌதீகத் தந்தையாக இருப்பதை மறுத்துள்ளானோ அங்கு அவர்கள் எல்லா நபிமார்களுக்கும் ஆன்மீகத் தந்தையாக இருக்கின்றார்கள் என்பதையும் கூறியுள்ளான். இது ஒரு மகத்தான அந்தஸ்தும் தகுதியுமாகும்.

**(5)** காத்தமுன்னபிய்யீன் என்பதன் இன்னொரு பொருள் பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதி ஷரீஅத்தை உடைய நபியாக இருக்கிறார்கள் என்பதாகும். அவர்களுக்கு பிறகு இனி ஷரீஅத் உடைய எந்த நபியும் வர முடியாது. அவ்வாறே மார்க்கக் கட்டளைகள் உள்ள எந்தவொரு வேதமும் வர முடியாது. திருக்குர்ஆன் இறுதி ஷரீஅத் ஆகும். அது மறுமை வரைக்கும் உள்ளதாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் முழு உலகிற்கும் இறுதி ஷரீஅத்தை உடைய நபியாக இருக்கிறார்கள். ஆனால் அன்னாரைப் பின்பற்றியவாறும் அன்னாரது அடியாராக இருக்கின்ற நிலையிலும் ஒருவர் நபியாக வர முடியும். இதனை இந்த வசனம் உண்மைப்படுத்துகின்றது.

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ
وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا

அதாவது அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்லாஹ் அருள் புரிந்தவர்களான நபிமார்கள், சித்தீக்குகள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்த் தியாகிகள்), சாலிஹுகள் (நல்லவர்கள்) ஆகியோரைச் சார்ந்தவர்களாய் இருப்பார்கள். **(4:70)**

அதாவது நபி, சித்தீக், ஷஹீது, ஸாலிஹ் ஆகிய அருட்கொடைகளில் எந்தவோர் அருட்கொடையும் அவர்களால் பெற முடியும். நமது அஹ்மதி அல்லாத சகோதரர்கள் கூறுவதுபோன்று ஒருவர் நபியாக ஆக முடியாது என்று கூறுவதாக இருந்தால் பிறகு அப்படிப்பட்டவர் சித்தீக்காகவும், ஷஹீதாகவும், சாலிஹாகவும் கூட ஆக முடியாது.

**(6)** காத்தமுன்னபிய்யீன் என்பதற்கான பொருள்களில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடப்பதன் விளைவாக அல்லாஹ்விடமிருந்து இல்ஹாமைப் பெறுகின்ற மற்றும் அவனுடன் உரையாடுகின்ற நற்பேற்றையும் அவன் வழங்குகின்றான். ஏனென்றால், எந்த நபியைப் பின்பற்றுவதன் மூலமாக நபித்துவம் கிடைக்க முடியுமோ அந்த நபியைப் பின்பற்றுவதன் மூலமாக இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேறு ஏன் கிடைக்காது? முந்தைய நபிமார்களைப் பின்பற்றியதன் விளைவாக இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேறு கிடைத்துக் கொண்டிருந்தது என்றால் பிறகு பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் விளைவாக இந்த நற்பேறு முன்பை விட அதிகமாகவும் சிறப்பாகவும் கிடைக்க வேண்டும்.

காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு அனைத்துமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமைக்கேற்ப இருக்கின்றது. நமது அஹ்மதி அல்லாத சகோதரர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களை விட உயர்ந்தவர்களாகவும் சிறந்தவர்களாகவும் இருக்கின்றார்கள் என்ற பொருளில் அன்னார் காத்தமுன்னபிய்யீனாக இருக்கின்றார்கள் என்பதை கண்டிப்பாக ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு அவர்கள் தருகின்ற விளக்கங்களின் மூலமாக எல்லா சிறப்புகளையும் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து பறித்து விடுகின்றனர்.

உதாரணமாக, பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த வகையிலுள்ள நபியும் வர முடியாது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் விளைவாக அன்னாரின் நிழலாக இருக்கின்ற அல்லது அன்னாரது உம்மத்தைச் சார்ந்த எந்த நபியும் வர முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் அடைக்காத அந்த மகத்தான அருட்கொடையின் கதவுகளை இவர்கள் அடைக்கின்றனர். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு வஹி மற்றும் இல்ஹாமின் கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன என்று அவர்கள் கூறுகின்றனர். ஒருவகையில் முன்னுள்ள சமுதாயங்களில் அவர்களது நபிமார்கள் மூலம் தொடர்ந்து கிடைத்து வந்த அந்த அருளை பெருமானார் (ஸல்) அவர்கள் தனது உம்மத்தில் தொடர்ந்து நீடித்திருக்கும்படி செய்யவில்லை. மாறாக, அதனை அவர்கள் அடைத்து விட்டார்கள்.

ஆக, நபித்துவத்தின் வாசலும் அடைக்கப்பட்டு விட்டது. இல்ஹாம் வருவது மற்றும் இறைவன் பேசுவது ஆகியவை நின்று விட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். இதன் மூலம் ஆன்மீகத்தின் எல்லா வழிகளையும் அவர்கள் அடைத்து விட்டனர். ஸய்யிதுனா வமவ்லானா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில உயரிய கூற்றுக்களைக்

*(தொடர்ச்சி 3 -வது பக்கம்...)*

# திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான அந்தஸ்து மற்றும் உயர் தகுதி

## திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான அந்தஸ்து மற்றும் உயர் தகுதி

✪ مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمًا ۝

பொருள்: முஹம்மது உங்களுள் எந்த ஆணுக்கும் தந்தை இல்லை. ஆனால் (அவர்) அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்-கெல்லாம் கா(த்)தம் ஆகவும் விளங்குகின்றார். மேலும் அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவனாவான். (33:41)

✪ وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَاٰمَنُوْا بِمَا نُزِّلَ عَلٰى مُحَمَّدٍ وَّهُوَ الْحَقُّ مِنْ رَّبِّهِمْ ۙ كَفَّرَ عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَاَصْلَحَ بَالَهُمْ

பொருள்: எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்து முஹம்மதுக்கு இறக்கப்பட்டதில் நம்பிக்கை கொள்கின்றனரோ அது அவர்களின் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மை ஆகும். அவன் அவர்களின் தீமைகளை அவர்களிடமிருந்து அகற்றி அவர்களின் நிலைமையை மேம்படுத்துகின்றான். (47:3)

✪ وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ ؕ وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ؕ وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ ۝

பொருள்: முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லாத் தூதர்களும் மரணமடைந்து விட்டனர். எனவே அவர் மரணமடைந்து விட்டாலோ, கொலை செய்யப்பட்டாலோ, நீங்கள் உங்கள் குதிக்கால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களோ? தமது குதிக்கால்களில் திரும்பிச் சென்று விடுவோரால் ஒருபோதும் அல்லாஹ்வுக்குச் சிறு இழப்பையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ், நன்றி செலுத்துவோருக்கு நிச்சயமாக நற்பலன் வழங்குவான். (3:145)

இந்த வசனத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பாக உறுதியான அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. முஹம்மதும் அல்லாஹ்வின் தூதராவார். அவர் தூதரை விட எவ்வகையிலும் மேலானவர் அல்லர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னர் தோன்றிய எல்லா தூதர்களும் மரணித்து விட்டனர். 'கலா' என்ற சொல் ஒரு பிரிவினர் தொடர்பாக ஒட்டுமொத்தமாக கூறப்படும்போது அதற்கு பயணிகள் கடந்து செல்வதைப் போன்று கடந்து செல்வது என்று பொருள் கொடுக்க முடியாது. மாறாக சென்று விட்டனர் என்பதன் கருத்து மரணித்து விட்டனர் என்பதாகும். எனவே, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் தூதராக இருந்தார்கள் என்றால் அவர்கள் கண்டிப்பாக வஃபாத் ஆகி விட்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

இறைவன் உங்களிடம் விரும்புவதெல்லாம்.... ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அவனது திருத்தூதர் என்றும், அவர்கள் காத்தமுல் அன்பியாவாகவும், எல்லா நபிமார்களையும் விட மிக மேலானவராகவும் இருக்கிறார்கள் என்று நம்புவதும் ஆகும்.

(கிஷ்தி நூஹ்)

**கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ் உடன்குடி

✪ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ ؕ وَالَّذِيْنَ مَعَهٗۤ اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ رُحَمَآءُ بَيْنَهُمْ تَرٰىهُمْ رُكَّعًا سُجَّدًا يَّبْتَغُوْنَ فَضْلًا مِّنَ اللّٰهِ وَرِضْوَانًا ؗ سِيْمَاهُمْ فِىْ وُجُوْهِهِمْ مِّنْ اَثَرِ السُّجُوْدِ ؕ ذٰلِكَ مَثَلُهُمْ فِى التَّوْرٰىةِ ۛۖ وَمَثَلُهُمْ فِى الْاِنْجِيْلِ ۛ كَزَرْعٍ اَخْرَجَ شَطْـَٔهٗ فَاٰزَرَهٗ فَاسْتَغْلَظَ فَاسْتَوٰى عَلٰى سُوْقِهٖ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَغِيْظَ بِهِمُ الْكُفَّارَ ؕ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ مِنْهُمْ مَّغْفِرَةً وَّاَجْرًا عَظِيْمًا ۝

பொருள்: முஹம்மது, அல்லாஹ்வின் தூதராவார். அவருடனிருப்-பவர்கள் நிராகரிப்பவர்களுக்கெதிரில் கடினமானவர்களும், தங்களுக்குள் மிக்க மென்மையாக நடந்து கொள்பவர்களு-மாவார்கள். அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் விருப்பத்தையும் தேடியவாறு குனிந்தும் சிரம்பணிந்தும் வணங்குபவர்களாக நீர் அவர்களைக் காண்கின்றீர். அவர்களின் (சிறப்புத் தன்மைக்குரிய) அறிகுறி அவர்களின் நெற்றியிலுள்ள சிரம்பணிதலின் அடையாளமாகும். இது தவ்ராத்தில் அவர்களைப் பற்றிய விளக்கமாகும். இன்ஜீலில் அவர்களுக்குள்ள உதாரணமானது அவர்கள் ஒரு வயலைப் போன்றவர்கள். அது முதலில் தன் தளிரை வெளிப்படுத்தி பின்னர் அது அடர்த்தியாகி விதைத்தவர்களை வியப்பிற்குள்ளாக்கும் விதத்தில், அது தனது தண்டின் மீது உறுதியாக நின்றது. இதன் விளைவாக நிராகரிப்பவர்கள் அவர்களைக் கண்டு பொறாமைப்படுவார்கள். அவர்களுள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்பவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான நற்பலனையும் வாக்களித்துள்ளான். (48:30)

இந்த வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் என்னென்ன நற்பண்புகள் கூறப்பட்டிருக்கின்றனவோ அவை அவர்களுடன் மட்டும் தொடர்புடையதாகக் கூறப்படவில்லை. மாறாக, உடனடியாக وَالَّذِيْنَ مَعَهٗ அவருடனிருப்பவர்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதாவது, பெருமானார் (ஸல்) அவர்களது சிறப்புகள் அன்னாருடன் இருப்பவர்களிடம் கூட ஊடுருவிச் செல்லும். இந்த சிறப்பம்சங்களில் முதலாவது அம்சம் اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ அவர்கள் நிராகரிப்பவர்களுக்கு எதிரில் கடினமானவர்களாக இருப்பர் என்பதாகும். இதன் கருத்து அவர்கள் நிராகரிப்பவர்கள் மீது தங்களது கடினமான உள்ளத்தின் காரணமாக கடுமையாக நடந்து கொள்வதில்லை. மாறாக, நிராகரிப்பின் தாக்கத்தை ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக அவ்வகையில் அவர்கள் கடினமானவர்களாக இருக்கின்றனர் என்று கூறப்பட்டிருக்-கின்றது. ஆனால் அவர்களது உள்ளம் கருணையால் நிரம்பியிருக்கும். அதன் காரணமாக நம்பிக்கை கொண்டவர்களில் ஒருவர் மற்றவருடன் கருணையுடனும் பரிவுடனும் நடந்து கொள்பவர்களாக இருப்பர். அவர்கள் ஜிஹாது செய்வதன் நோக்கம் இறைவனின் திருப்தியைப்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

ஈசா (அலை) உயிருடன் இருக்கையில் நமது நபி (ஸல்) மரணம் அடைவது அவர்களுக்கு இழுக்காகும். ஆகவே நீங்கள் ஈசாவின் மரணத்தை ஒப்புக் கொள்ளாதவரை நீங்கள் சுன்னத்தை கடைபிடிப்பவர்களும் அல்லர். குர்ஆனை கடைபிடிப்பவர்களும் அல்லர். (கிஷ்தி நூஹ்)

**ஜோதி அஸ்டின் மற்றும் குடும்பத்தினர்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

பெறுவதாகும். உலகச் செல்வங்களை சம்பாதிப்பது அவர்களது நோக்கம் அல்ல. அவர்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் ருகூ செய்தவாறும் ஸஜ்தா செய்தவாறும் குனிவர். அவனிடம் அருளை வேண்டுவர். அதாவது, இறைவனின் திருப்தி எந்த உலகச் செல்வத்துடன் இருக்கின்றதோ அத்தகைய செல்வத்தையே அவர்கள் வேண்டுவர்.

பெருமானார் (ஸல்) அவர்களது சமுதாயத்தில் பின்னவர்களது காலக்கட்டத்தில் வர வேண்டிய மஸீஹ் மற்றும் அவரை ஏற்றுக் கொண்டவர்களைப் பொருத்தவரையில் அவர்களுக்கான உதாரணம், படிப்படியாக வளர்கின்ற ஒரு பயிரைப் போன்றது என்று சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கின்றது. பிறகு அது அதன் தண்டின் மீது நிலையாக வலுப்பெற்று நிற்கின்றது. அதைப் பார்த்து அதை விதைத்தவர்கள் அதாவது மார்க்கத் தொண்டில் பங்கு பெறுபவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவர். இதன் விளைவாக நிராகரிப்பவர்களுக்கு அவர்கள் மீது இன்னும் அதிகமாக கோபம் வரும். அல்லாஹ் அவன் மீது உண்மையான நம்பிக்கை கொள்பவர்களுக்கும் அவனிடம் மன்னிப்பை வேண்டுபவர்களுக்கும் மகத்தான மன்னிப்பையும் கூலியையும் தருவதாக நற்செய்தி வழங்கியுள்ளான்.

✪ وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ

பொருள்: நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பினோம். (21:108)

✪ فَكَيْفَ اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍۢ بِشَهِيْدٍ وَّجِئْنَا بِكَ عَلٰى هٰٓؤُلَآءِ شَهِيْدًا

பொருள்: நாம் ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு சாட்சியைக் கொண்டு வரும்போதும், உம்மை அவர்களுக்குச் சாட்சியாகக் கொண்டு வரும்போதும் அவர்களின் நிலை எவ்வாறிருக்கும்? (4:42)

✪ يٰٓاَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمْ بُرْهَانٌ مِّنْ رَّبِّكُمْ وَاَنْزَلْنَآ اِلَيْكُمْ نُوْرًا مُّبِيْنًا

பொருள்: மக்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவானதொரு சான்று வந்து விட்டது. மேலும், நாம் உங்களுக்குத் தெளிவான ஓர் ஒளியினையும் இறக்கியுள்ளோம். (4:175)

✪ يٰٓاَيُّهَا النَّبِيُّ اِنَّآ اَرْسَلْنٰكَ شَاهِدًا وَّمُبَشِّرًا وَّنَذِيْرًا ۝ وَّدَاعِيًا اِلَى اللّٰهِ بِاِذْنِهٖ وَسِرَاجًا مُّنِيْرًا

பொருள்: நபியே! நிச்சயமாக நாம் உம்மை (உலகிற்குச்) சாட்சியாகவும், (நம்பிக்கை கொண்டவர்களுக்கு) நற்செய்தி நல்குபவராகவும், (நிராகரிப்பவர்களுக்கு) எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பியுள்ளோம். மேலும், அல்லாஹ்வின் பக்கம் அவன் கட்டளையின்படி அழைப்பவராகவும், ஒளி வீசும் சூரியனாகவும் (அனுப்பியுள்ளோம்). (33:46–47)

✪ قَدْ اَنْزَلَ اللّٰهُ اِلَيْكُمْ ذِكْرًا ۝ رَّسُوْلًا يَّتْلُوْا عَلَيْكُمْ اٰيٰتِ اللّٰهِ مُبَيِّنٰتٍ لِّيُخْرِجَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ مِنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ

பொருள்: அல்லாஹ் உங்களுக்கு அறிவுரையை அருளியுள்ளான். நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்வோரை இருள்களிலிருந்து ஒளிக்குக் கொண்டு செல்வதற்காகவே தெளிவுபடுத்தும் அல்லாஹ்வின் வசனங்களை உங்களுக்கு ஓதிக் காட்டும் தூதரை அனுப்பினான். (65:11,12)

★★★★

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

எவர் முழுமையாகத் தன் எஜமானிடத்தில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு அதன் மூலம் இறைவனிடமிருந்து நபிப் பட்டத்தை பெறுகின்றாரோ அவர் 'கத்முன் நுபுவ்வத்' –திற்கு ஒருபோதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவர் அல்லர். (கிஷ்தி நூஹ்)

**மர்ஹூமா நதீரா பேகம் மற்றும் குடும்பத்தினர் (சாத்தான்குளம்)**

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

கீழே தருகின்றோம். அவற்றில் அன்னார் காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு இறைஞானமிக்க விளக்கத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேற்றைப் பெறுவது சாத்தியமற்றதும் தடை செய்யப்பட்டதுமாகும் என்பது காத்தமுல் அன்பியா என்பதன் ஒரு பொருளாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருக்கின்றார்கள் என்று கூறப்பட்டிருப்பது அவர்களுக்கு பிறகு இறைவனுடன் உரையாடுவதற்கான வாசல் அடைக்கப்பட்டு விட்டது என்ற பொருளில் அல்ல. இதுவே அதன் பொருளாக இருந்திருந்தால் இந்த சமுதயாம் ஷய்த்தானைப் போன்று இறைவனை விட்டு விட்டு தொலைவில் சென்று விட்ட கைவிடப்பட்ட ஒரு சாபத்திற்குரிய சமுதாயமாக இருந்திருக்க வேண்டும். மாறாக, நேரடியாக இறைவனிடமிருந்து வஹியின் அருளைப் பெறுவது நிறுத்தப்பட்டிருக்கின்றது என்பதே இதன் பொருளாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் இந்த அருளை ஒருவர் பெறுவது சாத்தியமற்றதும் தடை செய்யப்பட்டது –மாகும். இது சுயமே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெருமையாகும். அதாவது அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் இந்த அருள் கிடைக்கின்றது. அதாவது ஒரு நபர் முழுமையான முறையில் அவர்களைப் பின்பற்றுபவராகும்போது இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேறு அவருக்கு கிடைக்கின்றது. (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5 பக்கம் 353)

### மகத்தான ஆன்மீகத் தந்தையாக இருக்கின்ற தகுதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

கத்முன்னுபுவ்வத் என்பதன் நுட்பமான விளக்கம், இறைவன் எந்த இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருப்பதாக வாக்குறுதி அளித்துள்ளானோ அதே இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் தனது ஆன்மீகத்தின் அடிப்படையில் அந்த நல்லடியார்களுக்குத் தந்தையாகவும் திகழ்கின்றார்கள் என்று கூறியுள்ளான். அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக ஆன்மாக்கள் முழுமையடைகின்றன. இறைவன் புறமிருந்து வஹியும் அவனுடன் உரையாடும் நற்பேறும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இறைவன் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களில் எந்தவோர் ஆண் மகனுக்கும் தந்தையல்ல. ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கு காத்தமாகவும் இருக்கின்றார்கள். லாகின் என்ற சொல் அரபி மொழியில் இஸ்தத்ராகிற்காக வருகின்றது. அதாவது முன்னர் சொல்லப்பட்ட குறையை நீக்குவதற்காக வருகின்றது. எனவே இந்த வசனத்தின் முதல் பகுதியில் எந்த விஷயத்தில் குறை ஏற்பட்டு விட்டதாக ஆக்கப்பட்டிருக் –கிறதோ அதாவது எந்த விஷயம் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இல்லை என்று கூறி மறுக்கப்பட்டிருக்கின்றதோ அவ்விஷயமானது அன்னார் பௌதீகமான முறையில் ஓர் ஆண் மகனுக்கு தந்தையாக இருப்பதாகும். எனவே லாகின் என்ற சொல்லின் மூலமாக அத்தகைய குறை ஏற்பட்டு விட்ட ஒரு விஷயம் பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியாவாக ஆக்கியதன் மூலமாக ஈடுசெய்யப்பட்டிருக் –கின்றது. அதன் பொருள் இதுவாகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இறைவனிடமிருந்து நேரடியாக நபித்துவத்தின் அருள்களைப் பெறுவது துண்டிக்கப்பட்டு விட்டது. இப்போது தமது செயல்களில் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதின் முத்திரையை வைத்திருக்கின்ற நபருக்கு மட்டுமே நபித்துவத்தின் சிறப்பு

(தொடர்ச்சி 5 -வது பக்கம்...)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் தம்மை மாய்த்துக் கொள்ளாத வரை எந்தவொரு மனிதரும் உண்மையான நன்மை செய்பவராகவோ, இறைவனின் திருப்தியைப் பெறக்கூடியவராகவோ ஆக முடியாது. (மல்ஃபூஸாத்)

**முஹம்மது ஹுஸைன் (பழனி)**

# ஸலவாத் ஓதுவதன் முக்கியத்துவமும் அருள்களும்

## ஸலவாத் ஓதுவதன் முக்கியத்துவமும் அருள்களும்

✪ عَنْ اَبِیْ هُرَیْرَةَ رَضِیَ اللهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ قَالَ مَا مِنْ اَحَدٍ یُسَلِّمُ عَلَیَّ اِلَّا رَدَّ اللهُ عَلَیَّ رُوْحِیْ اَرُدُّ عَلَیْهِ السَّلَامَ۔

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவர் என் மீது ஸலவாத் ஓதுவாரோ அதற்குப் பதில் கூறுவதற்காக அல்லாஹ் என் ஆன்மாவை திரும்ப அனுப்புவான். அதன் மூலம் அவரது ஸலாத்திற்கு என்னால் பதில் கூற முடியும் என்று கூறினார்கள். (அபூதாவூது கிதாபுல் மனாஸிக் பாபு ஸியாரதுல் குபூர்)

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுபவருக்கு அந்த ஸலவாத்திற்காக எத்தகைய நற்கூலி கிடைக்கும் என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் சுயமே அவர் கூறிய ஸலாத்திற்கு பதில் கூறுவது போன்று அது இருக்கும்.

### தருது ஓதுவதற்கான வழிமுறை

✪ عَنْ كَعْبِ بْنِ عُجْرَةَ رَضِیَ اللهُ عَنْهُ قَالَ : خَرَجَ عَلَیْنَا النَّبِیُّ صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ فَقُلْنَا یَا رَسُوْلَ اللهِ قَدْ عَلِمْنَا كَیْفَ نُسَلِّمُ عَلَیْكَ فَكَیْفَ نُصَلِّیْ عَلَیْكَ ؟ قَالَ: قُوْلُوْا اَللّٰهُمَّ صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَّعَلٰی اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّیْتَ عَلٰی اٰلِ اِبْرَاهِیْمَ اِنَّكَ حَمِیْدٌ مَّجِیْدٌ۔ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰی مُحَمَّدٍ وَّعَلٰی اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰی اٰلِ اِبْرَاهِیْمَ اِنَّكَ حَمِیْدٌ مَّجِیْدٌ۔

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்த சமயத்தில் நாங்கள் அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்கள் மீது ஸலாம் எவ்வாறு கூறுவது என்பது எங்களுக்கு தெரியும். ஆனால் உங்கள் மீது தருது எவ்வாறு ஓதுவது என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று நாங்கள் கூறினோம். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் என் மீது இவ்வாறு ஸலவாத் ஓதுங்கள். அல்லாஹ்வே! நீ எவ்வாறு இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் கருணை காட்டினாயோ அவ்வாறே முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் கருணை காட்டுவாயாக. அல்லாஹ்வே! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் எவ்வாறு அருள் புரிந்துள்ளாயோ அவ்வாறே முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் அருள் புரிவாயாக. நீ புகழுக்குரியவனும் மகிமைக்குரியவனுமாவாய். (முஸ்லிம் கிதாபுஸ்ஸலாத் பாபு சலாத்தி அலன்னபிய்யி புகாரி.)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

மூஸா உடைய சமுதாயத்தில் இப்னு மர்யம் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருந்ததைப்போல் முஹம்மதிய்ய சமுதாயத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக நான் இருக்கிறேன். (கிஷ்தி நூஹ்)

**மர்ஹூம் முஹம்மது யூசு:ப் மற்றும் குடும்பத்தினர்**
**[உடன்குடி]**

**Classic Mobile's & Watch,**
**Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road, Tiruppur.
Ph: 95666 47717

### உங்களில் எவராவது தொழுகையில் துஆ செய்யும்போது முதலில் உங்களது இறைவனை புகழ வேண்டும். பிறகு நபி கரீம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும்

✪ عَنْ فَضَالَةَ بْنِ عُبَیْدٍ رَضِیَ اللهُ عَنْهُ قَالَ : سَمِعَ رَسُوْلُ اللهِ صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ رَجُلًا یَدْعُوْ فِیْ صَلٰوتِهٖ لَمْ یُمَجِّدِ اللهَ تَعَالٰی ، وَلَمْ یُصَلِّ عَلَی النَّبِیِّ صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ فَقَالَ رَسُوْلُ اللهِ صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ : عَجِلَ هٰذَا ثُمَّ دَعَاهُ فَقَالَ لَهٗ ۔ اَوْ لِغَیْرِهٖ ۔ اِذَا صَلّٰی اَحَدُكُمْ فَلْیَبْدَأْ بِتَحْمِیْدِ رَبِّهٖ سُبْحَانَهٗ وَالثَّنَاءِ عَلَیْهِ ثُمَّ یُصَلِّیْ عَلَی النَّبِیِّ صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ ثُمَّ یَدْعُوْ بَعْدُ بِمَا شَاءَ۔

ஹஸ்ரத் ஃபுஸாலா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரு நபர் தொழுகையில் துஆ செய்து கொண்டிருப்பதைக் கேட்டார்கள். அவர் அல்லாஹ்வைப் புகழவுமில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதவுமில்லை. அதைப் பார்த்த பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நபரை அழைத்தார்கள். மேலும், உங்களில் எவராவது தொழுகையில் துஆ செய்யும்போது, முதலில் அவர் தனது இறைவனைப் புகழ வேண்டும். பிறகு நபி கரீம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும். அதற்குப் பிறகு உங்களது விருப்பத்திற்கேற்ப துஆ செய்ய வேண்டும் என்று கூறினார்கள். (அபூதாவூது கிதாபுஸ் ஸலாத் பாபுத் துஆ)

### நிரந்தரமாக இனி வருங்காலத்தில் மக்கள் நன்றி தெரிவிக்கும் வகையில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓத வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மையையும் நன்றியுணர்வையும் பாருங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லா வகையான தீய விஷயங்களையும் எதிர்த்து நின்றார்கள். பல்வேறு வகையான துன்பங்களையும் துயரங்களையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால், அவற்றை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இதே உண்மை மற்றும் நன்றியுணர்வின் காரணமாகவே அல்லாஹ் அவர்கள் மீது அருள் புரிந்தான். எனவே, அல்லாஹ் கூறினான்:

اِنَّ اللهَ وَمَلٰٓئِكَتَهٗ یُصَلُّوْنَ عَلَی النَّبِیِّ ؕ یٰٓاَیُّهَا الَّذِیْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَیْهِ وَسَلِّمُوْا تَسْلِیْمًا

அல்லாஹ்வும் இந்த நபிக்கு அருள் புரிகின்றான். வானவர்கள் அவருக்காக அருளை வேண்டுகின்றனர். நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபிக்கு எப்போதும் அருள் புரியுமாறும் சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்கள் பிராத்தனை செய்யுங்கள். இந்த வசனத்தில் இருந்து பெருமானார் (ஸல்) அவர்களது செயல்கள் எத்தகையதாக இருந்தனவென்றால் அல்லாஹ் அவற்றைப் புகழ்வதற்கும் அல்லது அன்னாரது பண்புகளை குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் கொண்டு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

இன்று முழு மனித இனத்திற்கும் உயிருள்ள நபியாக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மட்டுமே இருக்க முடியும் (மல்ஃபூஸாத்)

**சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

வருவதற்காக எந்தவொரு குறிப்பிட்ட சொல்லையும் பயன்படுத்தவில்லை. சொற்கள் கிடைத்திருக்கும்; ஆனால் சுயமே அவன் அவற்றைப் பயன்படுத்தவில்லை. அதாவது, அன்னாரது நற்செயல்களைப் புகழ்வது குறிப்பிட்ட எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இறைவன் இதைபோன்ற வசனத்தை வேறு ஒரு நபியின் மகிமையை வெளிப்படுத்தும் வகையில் பயன்படுத்தவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களது ஆன்மாவில் எத்தகைய உண்மையும் நன்றியுணர்வும் இருந்தது என்றால், மேலும் அவர்களது செயல்கள் இறைவனது பார்வையில் எந்த அளவு விருப்பத்திற்குரியவையாக இருந்தன என்றால், நிரந்தரமாக இனி வருங்காலத்தில் மக்கள் நன்றி தெரிவிக்கும் வகையில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 23)

## இறைவனின் ஒளிகளின் அருளைப் பெறுவதற்கு அஹ்லே பைத் அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது குடும்பத்திலுள்ளவர்கள் மீதுள்ள அன்பிற்கும் கூட மிகவும் மகத்தான பங்கு இருக்கின்றது

ஓர் இரவில் இந்த எளியவன் எந்த அளவு அதிகமாக தரூது ஓதினேன் என்றால், உள்ளமும் உயிரும் அதனால் நறுமணம் பெற்றது. அதே இரவில் நான் கனவில் பார்த்தேன். ஒளிமயமான தண்ணீரின் வடிவில் உள்ள ஒளியின் குடங்களை இந்த எளியவனின் வீட்டில் சிலர் கொண்டு வருகின்றனர். அவர்களின் ஒருவர், இவை நீர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஓதிய அதே (ஸலவாத்தின்) அருள்களாகும் என்று கூறினார். அவ்வாறே வியக்கத்தக்க இன்னொரு சம்பவமும் எனக்கு நினைவிற்கு வருகின்றது. அதாவது, ஒருமுறை இல்ஹாம் இறங்கியது. அதன் பொருள் இதுவாகும். அதாவது விண்ணுலகில் உள்ள மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர். அதாவது, இறைவனின் நாட்டம் மார்க்கத்தை உயிர்ப்பிப்பதற்காக உணர்வுடன் இருந்தது. ஆனால், இதுவரை விண்ணுலகில் உயிர்ப்பிக்கின்ற நபராக யார் நியமிக்கப் –பட்டுள்ளார் என்பது தெரியாமல் இருந்தது. இதனால்தான் அவர்கள் கருத்து வேறுபாட்டில் இருந்தனர். இந்தத் தருணத்தில் மக்கள் உயிர்ப்பிக்கின்ற ஒருவரைத் தேடித் திரிவதை நான் பார்த்தேன். ஒரு நபர் இந்த எளியவனுக்கு முன்னால் வந்து என்னைச் சுட்டிக் காட்டியவாறு هٰذَا رَجُلٌ يُّحِبُّ رَسُوْلَ اللّٰهِ அதாவது, அல்லாஹ்வின் தூதர் மீது அன்பு வைத்துள்ள மனிதர் இவர்தான் என்று கூறினார். இந்தப் பதவியைப் பெறுவதற்கான மகத்தான நிபந்தனை தூதர் மீதுள்ள அன்பாகும் என்பதே இந்தக் கூற்றின் பொருளாகும். அது இந்த நபரிடம் உண்மையிலேயே இருக்கின்றது. அவ்வாறே மேற்கண்ட இல்ஹாமில் பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் மீது ஸலவாத் ஓதுமாறு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. இதிலும் கூட இந்த இரகசியம்தான் உள்ளது. அதாவது, இறையொளிகளின் அருளைப் பெறுவதற்கு அஹ்லே பைத் – அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது குடும்பத்தில் உள்ளவர்கள் மீதுள்ள அன்பிற்கும் கூட மகத்தான பங்கு இருக்கின்றது. எனவே, எந்த நபர் ஏக இறைவனின் நெருக்கத்தைப் பெற்றவர்களில் நுழைந்து விடுகின்றாரோ அவர்கள் இதே தூயவர்களின் வாரிசாகி விடுகின்றனர். மேலும், எல்லா அறிவுகளையும், ஞானங்களையும் பெற்றுக் கொள்வதில் அவர்களின் வாரிசுகளாகத் திகழ்கின்றனர். (பராஹீனே அஹ்மதிய்யா பக்கம் 576 அடிக்குறிப்பிற்குக் கீழுள்ள அடிக்குறிப்பு எண்:3)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

எதிரியிடம் கூட எல்லை மீறிய கடினம் காட்டக்கூடாது என்பதே எனது கொள்கையாகும். நீங்கள் எவரையும் உங்களது எதிரியாகக் கருத வேண்டாம்..... இந்த வெறுப்பு, காழ்ப்புணர்ச்சியின் பழக்கத்தை முற்றிலும் விட்டு விடுங்கள். (மல்ஃபூஸாத்)

**முஹம்மது ஆதில்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூளூர்.

*(3 -வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

கிடைக்கும். இவ்வகையில் அந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகனாகவும் அவர்களது வாரிசாகவும் இருப்பார்.

சுருக்கமாக, இந்த வசனத்தில் ஒரு வகையில் பெருமனார் (ஸல்) அவர்கள் தந்தையாக இருப்பது மறுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இன்னொரு வகையில் அவர்கள் தந்தையாக இருப்பது ஏற்றுக் கூறப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் إِنَّ شَانِئَكَ هُوَ الْأَبْتَرُ நிச்சயமாக உமது பகைவனே ஆண் சந்ததியற்றயவன் (108:4) என்ற வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனை நீக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு கூறப்பட்டுள்ளது. (ரிவியூ பர் முபாஹிஸா பட்டாலவி சக்டாலவி. ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 213)

## நபியை நபியாக ஆக்குவதில் என்ன அர்த்தம் இருக்கின்றது? நபி அல்லாதவரை நபியாக ஆக்குவது பெருமானார் (ஸல்) அவர்களின் முழுமையான அருளுக்கு ஆதாரமாக இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இறைவனிடம் இருந்து நேரடியாகக் கிடைக்கின்ற நிரந்தரமான நபித்துவத்தின் வாசல் கியாமத் வரை அடைக்கப்பட்டு விட்டது. எதுவரை ஒருவர் இந்த உம்மத்தைச் சார்ந்தவர் என்பதன் உண்மை நிலையை தனக்குள் வைத்திருக்கவில்லையோ, ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அடியாராக நான் இருக்கின்றேன் என்று கருதவில்லையோ அதுவரை எவ்வகையிலும் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தோன்ற முடியாது. பிறகு இந்த நிலைமையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்திலிருந்து இறக்குவதும், பிறகு அவரைப் பற்றி அவர் இந்த உம்மத்தைச் சார்ந்தவர் ஆவார் என்றும், அவரது நபித்துவம் பெருமானார் (ஸல்) அவர்களது முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து பெறப்பட்டதும் அதிலிருந்து அருளைப் பெற்றதுமாகும் என்று கூறுவது எந்த அளவு இட்டுக்கட்டி கூறப்படும் விஷயமாகவும் செயற்கையான விஷயமாகவும் இருக்கின்றது? எவர் முதலிலேயே நபியாக ஆக்கப்பட்டு விட்டாரோ அவர் தொடர்பாக அவரது நபித்துவம் பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் விளக்கிலிருந்து பயனடைந்த நபித்துவமாகும் என்று கூறுவது எவ்வாறு சரியாக இருக்க முடியும்? அவரது நபித்துவம் முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து பயனடைந்த நபித்துவமாக இல்லையென்றால் பிறகு அவர் எந்த பொருளில் இந்த உம்மத்தைச் சார்ந்தவர் என்று அழைக்கப்படுவார்? தான் பின்பற்றுகின்ற நபியின் மூலமாக ஒவ்வொரு சிறப்பையும், தான் பெற்றுக் கொள்ளாத வரை உம்மத்தி என்ற சொல் ஒருவருக்குப் பொருந்தாது. பிறகு எந்த நபர் தன்னை நபி என்று கூறுகின்ற இவ்வளவு பெரிய சிறப்பை சுயமே பெற்றிருக்கின்றாரோ அவர் எவ்வாறு இந்த உம்மத்தைச் சார்ந்தவராக இருக்க முடியும்?

மாறாக, அவர்கள் நிரந்தரமான முறையில் நபியாக இருப்பார். அப்படிப்பட்டவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அடியெடுத்து வைப்பதற்கு இடமில்லை. முதலில் இறைவனிடம் இருந்து நேரடியாக வழங்கப்பட்ட அவரது நுபுவ்வத் அவரை விட்டு அகற்றப்பட்டு விடும். இப்போது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக முற்றிலும் புதிய நுபுவ்வத் அவருக்குக் கிடைக்கும் என்று நீங்கள் கூறுவதாக இருந்தால் பிறகு இறை வசனத்தில் குறிப்பிடப்பட்டதற்கேற்ப இந்நிலையில் தலைசிறந்த சமுதாயம் என்று அழைக்கப்படுகின்ற இந்த சமுதாயத்தைச் சார்ந்த ஒரு நபருக்குதான் முற்றிலும் பெருமானார் (ஸல்) அவர்களைடப் பின்பற்றுவதன் மூலம் சாத்தியமுள்ள இந்த உயர் தகுதியை அடைவதற்கான தகுதி இருக்கின்றது. மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்தில் இருந்து இறக்குவதற்கான எந்த தேவையும்

*(தொடர்ச்சி 7 -வது பக்கம்...)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

உயர் நல்லொழுக்கங்களையும், நன்மைகளையும் மேலும் இறைவனது நெருக்கத்தையும் பெறத் தேவையான ஊடகமாகவும், முன்மாதிரியாகவும், போதனை செய்பவராகவும் இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை வைத்துள்ளான். அன்னாரை முழுமையாகப் பின்பற்றுவதில் அவை அடங்கியுள்ளன. (இஸாலே அவ்ஹாம்)

**அண்ணல் அஹ்மது மற்றும் குடும்பத்தினர்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான மிகவும் மேலான மகிமை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்கள்

### நிலையான ஆத்மீக வாழ்வுடைய இறைதூதர் ஆற்றல் மற்றும் தூய்மை ஆகியவற்றின் அரியணையில் அமர்ந்திருப்பவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் ஆவார்கள்

பூமியில் வாழும் மனித இனமே! மேற்கிலும் கிழக்கிலும் வாழும் ஆத்மாக்களே! நான் மிக அழுத்தமாக இதன் பக்கம் அழைக்கின்றேன். அதாவது இப்பொழுது பூமியில் உண்மையான நெறி இஸ்லாம் மட்டுமே. திருக்குர்ஆன் கூறும் இறைவனே உண்மையான இறைவன்; நிலையான ஆத்மீக வாழ்வுடைய இறைதூதர்; ஆற்றல் மற்றும் தூய்மை ஆகியவற்றின் அரியணையில் அமர்ந்திருக்கும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களே ஆவார். அவர்களின் ஆன்மீக வாழ்வு மற்றும் தூய கம்பீரத்திற்கு நமக்கு இந்த ஆதாரம் கிடைத்துள்ளது. அவரைப் பின்பற்றுவது மற்றும் அவர் மீதுள்ள அன்பினால் நாம் பரிசுத்த ஆவி, இறைவனுடன் உரையாடுதல், விண்ணின் அடையாளங்கள் ஆகியவற்றின் அருட்கொடையைப் பெற்றுள்ளோம்.

(தரியாக்குல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 11)

### தூய மற்றும் முழுமையான ஓரிறைமை பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாகவே கிடைக்கின்றது

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும், சாந்தியும் அவருக்கு இருப்பதாக) தீர்க்கதரிசி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட தீர்க்கதரிசியாவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது.

அவருடைய தூய குணயில்புகளைக் கணக்கிடுவது மனிதனின் வேலையன்று. பிரித்தறிய வேண்டிய முறையில் அவரின் உயர் பதவியினைப் பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே! உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் அதே உலகிற்குக் கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே. அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவரின் உள்ளத்தின் ரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் - முன்னவர் பின்னவர் யாவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவரின் குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். அவரே ஒவ்வோர் அருளின் தலையூற்றாக இருக்கின்றார். எந்த நபர் அவரது அருள்களை ஏற்றுக் கொள்ளாமல் ஏதேனும் சிறப்பைப் பெற்றிருப்பதாக வாதம் செய்கின்றாரோ அவர் மனிதர் அல்லர். மாறாக, அவர் ஷய்த்தானின் சந்ததியாக இருக்கின்றார். ஏனென்றால், ஒவ்வொரு சிறப்பிற்கான சாவியும் அவருக்கு தரப்பட்டிருக்கின்றது. இறை ஞானத்தின் ஒவ்வொரு கருவூலமும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எவர் அவர் மூலமாக எதையும் பெறவில்லையோ அவர் தொன்மையிலிருந்தே இழப்பிற்குரியவராவார். நாம் எம்மாத்திரம்? நமது உண்மை நிலை என்ன? உண்மையான ஓரிறைமையை நாம் இந்த நபியின் மூலமாக பெற்றோம் என்ற விஷயத்தை நாம் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் நாம் இறைவனின் அருளுக்கு நன்றிகேடு காட்டியவர்களாக ஆகி விடுவோம். மேலும் உயிருள்ள இறைவனை நாம் அந்த முழுமை பெற்ற நபியின் மூலமாகவே அடையாளம் கண்டு கொண்டோம். அவரது ஒளியின் மூலமாகவே அது நமக்கு கிடைத்தது. அந்த இறைவனின் முகத்தைப் பார்ப்பதற்குக் காரணமாக இருக்கின்ற இறைவனுடன் உரையாடுகின்ற அந்த நற்பேறு அந்த மகத்தான நபியின் மூலமாகவே நமக்கு கிடைத்தது. அந்த சூரியனின் நேர்வழியின் கிரணங்கள் வெயிலைப் போன்று நம்மீது படிகின்றது. நாம் அதற்கு எதிரில் நிற்கின்ற அந்த நேரம் வரை நாம் ஒளிமயமானவர்களாக இருக்க முடியும்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 115-118)

### நமது நபி (ஸல்) அவர்கள் கம்பீரமான மற்றும் மென்மையான இரு தோற்றங்களின் தொகுப்பாக இருக்கின்றார்கள்

நமது நபி (ஸல்) அவர்கள் கம்பீரமான மற்றும் மென்மையான இரு தோற்றங்களின் தொகுப்பாக இருக்கின்றார்கள். மக்கா வாழ்க்கை மென்மையின் வடிவத்தில் இருந்தது. மதீனாவின் வாழ்க்கை கம்பீரத்தின் வடிவத்தில் இருந்தது. பிறகு இந்த இரு பண்புகளும் உம்மத்திற்காக எவ்வாறு பங்கிடப்பட்டிருக்கின்றது என்றால் சஹாபா ரலியல்லாஹு அன்ஹும் அவர்களுக்கு கம்பீரமான வடிவத்திலுள்ள வாழ்க்கை வழங்கப்பட்டது. மேலும் மென்மையான வடிவத்திலுள்ள வாழ்க்கைக்கென்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ், பெருமானார் (ஸல்) அவர்களின் தோற்றமாக இருக்கின்றார்.

(அர்பயீன் பக்கம் 13 எண்.4)

### மிக உயரிய தகுதியிலுள்ள தூய்மை மற்றும் ஞானம் நிறைந்த போதனையை வழங்குபவர்

அனைத்து மார்க்கங்களிலும் இஸ்லாம் மார்க்கமே உண்மையானது என்று எனக்கு கூறப்பட்டிருக்கின்றது. எல்லா நேர்வழிகளை விடவும் திருக்குர்ஆன் கூறுகின்ற நேர்வழி மட்டுமே எவ்வித குறையுமில்லாமல் முழுமை பெற்ற தகுதியில் இருக்கக் கூடியதாகவும் மனித கலப்படத்திலிருந்து தூய்மையானதாகவும் இருக்கின்றது என்று எனக்கு கூறப்பட்டிருக்கின்றது. எல்லா தூதர்களிடம் முழுமையான போதனையை வழங்குபவரும் உயரிய தகுதியிலுள்ள தூய்மை மற்றும் ஞானம் நிறைந்த போதனையை வழங்குபவரும் மனிதர்களுக்குரிய சிறப்புகளுக்கு தமது வாழ்க்கையின் மூலமாக உயர்ந்த முன்மாதிரியைக் காட்டக் கூடியவர் நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள். (அர்பயீன் தொகுதி 1 பக்கம் 7,8)

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவது மனிதனை இறைவனது நேசத்திற்குரியவனாக ஆக்கி விடுகின்றது

அல்லாஹ் சுயமே எவரையாவது நேசிப்பதை அத்தகைய நபர் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக ஆக்கி விட்டான். இது எனது சொந்த அனுபவமாகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவது அவர்கள் மீது அன்பு கொள்வதும் இறுதியில் மனிதனை இறைவனது நேசத்திற்குரியவனாக ஆக்கி விடுகின்றது. அது எவ்வாறென்றால் சுயமே அவனே அவரது உள்ளத்தில் இறையன்பின் ஓர் உருக்கத்தை உருவாக்கி விடுகின்றான். அப்போது அந்த நபர் எல்லா விஷயங்களிலிருந்தும் உள்ளத்தை விலக்கி வைத்து விட்டு இறைவன் பக்கம் குனிகின்றார். மேலும் அவரது அன்பும் ஆர்வம் இறைவனுக்காக மட்டுமே எஞ்சி நிற்கின்றது. அப்போது இறையன்பின் ஒரு குறிப்பான தோற்றம் அவர் மீது விழுகின்றது. அவருக்கு பேரன்பு மற்றும் நேசத்தின் முழுமையான வடிவத்தை வழங்கி வலுவான ஆற்றலுடன் அது அவரை தன் பக்கம் ஈர்த்துக் கொள்கின்றது. அப்போது மன இச்சைகளின் மீது அவர் வெற்றி பெற்று விடுகின்றார். அவருக்கு ஆதரவாகவும் அவருக்கு உதவி செய்யும் வகையிலும் ஒவ்வொரு விஷயத்திலும் இறைவனது வழக்கத்திற்கு அப்பாற்பட்ட செயல்கள் அடையாளங்களின் வடிவில் அவர் மீது வெளிப்படுகின்றன.

(ஹகீகத்துல் வஹி பக்கம் 66)






### தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த தூதர் எப்போதும் உயிருடன் இருக்கின்றார்

மனித இனத்திற்கு பூமியின் மேற்பரப்பில் இப்போது திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேதமும் இல்லை. ஆதமின் மக்களுக்கு முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது எந்தத் தூதரும், பரிந்துரையாளரும் இல்லை. எனவே ஆற்றலும் கம்பீரமுமிக்க அந்த் தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயலுங்கள். பிறருக்கு அவரை விட எவ்வகை பெருமையும் கொடுக்காதீர்கள். இதனால் நீங்கள் வானில் மீட்புக்குரியவராக எழுதப்படுவீர்கள். மேலும், நினைவில் கொள்ளுங்கள். மீட்பு என்பது மரணத்திற்குப் பின்னர் நிகழ்வதன்று; மாறாக, இவ்வுலகில் தன் ஒளியைக் காட்டுவதே உண்மையான மீட்பாகும்.

மீட்பு கிடைக்கப் பெற்றவர் எவர்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்றும், அவனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் ஒருவரே என்றும், வானத்தின் கீழ் அம்மாநபியை விட மேலான தகுதியினைப் பெற்றவர் வேறு எவரும் இல்லை என்றும், திருக்குர்ஆனை விட உயர்ந்ததொரு மறை இல்லையென்றும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர என்றென்றும் கொள்கையாலும் கோட்பாடாலும் வேறெவரும் உயிர் வாழுவதை இறைவன் விரும்பவில்லை என்றும் உறுதியாக நம்புபவரே மீட்பு பெற்றவர் ஆவர். (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 14)

(5 -வது பக்கத்தின் தொடர்ச்சி...)

இல்லை. ஏனென்றால், இந்த உம்மத்தைச் சார்ந்த ஒருவருக்கு முஹம்மதிய்ய ஒளிகளின் மூலம் நபித்துவத்தின் சிறப்புகள் கிடைக்க முடியுமென்றால் பிறகு இந்நிலையில் ஒருவரை வானத்திலிருந்து இறக்குவது உண்மையிலேயே உரிமையுள்ள ஒருவருக்கு அவருக்குரிய உரிமையை வழங்காமல் அதனை வீணாக்குவதாக ஆகி விடும். இந்த உம்மத்தை சார்ந்த ஒருவருக்கு அருளை எட்ட வைப்பதிலிருந்து யார் தடையாக இருக்க முடியும்?

அதன் மூலமாக முஹம்மதிய்ய அருளின் முன்மாதிரியானது எவருக்கும் சந்தேகத்திற்குரியதாக இருக்கக் கூடாது. ஏனென்றால், நபியை நபியாக ஆக்குவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? உதாரணமாக, ஒரு நபர், தான் தங்கத்தை உருவாக்குவதாக வாதம் செய்கின்றார். அதற்காக தங்கத்தின் மீதே ஒரு எலும்பைப் போட்டு விட்டு, பாருங்கள்! இது தங்கமாக மாறி விட்டது என்று கூறினால் அதனால் அவர் ஒரு இராசயண நிபுணர் என்பதை நிரூபித்து விட முடியுமா?

இந்த உம்மத்தைச் சார்ந்த ஒருவர் மிகவும் உழைத்தவாறு பெருமனார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக அந்தத் தகுதி அவரிடம் உருவாகுவதில்தான் பெருமானார் (ஸல்) அவர்களது அருள்களின் சிறப்பு அடங்கி இருக்கின்றது. அது அல்லாமல் முதலிலேயே நபியாக ஆக்கப்பட்ட ஒருவரை இந்த உம்மத்தைச் சார்ந்தவராக ஆக்குவதும், பிறகு அவருக்கு கிடைத்திருக்கும் நபித்துவத்தின் அந்தஸ்தானது சுயமே அவருக்குக் கிடைத்ததல்ல. மாறாக, அவர் இந்த உம்மத்தைச் சார்ந்தவராக இருப்பதே இதற்கு காரணமாகும் என்று கற்பனையாகக் கருதுவதும் எந்த அளவு அடிப்படை இல்லாத ஏமாற்று வேலையாக இருக்கின்றது? (ரிவியூ பர் முபாஹிஸா பட்டாலவி சக்டாலவி. ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 214)

### وَلٰكِنۡ رَّسُوۡلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ என்ற வசனத்திலுள்ள ஒரு முன்னறிவிப்பு

இந்த வசனத்தில் ஒரு முன்னறிவிப்பு இருக்கின்றது. இதைப் பற்றிய அறிவு நமது எதிரிகளுக்கு இல்லை. அது இதுவாகும். அதாவது அல்லாஹ் இந்த வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முன்னறிவிப்புகளின் வாசல் கியாமத் வரை அடைக்கப்பட்டு விட்டது என்று அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகின்றான். இப்போது எந்த ஒரு இந்துவும் அல்லது யூதரும் அல்லது கிறித்தவரும் அல்லது பெயரளவிலுள்ள ஒரு முஸ்லிம் நபி என்ற சொல்லை தன்னுடன் தொடர்புடுத்திக் கூறி அதை (தான் நபியாக இருப்பதை) நிரூபிக்க முடியாது. நபித்துவத்தின் எல்லா வாசல்களும் அடைக்கப்பட்டு விட்டன. ஆனால், சித்தீக்கின் வாழ்க்கையின் ஒரு வாசல் திறந்திருக்கின்றது. அதாவது அது தூதர் மீதுள்ள அன்பில் தன்னை மாய்த்துக் கொள்வதாகும். எவர் இந்த வாசலின் வழியாக இறைவனுக்கு அருகில் வருகின்றாரோ அவர் மீது நிழலான முறையில் முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் அதே போர்வை போர்த்தப்படுகின்றது. (எக் கல்தீ கா இஸாலா. ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 207)

### பெருமானார் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்பதற்கான வலுவான ஆதாரம்

அவன் (அதாவது அல்லாஹ்) ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு நபரை நியமிக்கின்றான். அவர் இஸ்லாத்தை மரணிப்பதிலிருந்து காப்பாற்றுகின்றார். அதற்கு புதிய வாழ்க்கையை வழங்குகின்றார். உலகில் உள்ளவர்களை அவர்களிடம் உருவாகின்ற தவறுகள், பித்அத்துகள் (மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படும் விஷயங்கள்) கவனமற்ற நிலைமைகள், சோம்பல்கள் ஆகியவற்றில் இருந்து அவர் காப்பாற்றுகின்றார். இந்த தனிச்சிறப்பு பெருமானார் (ஸல்) அவர்களுக்கே கிடைத்திருக்கின்றது. இது அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்பதற்கான வலுவான ஆதாரமாக இருக்கின்றது. யாரும் அதை எதிர்த்து நிற்க முடியாது. (அஹ்மதி அவ்ர் கைர் அஹ்மதி மே கியா ஃபரக் ஹே ? ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 469)

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நிழலின் கீழ் வளர்ச்சி அடைவது மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள மனிதனை மஸீஹாக ஆக்கி விடுகின்றது

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அறிவற்றவர்களே! கண்ணிருந்தும் குருடர்களாக இருப்பவர்களே! நமது தலைவரும் எஜமானருமான நமது நபி (ஸல்) அவர்கள் (ஆயிரக்கணக்கான சாந்தி அன்னார் மீது உண்டாகட்டும்) தனது அருள்களை வழங்குவதன் அடிப்படையில் எல்லா நபிமார்களை விடவும் முன்னேறிச் சென்று விட்டார்கள். ஏனென்றால் கடந்தகால நபிமார்களின் அருள்கள் ஓர் எல்லையை அடைந்ததும் முடிந்து விட்டன. இப்போது அந்த சமுதாயங்களும் அந்த மதமும் மரணித்தவையாக இருக்கின்றன. அவற்றில் எந்த வாழ்வும் இல்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மீக அருள்கள் கியாமத் வரை நீடித்திருக்கின்றது. எனவே, இந்த அவர்களது அருள்கள் இருந்தும்கூட ஒரு மஸீஹ் வெளியில் இருந்து வர வேண்டும் என்பது இந்த உம்மத்திற்கு கட்டாயமானதல்ல. மாறாக, அவர்களது நிழலின் கீழ் வளர்ச்சி அடைவதில் தாழ்ந்த நிலையிலுள்ள ஒரு மனிதனை மஸீஹாக ஆக்கியுள்ளான். அவ்வாறே அவன் இந்த எளியவனை மஸீஹாக ஆக்கியுள்ளான்.(சஷ்மயே மஸீஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 389)

எனவே அல்லாஹ், ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை, பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் காரணமாகவும், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது முழுமையான பேரன்பையும் நேசத்தையும் வைத்திருந்தன் விளைவாகவும் இந்தக் காலத்தின் இமாமாகவும் மஸீஹாகவும் மஹ்தியாகவும் ஆக்கி அனுப்பியுள்ளான். முஹம்மதிய்ய உம்மதிற்கு இது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வழங்கப்பட்டுள்ள மிகப்பெரும் அருட்கொடையாகும். இதனை புறக்கணிப்பது அல்லாஹ்வுக்கு காட்டுகின்ற மிக மோசமான நன்றிகேடு ஆகும். இதனால் இவ்வுலகிலும் மறுமையிலும் நமக்கு இழிவும் அவமானமும்தான் ஏற்படும். நாம் இவ்வாறு துஆ செய்கின்றோம். அதாவது அல்லாஹ் நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு அவர்கள் நல்லெண்ணத்துடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களைப் படிப்பதற்கும், அதன் மூலம் அவர்களின் உண்மையை தெரிந்து கொண்டு அவர்கள் மீது நம்பிக்கை கொள்–வதற்கான நல்–வாய்பை வழங்கு–வானாக.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து

மத, இன பாகுபாடின்றி நீங்கள் மக்களுடன் அனுதாபம் காட்டுங்கள். பசித்தவர்களுக்கு உணவளியுங்கள்....மனிதனுடன் உண்மையான அனுதாபத்துடன் நடந்து கொள்ளும் உரிமையைக் காட்டுங்கள். (நூருல் குர்ஆன்)

**K.M. ஷாஹூல் ஹமீது மற்றும் குடும்பத்தினர்**
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், திருச்சி.

A.M.Zakir Hussain
9842941237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu, Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364216000 E-mail : zakir@yahoo.com

# பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்னான போதனைகள்

✪ عَنْ اَبِیْ ھُرَیْرَۃَ عَبْدِ الرَّحْمٰنِ بْنِ صَخْرٍ رَضِیَ اللّٰہُ عَنْہُ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ: اِنَّ اللّٰہَ لَا یَنْظُرُ اِلٰی اَجْسَامِکُمْ وَلَا اِلٰی صُوَرِکُمْ وَلٰکِنْ یَنْظُرُ اِلٰی قُلُوْبِکُمْ

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் உங்களது உடல்களைப் பார்ப்பதில்லை. உங்களது தோற்றங்களைப் பார்ப்பதில்லை. (அதாவது ஒருவர் அழகாக இருக்கின்றாரா? அல்லது மோசமான தோற்றத்தை உடையவராக இருக்கின்றாரா? என்று பார்ப்பதில்லை.) மாறாக அவன் உங்கள் உள்ளத்தைப் பார்க்கின்றான். (அந்த உள்ளத்தில் எந்த அளவு கலப்பற்ற தன்மையும் நல்லெண்ணமும் உள்ளது என்று பார்க்கின்றான்).

(முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா பாபு தஹ்ரீமு ஸூல்முல் முஸ்லிம்)

✪ عَنْ مُعَاوِیَۃَ بْنِ اَبِیْ سُفْیَانَ رَضِیَ اللّٰہُ عَنْھُمَا قَالَ سَمِعْتُ رَسُوْلَ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ یَقُوْلُ اِنَّمَا الْاَعْمَالُ کَالْوِعَاءِ اِذَا طَابَ اَسْفَلُہٗ طَابَ اَعْلَاہُ وَاِذَا فَسَدَ اَسْفَلُہٗ فَسَدَ اَعْلَاہُ

ஹஸ்ரத் முஆவியா பின் அபூ ஸுஃப்யான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன். நற்செயல்கள் ஒரு பாத்திரத்தில் உள்ள பொருளைப் போன்றதாகும். அந்தப் பாத்திரத்திலுள்ள பொருளின் கீழ்ப்பகுதி நன்றாக இருந்தால் அதன் மேல் பகுதியும் நன்றாக இருக்கும். அதன் கீழ்ப்பகுதி அழுக்காகவும் மோசமாகவும் இருந்தால் அதன் மேல் பகுதியும் அழுக்காகவும் மோசமாகவும் இருக்கும். (இதுவே செயல்களின் நிலையுமாகும்). (இப்னு மாஜா அப்வாபுஸ் ஸுஹத் பாபுத் துவஃப்பீ அலல் அம்லி)

✪ عَنْ اَبِیْ ھُرَیْرَۃَ رَضِیَ اللّٰہُ عَنْہُ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ مَنْ لَا یَشْکُرِ النَّاسَ لَا یَشْکُرِ اللّٰہَ

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மக்களுக்கு நன்றி செலுத்தாதவர் இறைவனுக்கும் நன்றி செலுத்தாதவர் ஆவார். அதாவது ஒருவர் செய்த நன்மையின் காரணமாக மனிதனுக்கு ஏதாவதொரு அருள் அல்லது நன்மை கிடைத்தால் எங்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது கட்டாயமானதாக இருக்கின்றதோ அங்கு தனக்கு நன்மை செய்த அந்த நபருக்கு நன்றி தெரிவிப்பதும் அவசியமானதாகும்.

(திர்மிதி பாபு மாஜாஅ ஃபிஸ்ஸுக்ரி லிமன் அஹ்ஸனு இலைக்க)

✪ عَنْ اَبِیْ ھُرَیْرَۃَ رَضِیَ اللّٰہُ عَنْہُ قَالَ: قَالَ النَّبِیُّ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ کُلُّ اَمْرٍ ذِیْ بَالٍ لَا یُبْدَاُ فِیْہِ بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ فَھُوَ اَقْطَعُ۔

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்று கூறாமல் ஆரம்பிக்கப் -படுகின்ற ஒவ்வொரு பணியும் குறையுள்ளதாகவும் அருளற்ற -தாகவும் ஆகிவிடுகின்றது. (அல்ஜாமிவுஸ் ஸகீர் லிஸ்ஸுயூதி ஹர்ஃப் காஃப் வ கஸாஃப்)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து

ஸிராத்தல் முஸ்தகீம் உடைய ஒரு குறைந்த அந்தஸ்து கூட நமது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் ஒருபோதும் மனிதனுக்கு கிடைக்க முடியாது என்ற விஷயத்தின் மீது நமக்கு ஈமான் இருக்கிறது. (இஸாலே அவ்ஹாம்)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

✪ قَالَ النَّبِیُّ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ : مَنْ سَرَّہٗ اَنْ یُحِبَّ اللّٰہَ وَرَسُوْلَہٗ اَوْ یُحِبَّہُ اللّٰہُ وَرَسُوْلُہٗ فَلْیَصْدُقْ حَدِیْثَہٗ اِذَا حَدَّثَ وَلْیُؤَدِّ اَمَانَتَہٗ اِذَا اُؤْتُمِنَ وَلْیُحْسِنْ جِوَارَ مَنْ جَاوَرَہٗ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரிடத்தில் உண்மையிலேயே அன்பு செலுத்தினால், மேலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என்று விரும்பினால் அதற்காக நீங்கள் செய்ய வேண்டியது இவையாகும். அதாவது எப்போதும் உண்மை பேசுங்கள். உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றில் ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். மேலும் உங்களது அண்டை வீட்டுக்காரருடன் எப்போதும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். (மிஷ்காத் பாபுஸ்ஸஃப்கதி வர்ரஹ்மதி அலல் கல்கீ. பைஹகீ ஃபி ஷுக்ஃபில் ஈமான்)

✪ عَنْ جَابِرٍ رَضِیَ اللّٰہُ عَنْہُ قَالَ سَمِعْتُ رَسُوْلَ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ یَقُوْلُ: اَفْضَلُ الذِّکْرِ: لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَاَفْضَلُ الدُّعَاءِ: اَلْحَمْدُ لِلّٰہِ

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டிருக்கின்றேன். அதாவது சிறந்த திக்ர் ஏகத்துவத்தை பறைசாற்றும் கலிமாவாகும். அதாவது அல்லாஹ்வை தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவரும் இல்லை என்பதை ஏற்றுக் கொள்வதாகும். மேலும் சிறந்த துஆ அல்ஹம்துலில்லாஹ் ஆகும்.

(திர்மிதி கிதாபுத் தஃவாத் பாபு தஃவதுல் முஸ்லிமி முஸ்தஜாபதுன்)

✪ جُبِلَتِ الْقُلُوْبُ عَلٰی حُبِّ مَنْ اَحْسَنَ اِلَیْھَا وَبُغْضِ مَنْ اَسَاءَ اِلَیْھَا

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதனின் உள்ளத்தின் இயல்பில் இந்த விஷயம் இருக்கின்றது. தனக்கு நன்மை செய்பவரிடம் அது அன்பு கொள்கின்றது. தன்னுடன் தீய முறையில் நடந்து கொள்பவரை அது வெறுக்கின்றது.

(ஜாமிஉஸ்ஸகீர் தொகுதி 1 பக்கம் 120, பைஹகீ ஃபீ ஷுஃபில் ஈமான்)

✪ عَنْ اُمِّ ھَانِیٍٔ رَضِیَ اللّٰہُ عَنْھَا قَالَتْ: قَالَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ: یَا عَائِشَۃُ لِیَکُنْ شِعَارُکِ الْعِلْمَ وَالْقُرْاٰنَ

ஹஸ்ரத் உம்மு ஹானி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆயிஷாவே! உனது உள்ளாடையாக அறிவும் திருக்குர்ஆனும் இருக்க வேண்டும். அதாவது திருக்குர்ஆனுடனும் அறிவுடனும் உனக்கு எந்த அளவு அன்பு இருக்க வேண்டும் என்றால் அவை உனக்கு மிக அருகில் இருக்க வேண்டும். அதை விட உனக்கு அன்பிற்குரிய பொருள் வேறு எதுவும் இருக்கக் கூடாது.

(முஸ்னதுல் இமாமுல் அஃஸம் கிதாபுல் இல்ம் பக்கம் 20)

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai - Ph: 98847 74525

ரஹ்மானியா மேல்நிலைப் பள்ளி
ரஹ்மானியா தொடக்கப் பள்ளி
ரஹ்மானியா மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம்
S.S. அஸன் அபூபக்கர் ✆ 94869 37769

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044 Ph : 044-22655219

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கூற்றிலிருந்து

பாவம் விஷமாகும். அதனை உண்பதால் மனிதன் மரணிக்கிறான். மரணிப்பது மட்டுமின்றி இறைவனது நெருக்கத்தைப் பெற முடியாமலும் போகின்றான். (குத்பா ஜுமுஆ 02.05.2014)

**அட்வகேட் சலீம் அஹ்மது மற்றும் குடும்பத்தினர்**
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

நமக்கு அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்க வேண்டும். அல்லாஹ் நமது துஆக்களைக் கேட்க வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு நமது உள்ளங்களில் உருவாக வேண்டும் என்று நாம் விரும்பினால் அல்லாஹ் அதற்காக நமக்கு ஒரு வழிமுறையைக் கூறியுள்ளான். அதாவது, நீங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றிச் செயல்பட்டால்தான் இந்த விஷயங்களைப் பெற முடியும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அந்த முன்மாதிரியைப் பார்ப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்து காட்டிய அந்த எல்லா செயல்களையும் நமக்கு எட்ட வைத்திருப்பதும் கூட அல்லாஹ்வின் பேருபகாரம். இந்த விஷயத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொரு பணியையும் செய்பவர்களாக பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களது அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து தவ்ஹீதை நிலைநாட்டுவது, இறை வணக்கத்தை நிலைநாட்டுவது, உண்மை மற்றும் தூய்மை, பணிவு, தாழ்மைக்குணம், வள்ளல் தன்மை, நன்றியுணர்வு, நல்லொழுக்கம் தொடர்பான போதனை, சந்ததிகளின் தர்பிய்யத், அண்டை வீட்டுக்காரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது ஆகியவை தொடர்பான பல்வேறு சம்பவங்களை ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவற்றைச் சான்றாகக் காட்டி ஜமாஅத் சகோதரர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திப் போதித்தார்கள்.

வெறும் நாவளவில் வாதம் செய்பவர்களாக மட்டும் அல்லாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரிக்கு ஏற்ப நடந்தவாறு உண்மையான முறையில் செயல்பட்டு பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களாகவும் தனக்கு மன்னிப்புக் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்து கொள்பவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டில் 28 டிசம்பர் 2016 அன்று இலண்டனிலுள்ள **பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலிலுள்ள தாஹிர் ஹாலில் M.T.A** -வின் செயற்கைக்கோள் தொடர்புகள் மூலம் சய்யிதுனா அமீருல் முஃமினீன் **ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்கள்**
நேரலை மூலமாக ஆற்றிய நிறைவு சொற்பொழிவு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ
وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ

இந்த வசனத்தின் மொழியாக்கம் இதுவாகும். நீர் கூறுவீராக. நீங்கள் அல்லாஹ்வின் மீது அன்பு வைத்துள்ளீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். இந்நிலையில் அல்லாஹ்வும் உங்கள் மீது அன்பு கொள்வான். உங்களது பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான். அல்லாஹ் அதிகமாக மன்னிக்கக்கூடியவனும் மேலும் மேலும் கருணை காட்டக் கூடியவனும் ஆவான். (3:32)

நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற விரும்பினால் அல்லாஹ் நமது துஆக்களை கேட்டு அல்லாஹ்வினுடைய அன்பு நமது உள்ளத்தில் உருவாக வேண்டுமென்றால் அல்லாஹ் அதற்காக நமக்கு ஒரு வழிமுறையை கூறியுள்ளான்.

நீங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை பின்பற்றிச் சென்றால் இந்த விஷங்களை நீங்கள் பெற முடியும் என்று அவன் கூறியுள்ளான். இந்த முன்மாதிரியை பார்ப்பதற்கும் புரிவதற்கும் அதற்கேற்ப செயல்படுவதற்கும் சஹாபாக்கள் மூலமாக அந்த இறைவன் பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த செயல்களை நமக்கு எட்ட வைத்துள்ளான். இது அல்லாஹ்வின் பேருபகாரமாகும். ஆனால் இந்த விஷயத்தையும் புரிவது அவசியமானதாகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் திருக்குர்ஆனில் எதைக் கூறியுள்ளானோ அந்த பணியையே செய்தார்கள். அவன் கூறியுள்ள விஷயங்களையே பேசினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களது நல்லொழுக்கம் எவ்வாறிருந்தது என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, மிகவும் அழகிய முறையில் மூன்றே சொற்களில் பெருமானார் (ஸல்) அவர்களது முன்மாதிரியைப் பற்றி அவர்கள் கூறினார்கள். அதாவது كَانَ خُلُقُهُ الْقُرْآن அவர்களது நல்லொழுக்கம் மகத்தான வேதமாகிய திருக்குர்ஆனாகவே இருந்தது. திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்பவே அவர்களது நல்லொழுக்கமும், நற்செயல்களும் இருந்தன என்று அவர்கள் கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 144 ஹதீஸ் எண் 25108 – முஸ்னது ஆயிஷா 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலமுல் குத்பில் அச்சிடப்பட்டது)

பிறகு இந்த காலத்தில் அல்லாஹ் நம்மீது பேருபகாரம் செய்தவாறு அவனது தூதராகவும் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மையான அடிமையாகவும் இந்த காலத்தின் இமாமாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களை அனுப்பினான். அவர்கள் நமக்கு நபிமார்களின் அந்தஸ்து மற்றும் குறிப்பாக பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றியும் அவர்களது அழகான முன்மாதிரியைப் பற்றியும் நமக்கு மேலும் அறிவை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: நபிமார்களும், தூதர்களும், இமாம்களும் உலகில் வருவதன் நோக்கம் என்ன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தங்களை எவராவது வணங்க வேண்டும் என்பதற்காக அவர்கள் உலகில் வரவில்லை. அவர்களோ ஓர் இறைவனை வணங்குவதை நிலைநாட்ட விரும்பினார்கள். இந்த நோக்கத்திற்காகவே அவர்கள் வந்தனர். மக்கள் அவர்களது முழுமையான முன்மாதிரிக்கு ஏற்ப செயல்பட வேண்டும். மேலும் அவர்களைப் போன்று ஆகுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் அவர்களை பின்பற்றி செல்ல வேண்டும். எந்த அளவுக்கு பின்பற்ற வேண்டுமென்றால் அவர்களாகவே ஆகிவிட வேண்டும். இந்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்குதான் அவர்கள் உலகிற்கு வருகின்றனர். ஆனால் வேதனை என்னவென்றால் சில மக்கள் அவர்களது வருகையின் உண்மையான குறிக்கோளை விட்டு விடுகின்றனர். மேலும் அவர்களையே இறைவனாக கருதுகின்றனர். இதனால் அந்த இமாம்களும், தூதர்களும் மகிழ்ச்சி அடைவதில்லை. அதாவது மக்கள் அவர்களுக்கு இந்த கண்ணியம் அளிக்கின்றனர் என்பதனால் அவர்கள் ஒருபோதும் மகிழ்ச்சி அடைவதில்லை. அதனை மகிழ்ச்சிக்கான காரணமாகவும் அவர்கள் கருதுவதில்லை. மக்கள் அவர்களை பின்பற்றி நடப்பதிலும்தான் அவர்களுக்கு உண்மையான மகிழ்ச்சி இருக்கின்றது. உண்மையான இறைவனை வணங்குங்கள். ஏகத்துவத்தில் நிலைத்திருங்கள் என்ற போதனையையே அவர்கள் வழங்குகின்றனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் இதே கட்டளை தான் தரப்பட்டது.

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ

நீங்கள் அல்லாஹ்விடம் அன்பு கொள்வதாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். இந்த பின்பற்றுதலின் விளைவாக அல்லாஹ் உங்களிடம் அன்பு கொள்வான் என்று தூதரே அவர்களிடம் கூறுவீராக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதிலிருந்தும் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவராக ஆவதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதே வழிமுறையாக இருக்கின்றது. எனவே இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நபிமார்கள் அலைஹிமுஸ் ஸலாமும் இறைவனது நேர்மையான உண்மையான அடியார்களும் உலகில் ஒரு முன்மாதிரியாக வருகின்றனர். எந்த நபர் அவர்களது முன்மாதிரிக்கு ஏற்ப நடக்க முயற்சி செய்ய மாட்டாரோ மேலும் அவர்கள் முன்னால் சஜ்தா செய்து அவர்களிடம் உதவி கேட்பதற்கு ஆயத்தமாகி விடுகின்றாரோ அவர் ஒரு போதும் இறைவனது பார்வையில் கண்ணியம் பெறுவதற்கு தகுதியுடையவராக இருக்க மாட்டார். இன்னும் சொல்வதென்றால் மரணித்த பிறகு அவரது இமாம் அவரை விட்டும் விலகி செல்வதை அவர் காண்பார். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 288–289. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)

எனவே முதலாவதாக நபிமார்கள் கற்றுத் தந்த விஷயம் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதாகும். இதன் மிக உயரிய அந்தஸ்தை பெருமானார் (ஸல்) அவர்கள் அடைந்திருந்தார்கள். இந்த விஷயத்தை தான் அன்னார் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் உருவாக்கினார்கள். அதன் உயர்வான முன்மாதிரி நமக்கு பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்களிடமிருந்து கிடைக்கின்றது. சஹாபாக்கள் நேரடியாக பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து அருளைப் பெற்றனர். பெருமனார் (ஸல்) அவர்கள் இறைவனின் அடியாராக இருந்த அந்தஸ்த்தை அவர்கள் கண்டனர். ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக அவர்களிடமிருந்த துடிப்பையும் அவர்கள் கண்டனர். அல்லாஹ்விடம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இருந்த அன்பு அவர்களது இறைவணக்கத்தின் தரம் ஆகியவற்றை பார்த்ததன் மூலமாக அவை அவர்களிடம் உண்மையான ஏகத்துவத்தின் துடிப்பை உருவாக்கி விட்டது.

நான் ஏற்கனவே கூறியது போன்று பெருமானார் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியை நம் வரை எட்ட வைத்ததில் சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களுடைய பங்கு இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் மிகப்பெரும் பங்கு இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் இது அவர்களது பேருபகாரமாகும். சில அறிவிப்புகளை இப்போது நான் உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தங்களது தந்தையின் மீது ஆணையிட்டுக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர் கூறியதை கேட்டு விட்டார்கள். அப்போது அவர்கள் கேளுங்கள். அல்லாஹ் நம்மை நாம் நமது தந்தையர் மீது ஆணையிட்டுக் கூறுவதிலிருந்தும் தடுத்துள்ளான். எவருக்கு சத்தியம் செய்து ஒன்றை கூற வேண்டிய தேவை இருக்கின்றதோ அவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யட்டும். அல்லது அமைதியாக இருக்கட்டும். (சஹீஹ் புகாரி ஹதீஸ் 6108)

எனவே அல்லாஹ்வைத் தவிர வேறு எவர் மீதும் ஆணையிட்டுக் கூறுவது ஆகுமானதல்ல. சில மக்கள் குழந்தைகள் மீது சத்தியம் செய்கின்றனர். தங்களுக்கு நெருக்கமானவர்கள் மற்றும் தங்கள் அன்பிற்குரியவர்கள் மீது சத்தியம் செய்கின்றனர். மேலும் இவர்கள் நமது அன்பிற்குரியவர்கள் ஆவர். இவர்கள் மீது நாம் சத்தியம் செய்து கூறினால் மற்றவர்கள் அதன் மீது உறுதியாக நம்பிக்கை கொள்வர் என்று அவர்கள் கருதுவர். ஆனால் நம்பிக்கை கொண்டவர் இந்த விஷயங்கள் அவரை ஏகத்துவத்தை விட்டும் விலக்கி மிகவும் தொலைவில் கொண்டு செல்லக் கூடியதாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு முறை ஒருவர் இவ்வாறு கேள்வி கேட்டார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒருவர் தனது தன்மானத்தை வெளிப்படுத்துவதற்காக போர் புரிகின்றார். இன்னொருவர் தனது வீரத்தை காட்டுவதற்காக போர் புரிகின்றார். இன்னொருவர் போர் காலப் பொருட்களை பெறுவதற்காக போர் புரிகின்றார். இவர்களில் ஜிஹாது செய்பவர் யார்? என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கலிமாவை உயர்த்த வேண்டும் என்பதற்காகவும் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்கும் எவர் போரிடுகின்றாரோ அவர்தான் இறைவனது வழியில் ஜிஹாது செய்பவராக கணக்கில் வருபவராவார் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் ஜிஹாதி வஸ்ஸைர் பாபு மன் காதல லி தகூனு கலிமத்தல்லாஹி ஹியல் உல்யா ஹதீஸ் 2810)

எனவே தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலும் இறைவனுக்கும் பிரியமானதாகும். அத்தகைய செயலை நிலைநாட்டுவதற்காகவே பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள்.

ஒரு முறை மக்காவிலுள்ள தலைவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அன்னாரை அழைத்தார்கள். ஒருவேளை நேர்வழியைப் பெற வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு வந்து விட்டது என்று கருதிய பெருமானார் (ஸல்) அவர்கள் விரைவாக அவர்களிடம் சென்றார்கள். அப்போது அந்த எல்லா தலைவர்களும் ஒன்றுபட்டு இந்த கருத்தை கூறினார்கள்.

முஹம்மதே (ஸல்) ! நாங்கள் உங்களிடம் பேசுவதற்காக உங்களை அழைத்துள்ளோம். இந்த அளவுக்கு எங்களை அரபு நாட்டில் வேறு எவருமே துன்பத்தில் ஆழ்த்தியதில்லை. அந்த அளவுக்கு நீங்கள் எங்களை துன்பத்தில் ஆழ்த்தி விட்டீர்கள். நீங்கள் நாங்கள் வணங்கும் கடவுள்களை தீயது என்று கூறுகின்றீர்கள். எங்களைது கூட்டத்தை பிரித்து துண்டு துண்டாக்கி விட்டீர்கள். உங்களால் உருவாகாத எந்தவொரு தீமையும் இல்லை என்று கூறினர்.

அதாவது அவர்களின் பார்வையில் உலகவாதிகளின் பார்வை இது தீமையாக இருந்தது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ உலகத்தின் சீர்திருத்தத்திற்காக வந்திருந்தார்கள்.

பிறகு அந்த தலைவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி உங்களது நோக்கம் பொருளை ஒன்று திரட்டுவதாக இருந்தால் நாங்கள் உங்களுக்கு எந்த அளவுக்கு பொருளை தர தயாராக இருக்கின்றோம் என்றால் நீங்கள் இந்த சமுதாயத்திலேயே பெரும் செல்வந்தராக ஆகி விடுவீர்கள். நாங்கள் உங்களை எங்களது தலைவராக ஆக்க வேண்டும் என்று நீங்கள் கருதினால் அவ்வாறு செய்யவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் என்னை தவறாக புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் கூறும் எந்த விஷயங்களும் என்னிடம் இல்லை. வெளிப்படையான கண்ணியத்தையும் புகழையும் நான் விரும்பவும் இல்லை. என்னை இறைவன் தூதராக அனுப்பியுள்ளான். என்மீது வேதத்தை இறக்கியுள்ளான். நான் நற்செய்திகளை கூற வேண்டும். எச்சரிக்கை செய்யவும் வேண்டும். ஏகத்தவத்தை நிலைநாட்ட வேண்டும் என்று அவன் எனக்கு கட்டளையிட்டுள்ளான். எனவே நான் உங்களுக்கு இறைவனின் இந்த தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டேன். நீங்கள் அதை ஏற்றுக் கொண்டால் அதில் உங்களுக்குத்தான் பலன் இருக்கின்றது. அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் இறைவன் நமக்கிடையில் தீர்ப்பு கூறும் வரையில் நீங்களும் பொறுமையாக இருங்கள். நானும் பொறுமையாக இருக்கின்றேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு அல்லாஹ் எவ்வாறு தீர்ப்பளித்தான் என்பதையும் ஏகத்துவம் எவ்வாறு நிலைத்து நின்றது என்பதையும் உலகம் கண்டு கொண்டது. (சீரத் இப்னு ஹிஷாம் பாபு கவ்லு உத்பாபுன் ரபிய்யா ஃபி அம்ரி ரஸூலில்லாஹி பக்கம் 220 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் 2001ல் அச்சிடப்பட்டது)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனைத்து சிறப்பிற்குரிய முன்மாதிரிகளின் தொகுப்பாக இருந்தார்கள். ஏனென்றால் எல்லா நபிமார்களின் முன்மாதிரிகளும் அவர்களில் ஒன்று சேர்ந்திருக்கின்றன. (மல்ஃபூஸாத்)

**மர்ஹூம் ஷேக் அப்துல் காதிர் மற்றும் குடும்பத்தினர் [சாத்தான்குளம்]**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த ஓர் இறையறிவிப்பு**

خُذُوا التَّوْحِيدَ التوحيد يَا أَبْنَاءَ الْفَارِس

'பாரசீக சந்ததிகளே! ஏகத்துவத்தை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்'
(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 1, பக்கம் 267)

**S.A. அப்துல் ஹக்**
சதர்,அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனுக்கு எவ்வாறு அடியானாக இருந்தார்கள் என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனை படித்துப் பாருங்கள். மற்றவர்கள் ஒருபுறம் இருக்கட்டும். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட முழுமை பெற்ற முன்மாதிரியை காட்டக்கூடிய ஒரு நபர் உலகில் இதுவரை இல்லை. மறுமை நாள் வரை அப்படிப்பட்ட நபர் இருக்கவும் முடியாது. பிறகு பாருங்கள். வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்தும் கூட இறைவனின் அடியான் என்ற நிலையில் அவர்கள் மீண்டும் மீண்டும் إِنَّمَا أَنَا بَشَرٌ مِّثْلُكُمْ நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதனே ஆவேன் (அல் கஹஃப்:111) என்று கூறிக் கொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால் ஏகத்துவத்தை பறைசாற்றும் கலிமாவிலும் கூட தன்னை ஓர் இறை அடியானாக ஏற்றுக் கொள்வதை ஒரு கட்டாய அம்சமாக அவர்கள் ஆக்கி விட்டார்கள். அதை ஏற்றுக் கொள்ளாமல் ஒரு முஸ்லிம் முஸ்லிமாக ஆக முடியாது. சிந்தனை செய்யுங்கள். மீண்டும் சிந்தனை செய்யுங்கள். நமது முழுமை பெற்ற நேர்வழிகாட்டியின் வாழ்க்கை முறையானது அவர்கள் இறை நெருக்கத்தின் மிக உயரிய தகுதியை அடைந்திருந்தும் கூட தான் ஓர் இறை அடியான் என்பதை ஏற்றுக் கொள்வதை ஒருபோதும் கை நழுவ விட்டதில்லை என்ற படிப்பினையை நாம் இதிலிருந்து பெறுகின்றோம். அவ்வாறிருக்க எவரைப் பற்றியும் அதற்கு மாற்றமாக நாம் எண்ணுவதும் அத்தகைய விஷயங்களுக்கு நமது உள்ளத்தில் இடமளிப்பதும் வீணானதும் பயனற்றதும் ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 117 – 118. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆக, இந்த அறிவைத் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். ஒரு முஸ்லிம் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்றும் அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு என்றும் அறிவிக்கின்றார். எனவே முழுமை பெற்ற நபியாகிய பெருமனார் (ஸல்) அவர்களே இறைவனின் அடியாராக இருக்கும் போது பீர்களுக்கும், ஃபகீர்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களை விட உயர்வான தகுதியை வழங்கி அவர்களது கபருகளில் முஸ்லிம்கள் சஜ்தா செய்வதை எவ்வாறு ஆகுமான செயலாக நாம் கருத முடியும். மாறாக, இது மிகப்பெரிய பாவமும் இறைவனுக்கு இணை வைக்கும் செயலுமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கியிருப்பது அவனது பேரருளாகும். அவர்கள் நமக்கு தவ்ஹீதின் அடிப்படை கருத்துக்களையும் பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் அடியாராக இருக்கின்றார்கள் என்பதைப் பற்றிய சரியான அறிவையும் நமக்கு வழங்கியுள்ளார்கள். நம்மை எல்லா வகையான இறைவனுக்கு இணை வைக்கும் செயல்களிலிருந்து தூய்மைப்படுத்தியுள்ளார்கள்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். இந்த அரபி நபி எந்த அளவு உயர்வான தகுதியை பெற்ற நபியாக இருக்கின்றார். அவரது பெயர் முஹம்மது ஆகும். ஆயிரக்கணக்கான தரூதும் ஸலாமும் அவர்கள் மீது உண்டாவதாக. அவர்களது உயர்ந்த அந்தஸ்த்தின் உச்சத்தை எவரும் அறிந்து கொள்ள முடியாது. அவர்களது பரிசுத்தப்படுத்தும் ஆற்றலின் தாக்கத்தை தனிப்பது மனிதனின் பணியல்ல. வேதனை என்னவென்றால் எந்த அளவு அவரது உயர் தகுதி அடையாளங்கண்டு கொள்ளப்பட வேண்டுமோ அந்த அளவு அது அடையாளங்கண்டு கொள்ளப்படவில்லை. உலகிலிருந்து மறைந்து போன ஓர் இறைமையை அந்த வீரர் தான் மீண்டும் இந்த உலகிற்கு கொண்டு வந்தார். அவர் இறைவன் மீது மிகவும் அதிகமாக அன்பு செலுத்தினார். மனித இனத்தின் மீது கொண்டிருந்த அளவு கடந்த அனுதாப உணர்வின் காரணமாக அவரது உயிர் உருகி விட்டது. எனவே, அவரது உள்ளத்தின் ரகசியத்தை அறிந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் முன்னவர்கள் பின்னவர்கள் அனைவரை விடவும் அவர்களுக்கு சிறப்பினை வழங்கினான். அவரது ஆசைகளை அவரது வாழ்நாளிலேயே நிறைவேற்றிக் காட்டினான். (ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 118–119)

மனிதன் அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமையைச் செலுத்தும் போதுதான் ஏகத்துவத்தை நிலைநாட்டுவது அதன் உச்சத்தை அடைகின்றது. இவ்வகையில் எனது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்விஷயத்தில் மிக உயர்ந்த தகுதியை பெற்றிருந்தார்கள். அதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு சாட்சி பகர்கின்றான். الَّذِي يَرَاكَ حِينَ تَقُومُ وَتَقَلُّبَكَ فِي السَّاجِدِينَ நீர் நின்று கொண்டிருக்கும் போது அவன் உம்மைப் பார்க்கின்றான். நீர் சஜ்தா செய்பவர்களில் ஒருவராக இருக்கும் போதும் அவன் உமது நிம்மதியற்ற நிலைமையைப் பார்க்கின்றான். (சூரா அஷ்ஷுஅரா :219–220)

எனவே அல்லாஹ் இங்கு இவ்வாறு அறிவிக்கின்றான். முஹம்மதே! சஜ்தா செய்கின்ற அனைவரை விடவும் உம்மைப் போன்று நிம்மதி இழந்த நிலையில் சஜ்தா செய்கின்ற வேறு எவரும் இல்லை. நீர் ஓர் இறைமையை நிலைநாட்டியதன் மூலம் கலப்பற்ற தூய உள்ளம் கொண்டவர்களின் ஒரு ஜமாஅத்தை உருவாக்கி விட்டீர். அது அல்லாஹ்வை வணங்குவதில் தனிச்சிறப்புமிக்க ஜமாஅத்தாக திகழ்கின்றது. அந்த ஜமாஅத்தை சார்ந்தவர்களின் இரவுகள் இறைவணக்கங்களில் கழிகின்றன. ஆனால் இந்த எல்லா இறை வணக்கங்களும், சஜ்தாக்களும் உமது சஜ்தாக்களின் முன்மாதிரியை பின்பற்றி செல்வதற்கே முயற்சி செய்கின்றன. இந்த சஜ்தாக்களிலுள்ள நிம்மதி இழந்த நிலைமையானது ஒருபுறம் நமக்கு ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்த துடிப்பை நமக்கு காட்டுகின்றது. மறுபுறம் தன்னை ஏற்றுக் கொண்டவர்களில் அத்தகைய சஜ்தா செய்பவர்களையும் உருவாக்குவதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் முழுக்க முழுக்க அல்லாஹ்விற்கு முன்பே குனியக் கூடியவர்களாக இருப்பார்கள். அவனையே வணங்குவார்கள். உள்ளத்தில் இருந்து வருகின்ற பொய் கடவுளர்களை வெளியேற்றி விடுவார்கள் என்பதும் நமக்கு தெரிய வருகின்றது.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருமுறை ஒவ்வொரு நபிக்கும் ஏதாவதொரு விருப்பம் இருந்திருக்கின்றது. எனது உள்ளத்தின் விருப்பம் இரவில் செய்யும் இறை வணக்கமாகும் என்று கூறினார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 7 பக்கம் 323. கிதாபுஸ் ஸலாத்தி மின் கிஸ்மில் அக்வால் ஹதீஸ் 21398. பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் 2004 ல் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பாளர் கூறுகின்றார். நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுவதைப் பார்த்தேன். அப்போது அதிகமாக அவர்கள் அழுது இறைவனிடம் மன்றாடியதன் காரணமாக அவர்களது நெஞ்சத்திலிருந்து ஆட்டுரல் சூழல்வது போன்ற ஓர் ஓசை வந்து கொண்டிருந்தது. (சுனன் அபீ தாவூத். கிதாபிர் ருகூஃ வசுஜூத். பாபுல் புக்கா ஃபிஸ் ஸலாத் ஹதீஸ் 904)

(தானியங்களை அரைப்பதற்காக ஆட்டுரலை பயன்படுத்துகின்றோம். அது கிரைண்டரின் சப்தம் போன்றதாகும்). இவ்வாறு பறிதொரு அறிவிப்பில் கடாரம் கொதிப்பது போன்று அந்த சத்தம் இருந்தது என்றும் வந்துள்ளது. (சுனன் நஸயி. கிதாபுஸ் ஸஹவ். பாபு பகா ஃபிஸ் ஸலாத். ஹதீஸ் 1214)

ஹஸ்ரத் உம்மு சல்மா அவர்கள் கூறுகின்றார்கள் : பெருமானார் (ஸல்) அவர்கள் சிறிது நேரம் தூங்குவார்கள். பிறகு விழித்தெழுந்து சிறிது நேரம் தூங்குவார்கள். பிறகு கொஞ்சம் தூங்குவார்கள். பிறகு மீண்டும் எழுந்து அமர்வார்கள். சுருக்கமாக, விடியற்காலை வரை இதே நிலைதான் நீடித்தது. (சுனன் நஸயீ. கிதாபுல் கியாமுல் லைல். பாபு ஸிக்ரிஸ் ஸலாத்தி ரஸூலில்லாஹி பில் லைல் ஹதீஸ் 1628)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

மேலும், எவர் மீது முஹம்மதியத்தின் பிரதிபலிப்பு எனும் போர்வை அணிவிக்கப்பட்டிருக்கின்றதோ அவரைத் தவிர வேறு எந்த நபியுமில்லை. (கிஷ்தி நூஹ்)

**லஜ்னா இமாயில்லாஹ் ஆதம்பாக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த துஆ**

அல்லாஹ்வே ! என்னை உனக்கு நன்றி செலுத்துபவனாகவும் உன்னை நினைவு கூறுபவனாகவும் ஆக்கி விடு. (சுனன் அபீ தாவூத்)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது மற்றும் குடும்பத்தினர் [சாத்தான்குளம்]**

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : நோய்வாய்ப்பட்டதன் காரணமாக அல்லது வேறு ஏதாவது காரணத்தால் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தஹஜ்ஜுத் தொழ முடியாமல் இருந்தால் அவர்கள் பகலில் 12 ரக்அத்துகள் நஃபில் தொழுவார்கள். (சுனன் நஸயீ. கிதாப் கியாமுல் லைல். பாபு கம்யுஸல்லி மன்னாம. ஹதீஸ் 1489)

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தன்னை ஏற்றுக் கொள்பவர்களும் இறைவனை வணங்கக் கூடியவர்களாகவும் இறை வணக்கத்திற்குரிய உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற இதே விருப்பமும் எதிர்பார்ப்புமே இருந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒருமுறை தனது உம்மத்திலுள்ள நபர்களுக்கு அவர்களின் இறை வணக்கங்களின் தரம் உயர்ந்தாக இருக்க வேண்டும் என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் விருப்பத்தை கருத்தில் கொண்டவாறு அவர்களுக்கு இவ்வாறு போதனை செய்தார்கள். இரவில் எழுந்து தொழுவதை விட்டு விடாதீர்கள். ஏனென்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை விட்டுவிடவில்லை.

அதாவது இரவில் எழுந்து நஃபில் தொழுவதை விட்டு விடாதீர்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

தொடர்ந்து கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது உடலில் சோம்பலை உணர்கின்ற போது உட்கார்ந்தவாறு தஹஜ்ஜுத் தொழுவார்கள். (முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 222–223, முஸ்னது ஆயிஷா ஹதீஸ் 25458. 1998 ல் பைரூத்திலுள்ள ஆலமுல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

தஹஜ்ஜுத் தொழுவது விடுபட்டு விட்டால் பகலில் 12 ரக்அத்துகளை தொழுவது என்பதை பெருமானார் (ஸல்) அவர்களிடம் மிகவும் அரிதாகத் தான் நாம் காண முடியும். ஒருமுறை அவர்கள் மிகவும் நோய்வாய்ப் பட்டிருந்தார்கள். அதன் தாக்கத்தை சஹாபாக்கள் கூட அவர்களது உடலிலும் முகத்திலும் உணர்ந்தார்கள். அத்தகைய நிலைமை இருந்தும் கூட நான் பலகீனமான நிலையில் இருந்தும் கூட இன்று இரவு நான் நீண்ட சூராக்களை ஓதினேன் என்று அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 2 பக்கம் 133. கிதாபுல் அஸ்கார் மின் கிஸ்மில் அஃப்வால் ஃபஸ்லு ஃபி ஃபஸாயிலிஸ் ஸூர் ஹதீஸ் 4069. பைரூத்திலுள்ள தாருல் குதுப் இல்மியாவில் 2004 ல் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த எல்லா துஆக்களிலும் இறை வணக்கங்களிலும் எனது உம்மத்தைச் சார்ந்தவர்கள் உண்மையான முறையில் இறைவனை வணங்கக் கூடியவர்களாகவும் தனது இறைவன் முன்னால் குனிந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற துஆவும் விருப்பமுமே இருந்து வந்தது. பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் அன்னாரது இந்த துடிப்பை பார்த்தார்கள். அவர்களது நட்பிலிருந்து தாக்கத்தை பெற்றார்கள். அவர்களது முன்மாதிரியை பின்பற்றி வாழ்ந்தார்கள். பிறகு இறைவனுக்கு இணை வைக்கும் செயலில் ஈடுபட்டிருந்த அவர்கள் எவ்வாறு இறைவனை வணங்குபவர்களாக மாறி விட்டார்கள் என்றால் பின்னர் வரக்கூடியவர்களுக்கு அவர்கள் முன்மாதிரிகளாக திகழ்ந்தனர். இவ்வாறு அவர்களிடம் ஒரு புரட்சி ஏற்பட்டது.

இதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

நான் இதை உறுதியாக கூறுகின்றேன். எப்படிப்பட்ட எதிரியாக இருந்தாலும் அவர் கிறித்தவராக இருந்தாலும், ஆரியராக இருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருவதற்கு முன்னர் அரபு மக்களின் நிலை எவ்வாறு இருந்தது. பிறகு அன்னாரது போதனை மற்றும் நல்ல தாக்கத்தின் விளைவாக அவர்களிடம் எத்தகைய மாற்றம் ஏற்பட்டது என்ற நிலைமைகளை பார்க்கும்போது அவர்கள் தம்மையும் அறியாமல் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைக்கு சாட்சி பகர்பவர்களாக ஆகிவிடுவர். பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்னதாக அரபு மக்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது.

يَأْكُلُوْنَ كَمَا تَأْكُلُ الْأَنْعَامُ விலங்குகளைப் போன்று உணவு உண்பதே அவர்களது பணியாக இருந்தது. (முஹம்மது : 13)

இது அவர்கள் நிராகரிப்பில் இருந்த போது இருந்த நிலையாகும். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மையான தாக்கங்கள் அவர்களிடம் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியது என்றால் يَبِيْتُوْنَ لِرَبِّهِمْ سُجَّدًا وَّقِيَامًا அதாவது அவர்கள் தமது இறைவன் முன்னிலையில் சஜ்தா செய்பவர்களாகவும், நிற்பவர்களாகவும் தமது இரவுகளை கழிக்கின்றனர் (அல் ஃபுர்கான் : 65) என்று அவர்களிடம் ஏற்பட்ட மாற்றத்தை பற்றி திருக்குர்ஆன் கூறுகின்றது.

இந்த மாற்றத்தை தான் பெருமானார் (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள காட்டுமிராண்டிகளிடம் ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்களை குழியிலிருந்து வெளியேற்றி உயர்வான அந்தஸ்த்தை அடையும்படி செய்தார்கள். இந்த எல்லா நிலைமைகளின் வரைபடத்தையும் ஒருவர் பார்க்கும் போது தன்னையும் அறியாமல் ஒரு மனிதன் அழுது விடுவான். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய மகத்தான புரட்சியை செய்துள்ளார்கள் என்பதை நினைத்து அழுவான். உலகில் எந்தவொரு வரலாற்றிலும் எந்தவொரு சமுதாயத்திலும் இதற்கு நிகரான ஒன்று நமக்கு கிடைக்க முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 144–145. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இது வெறும் கதை மட்டுமல்ல. உண்மை சம்பவங்களாகும். இதன் உண்மையை ஒரு காலம் ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது. இந்த உண்மையை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். எனவே நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்தியவாறு கியாமத் நாள் வரை நிலைத்திருக்கின்ற பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை நாம் பின்பற்றி நடக்க வேண்டும். நான் நவாஃபில் தொடர்பான சில அறிவிப்புகளை கூறினேன். நஃபிலான தொழுகைகள் தொடர்பாக இந்த அளவு வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்கும் போது நமக்கு கடமையாக்கப்பட்ட விஷயங்களை எந்த அளவு முறையாக பேண வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது என்பதை நம்மில் ஒவ்வொருவரும் உணர்ந்து நம்மை நாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். மேலும் இதைப் பற்றி சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. நபிமார்கள் உலகில் உண்மையை பரப்புவதற்காக வருகின்றனர். தம்மை ஏற்றுக் கொள்பவர்களை உண்மையில் நிலைத்திருக்கச் செய்வதற்காக அவர்கள் வருகின்றனர். உண்மையான இறைவனின் பக்கம் அவர்களை குனிய வைப்பதற்காக அவர்கள் வருகின்றனர். இதிலும் கூட பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக உயரிய அந்தஸ்த்து வழங்கப்பட்டிருந்தது. சிறு வயதிலிருந்தே அவர்களிடம் இந்த பண்பு எந்த அளவு தெளிவாக தெரிந்ததென்றால் எதிரிகள் கூட அவர்களது உண்மையை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

ஒருமுறை குறைஷி தலைவர்கள் ஒன்று திரண்டனர். இவர்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் மிகப்பெரும் எதிரியாக இருந்த அபூஜஹ்ல் மற்றும் நஸ்ர் பின் ஹாரிஸ் ஆகியோர் இருந்தனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மந்திரவாதியாக இருந்தார். அல்லது அவர் பொய்யராவார் என்ற தவறான கருத்தை நாம் பரப்பிவிட வேண்டும் என்று கூறப்பட்டது. அப்போது நஸ்ர் பின் ஹாரிஸ் எழுந்து நின்று இவ்வாறு கூறினார். குறைஷியர்களே! எத்தகையதொரு விவகாரம் உங்களிடம்

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறியது**

وہ پیشوا ہمارا جس سے ہے نُور سارا — نام اس کا ہے محمدؐ دلبر مرا یہی ہے

அவரே எங்கள் தலைவர். ஒளிகள் அனைத்தையும் அவரிடமிருந்தே பெற்றோம். அவரது பெயர் முஹம்மது (ஸல்). எனது உள்ளம் கவர்ந்தவர் இவரே.

**அன்ஸருத்தீன்**

காயித்,மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

மரணித்துப் போயிருந்த ஓர் உலகம் அவரது வருகையால் உயிர் பெற்றது. அந்த அருளுக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா, இமாமுல் அஸ்ஃபியா, கத்தமுல் முர்ஸலீன், ஃபக்ருன் நபிய்யீன் ஆக இருக்கின்ற ஜனாப் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். (இத்மாமுல் ஹுஜ்ஜா)

**மர்ஹூம் M.A.S. முஹையுத்தீன் அலி மற்றும் குடும்பத்தினர் [கோடம்பாக்கம்]**

வந்துள்ளது என்றால் அதை எதிர்த்து நிற்பதற்காக இதுவரை எந்த திட்டத்தையும் உங்களால் கொண்டு வர முடியவில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் உங்கள் மத்தியில்தான் இளைஞராக ஆனார். அவர்கள் உங்களுக்கு மிகவும் பிரியமானவராக இருந்தார்கள். எல்லாரையும் விட அதிகமாக உண்மையையே பேசுபவராக இருந்தார்கள். உங்களில் எல்லாரையும் விட அதிகமாக நேர்மையை கடைபிடிப்பவராக அவர்கள் இருந்தார்கள். நீங்கள் அவர்களது நெற்றிப் பொட்டில் வெள்ளை முடியை பார்க்கும் போது அதாவது அவருக்கு வயதான சமயத்தில் அவர் கொண்டு வந்த தூதுச் செய்தி தொடர்பாக அவர் பொய்யராக இருக்கின்றார் என்று கூறினீர்கள்.

அவரை ஒரு மந்திரவாதி என்றீர்கள். நாங்களும் கூட பொய்யர்களை பார்த்திருக்கின்றோம். மந்திரவாதியையும் பார்த்திருக்கின்றோம். அவர் குறி சொல்பவர் என்று நீங்கள் கூறினீர்கள். நாங்கள் குறி சொல்பவரையும் பார்த்திருக்கின்றோம். அவரை கவிஞர் என்று நீங்கள் கூறினீர்கள். நாங்கள் கவிஞர்களையும் பார்த்திருக்கின்றோம். அவர்கள் பைத்தியமாக ஆகி விட்டார்கள் என்று நீங்கள் கூறினீர்கள் – நவூதுபில்லாஹ். நாங்கள் பைத்தியக்காரர்களையும் பார்த்திருக்கின்றோம். அவர் பொய்யரல்ல. மந்திரவாதியும் அல்ல. குறி சொல்பவரும் அல்ல. கவிஞரும் அல்ல. பைத்தியக்காரரும் அல்ல. இத்தகைய விஷயங்களின் எந்தவொரு அடையாளமும் அவரிடம் இல்லை. எனவே உங்களிடம் வந்திருக்கின்ற இந்த பெரிய விவகாரம் தொடர்பாக நீங்கள் சிந்தனை செய்யுங்கள் என்று நஸ்ர் பின் ஹாரிஸ் கூறினார். (சீரத் இப்னு ஹிஷாம் பாபு மாவார பைன ரஸூலுல்லாஹி (ஸல்) வ பைன அவ்ஸாயி குறைஷ் பக்கம் 224. பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் 2001ல் அச்சிடப்பட்டது)

ஆக, இது பெருமானார் (ஸல்) அவர்களது ஓர் எதிரியின் கூற்றாகும்.

பிறகு இன்னொரு முறை அபூஜஹ்ல் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து நான் உங்களைப் பார்த்து பொய்யன் என்று கூறவில்லை. நீங்கள் கொண்டு வந்த போதனையையே பொய் என்று கூறுகின்றேன். (சுனன் திர்மதி, அப்வாப் தஃப்ஸீருல் குர்ஆன் பாபு மின் சூரத்தில் அன்ஆம் ஹதீஸ் 3064)

பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் உங்களிடையே இவ்வளவு காலம் வாழ்ந்துள்ளேன். ஆனால் நான் பொய்யன் என்பதை உங்களால் ஒருபோதும் நிரூபிக்க முடியவில்லை. நான் பொய்யன் என்று உங்களால் கூற முடியவில்லை. அவ்வாறிருக்க இன்று இந்த போதனையை கொண்டு வந்ததன் காரணமாக இறைவனது விவகாரத்தில் நான் எவ்வாறு பொய் கூறுவேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நபிமார்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் தங்களது முழுமையான நேர்மைக்கான வலுவான ஆதாரங்களை எடுத்து வைத்து தமது எதிரிகளின் வாயை அடைத்து விடுகின்றனர். இது பற்றி திருக்குர்ஆனிலும் வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களை இவ்வாறு கூறுமாறு அல்லாஹ் கூறுகின்றான்.

நான் பொய் கூறுபவனோ, இட்டுக்கட்டி கூறுபவனோ அல்லன். இதற்கு முன்னர் நாற்பது வருடங்களாக நான் உங்கள் மத்தியில் வாழ்ந்திருக்கின்றேன். அந்த நாட்களில் நான் பொய் கூறியதாகவோ அல்லது இட்டுக்கட்டியதாகவோ உங்களால் நிரூபிக்க முடியுமா?

இந்த விஷயத்தைக்கூட உங்களால் புரிந்து கொள்ள முடியாதா ? எந்த மனிதர் இன்று வரை எந்த பொய்யையும் கூறவில்லையோ அவர் இப்போது இறைவன் மீது ஏன் பொய் கூற வேண்டும் என்பது உங்களுக்கு புரியவில்லையா ? என்று பெருமானார் (ஸல்) அவர்களை இறைவன் கூறும்படி கூறினான்.

சுருக்கமாக, நபிமார்களின் வாழ்நாட்களில் நடக்கின்ற சம்பவங்களும் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதும் எவ்வளவு தெளிவாக நிரூபிக்கப் –பட்டிருக்கின்றது என்றால் மற்ற அனைத்து விஷயங்களை விட்டுவிட்டு அவர்களது சம்பங்களை மட்டுமே பார்த்தாலுமே அந்த நபிமார்களின் உண்மை அந்த சம்பவங்கள் மூலமாக தெளிவாக தெரிந்து விடும்.




உதாரணமாக, நீதியின் பார்வையுடன் பார்க்கின்ற ஒருவரும், அறிவுள்ள ஒருவரும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் உண்மைக்கு சாதகமான எல்லா தெளிவுகளையும் ஆதாரங்களையும் பார்க்காமல் அவர்களது வாழ்வின் நிலைமைகளை மட்டும் சிந்திப்பதாக இருந்தால் அதன் மூலமாக அவர்களுக்கு உண்மையான நபி பற்றிய உறுதி உள்ளத்தில் ஏற்பட்டு விடும். அவர்கள் எவ்வாறு அப்படி உறுதி கொள்ளாமல் இருக்க முடியும். இந்த சம்பவங்கள் எந்த அளவு முழுமையான உண்மையையும், தூய்மையையும் கொண்டதாகவும் அதனால் நறுமணம் கமழத்தக்கதாகவும் இருக்கின்றதென்றால் உண்மையை தேடுபவர்களின் உள்ளத்தை அவர்களையும் அறியாமல் அது அந்த நபிமார்களின் பக்கம் ஈர்த்து கொண்டு வருகிறது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 107–108)

பெருமனார் (ஸல்) அவர்களின் உண்மைக்கு அவர்களது குழந்தைப் பருவமும் சாட்சியாக இருக்கின்றது. அவர்களது இளமைப் பருவமும் சாட்சியாக இருக்கின்றது. அவர்களுக்கு நபித்துவம் கிடைத்த பிறகு அதன் மகிமை அதன் உச்சத்தை அடைந்து விட்டது. எனவே இந்த நபியை ஏற்றுக் கொண்டவர்களும் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டியது அவசியமாகும். நமது உண்மையின் தரம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்களின் இன்னொரு சீறிய பண்பான பணிவு மற்றும் தாழ்மை குணத்தின் மிக உயர்வான தரத்தை பற்றி குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பாருங்கள் ! நமது நபியே கரீம் (ஸல்) அவர்களது வெற்றிகளைப் பற்றி நாம் பார்ப்பதாக இருந்தால் இதற்கு முன்னுள்ள நபிமார்களிடம் அதற்கு இணையான ஒன்றை நம்மால் பார்க்க முடியவில்லை. ஆனால் அன்னாருக்கு அல்லாஹ் எந்த அளவிற்கு வெற்றியை வழங்கினானோ அந்த அளவுக்கு அவர்கள் பணிவை மேற்கொண்டார்கள்.

ஒருமுறை ஒரு நபர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் பிடித்துக் கொண்டு வரப்பட்டார். அவர் மிக அதிகமாக நடுங்குவதையும் பயப்படுவதையும் பெருமானார் (ஸல்) அவர்கள் கண்டார்கள். ஆனால் அந்த நபர் அவர்களுக்கு அருகில் வந்ததும் அவர்கள் மிகவும் மென்மையுடனும் கருணையுடனும் நீங்கள் ஏன் இவ்வளவு அஞ்சுகின்றீர்கள்? நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதனே ஆவேன். ஒரு மூதாட்டியின் மகனாவேன் என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 258. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)

இன்னொரு நபிமொழியின் மூலமாகவும் நமக்கு பெருமானார் (ஸல்) அவர்களின் பணிவைப் பற்றி தெரிய வருகின்றது. அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் எவ்வாறு தங்களது வாழ்க்கையை கழிக்க வேண்டும் என்பதைப் பற்றி அதில் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உங்களில் எவரும் தமது நற்செயல்களின் காரணமாக இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியாது. அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! உங்களுக்கும் இதே நிலை தானா ? என்று சஹாபாக்கள் கேட்டனர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நானும் எனது செயல்களின் காரணமாக இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் என்னை தனது கருணையின் நிழலின் கீழ் கொண்டு வந்து விடுவான் என்று கூறினார்கள். மேலும் நீங்கள் நேராக இருங்கள். ஷரீஅத்திற்கு அருகில் இருங்கள். காலையிலும் மாலையிலும் இரவு நேரங்களிலும் இறைவனை வணங்குங்கள். நடு நிலையைப் பேணுங்கள். அவ்வாறு நீங்கள் நடந்து கொண்டால் நீங்கள் உங்களது குறிக்கோளை அடைந்து விடுவீர்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சஹீஹுல் புகாரி கிதாபுர் ரிகாக் பாபுல் கஸதி வல் முதாவமத்தி அலல் அமலி ஹதீஸ் 6463)

**நபிமொழியிலிருந்து**

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக வீரமிக்கவரையும், கண்ணியத்திற்குரியவரையும், தாராளமாக வழங்குபவரையும், ஒளிமயமானவரையும் கண்டதே இல்லை. (சுனன் அத்தாரமி)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

எந்த நபியைப் பற்றி அல்லாஹ் அவரிடம் பைஅத் செய்வது என்னிடம் பைஅத் செய்வதாகும் என்றும் அவரது கை எனது கையாகும் என்றும் கூறியுள்ளானோ அவருக்கு அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமும் அவர் மேற்கொண்ட பணிவின் நிலையும் இவ்வாறு இருக்கின்றது. அதாவது நானும் கூட அல்லாஹ்வின் கருணை மற்றும் அருள்களினாலேயே மன்னிக்கப்படுவேன் என்று அவர்கள் கூறினார்கள். மேலும் நீங்கள் உங்களது செயல்களின் பக்கம் உங்களது பார்வையை வைத்திருங்கள். உங்களின் இறை வணக்கத்தின் பக்கம் உங்களது பார்வையை வைத்திருங்கள். ஒருபோதும் உங்களது இறைவனிடம் நன்கேடு காட்டுபவர்களாக நீங்கள் இருக்கக்கூடாது. ஒருபோதும் இறை வணக்கங்களை செய்வதிலிருந்து கவனமற்றவர்களாக நீங்கள் இருக்கக் கூடாது என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள்.

பிறகு வெற்றி கிடைத்த சமயத்தில் அவர்கள் மேற்கொண்ட பணிவு மற்றும் கடைபிடித்த தாழ்மை குணத்தின் காட்சியை பாருங்கள். உலகத் தலைவர்களுக்கு வெற்றிகள் கிடைக்கும் போது அவர்கள் ஃபிர்அவ்ன்களாக மாறி விடுகின்றனர். இன்னும் சொல்வதென்றால், ஒரு சாதாரண மனிதனுக்கு கூட வெற்றி கிடைக்கும் போது அவரது தலை பெருமையாலும், கருவத்தாலும் உயர்ந்து நிற்கின்றது. ஆனால் முழுமை பெற்ற மனிதரின் முன்மாதிரி எவ்வாறு இருந்தது. எந்த நகரத்தில் அவர்கள் வாழ்ந்து வந்தார்களோ அந்த நகரத்தைச் சார்ந்தவர்களே அவர்கள் மீது அநீதி இழைத்தவாறு அவர்களையும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களையும் அங்கிருந்து வெளியேற்றி விட்டனர். தொடர்ந்து இஸ்லாத்தை உலகிலிருந்து அழித்து விடுவதற்காக அவர்கள் முயற்சி செய்து வந்தனர். ஆனால் இறைவன் எதை விரும்புகின்றானோ மேலும் எதைப் பற்றி அவன் முடிவெடுக்கின்றானோ அதுவே நடக்கின்றது.

எனவே அல்லாஹ்வின் நியதிக்கேற்ப பெருமனார் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்ட அந்த நேரமும் வந்தது. அவர்கள் அந்த நகரத்தில் வெற்றி வீரராக நுழைந்தார்கள். ஆனால் அப்போது அவர்களது நிலை எவ்வாறு இருந்தது. வரலாறு அதைப் பற்றி இவ்வாறு கூறுகின்றது.

பெருமானார் (ஸல்) அவர்கள் பத்தாயிரம் பரிசுத்தவான்களோடு வெற்றி வீரராக மக்காவில் நுழைந்தார்கள். (சீரத் இப்னு ஹிஷாம் பாபு இத்ததும் மன் ஃபதஹ மக்கா மினல் முஸ்லிமீன் பக்கம் 750. பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் 2001ல் அச்சிடப்பட்டது)

அந்த நாள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய நாளாகவும் அவர்களது மகிமையை வெளிப்படுத்தும் நாளாகவும் இருந்தது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் இந்த அருள்களை வெளிப்படுத்திக் காட்டுவதில் இறைவனது வழியில் பணிவின் உச்ச நிலையை அடைந்திருந்தார்கள். இறைவன் அவர்களை எந்த அளவு உயர்த்தினானோ அந்த அளவு அவர்கள் அவன் முன்னால் குனிந்து கொண்டே இருந்தார்கள். வெற்றி விரராக அவர்கள் மக்காவில் நுழைந்த போது அவர்களது தலை குனிந்து குனிந்து ஒட்டகத்திலிருந்து பல்லக்கை தொட்டு விட்டது. (சீரத் இன்னு ஹிஷாம். பாபு இஸ்லாம் அபி சுஃப்யான் பக்கம் 740. பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் 2001ல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்கள்: இறைவனது குறிப்பான அடியார்களுக்கு வழங்கப்படுகின்ற வெற்றி தாழ்மையின் வடிவில் வெளிப்படுகின்றது. ஷய்த்தானுக்கு கிடைக்கின்ற வெற்றி கர்வத்துடன் கலந்திருக்கின்றது. அதாவது ஷய்த்தான் வெற்றி கிடைக்கும் போது ஆணவம் கொள்கின்றான்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: பாருங்கள்! நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்ட போது அதே மக்காவில் அவர்கள் எல்லா வகையிலும் எதிர்க்கப்பட்டு அன்னார் மீது துன்பங்கள் இழைக்கப்பட்ட துன்பமும் துயரமும் நிறைந்த அந்நாட்களில் இறைவன் முன்னால் குனிந்தது போன்றும், சஜ்தா செய்தது போன்றும் வெற்றியின் சமயத்திலும் அவர்கள் இறைவன் முன் குனிந்தார்கள். சஜ்தா செய்தார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 65 அடிக்குறிப்பு. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)




ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பணிவை பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு அறிவுரை கூறுகின்றார்கள்: வெறுமனே பெருமை கொள்வதிலிருந்தும், பொருத்தமற்ற ஆணவத்திலிருந்தும், பெருமையிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். பணிவையும் தாழ்மை குணத்தையும் கடைபிடிக்க வேண்டும். பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே எல்லாரையும் விட உயர்ந்தவர்களாகவும் கண்ணியமிக்கவர்களாகவும் இருந்தார்கள். அவர்களது பணிவு மற்றும் தாழ்மை குணத்தை பற்றிய ஒரு முன்னுதாரணம் திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது.

ஒரு பார்வையற்றவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து திருக்குர்ஆனை கற்று வந்தார். ஒரு நாள் அவர்களுக்கு அருகில் மக்காவிலுள்ள முக்கிய பிரமுகர்களும் நகரத்தின் தலைவர்களும் அமர்ந்திருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்ததன் காரணமாக சிறிது நேரம் கழிந்த பிறகு அந்த பார்வையற்ற அவர் அந்த இடத்திலிருந்து எழுந்து சென்று விட்டார். இதுவொரு சாதாரண விஷயமாகும். அல்லாஹ் இது பற்றி ஓர் அதிகாரத்தை இறக்கினான். உடனடியாக பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நபரின் வீட்டிற்கு சென்று அவரை தன்னுடன் அழைத்து வந்து தனது அருளுக்குரிய போர்வையை விரித்து அதில் அவரை அமர வைத்தார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு ஃபார்ஸி சொற்றொடரை கூறுகின்றார்கள். அதன் பொருள் இதுவாகும்.

இறைவனைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் அவனை நன்றாக அடையாளங்கண்டு வைத்திருக்கின்றனர். அவனுக்கு அதிகமாக அஞ்சுகின்றனர். ஏனென்றால் எவ்வாறு அல்லாஹ் வழங்கக் கூடியவனாக இருக்கின்றானோ அவ்வாறே அவன் பிடிக்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். சில விஷயங்களில் அவன் நுட்பமான பார்வையுடன் செயல்படும் வாய்ப்பை நமக்கு வழங்கினாலும் சில விஷயங்களில் அவன் நம்மை பிடிக்கவும் செய்கின்றான்.

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அவன் நமது ஏதாவதொரு செயலின் காரணமாக வெறுப்படைந்து விட்டால் ஒரு நொடிப்பொழுதில் அவன் எல்லாவற்றையும் அழித்து விட முடியும்.

தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த விஷயங்களை சிந்தனை செய்யுங்கள். அவற்றை நினைவில் வைத்திருங்கள். அதற்கேற்ப செயல்படுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 343–344. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்களது அழகிய நற்பண்புகள் அனைத்துமே முழுமையான நற்பண்புகளாக திகழ்கின்றன. அவை அனைத்தையும் ஒரு சபையில் அல்லது பல சபைகளிலும் கூட எடுத்துக் கூறிவிட முடியாது. இப்போது நான் அவர்களிடம் காணப்படும் இன்னொரு அழகிய அம்சத்தை பற்றி எடுத்துக் கூறுகின்றேன். அது அவர்களது வள்ளல் தன்மை பற்றியதாகும்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக வீரமிக்கவரையும், கண்ணியத்திற்குரியவரையும், தாராளமாக வழங்குபவரையும், ஒளிமயமானவரையும் கண்டதே இல்லை. (சுனன் அத்தாரமி பாபு ஃபி ஹுஸ்னின் நபி (ஸல்). ஹதீஸ் 60. பைரூத்திலுள்ள தாருல் மஃரிஃபத்தில் 2000 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது)



பெருமானார் (ஸல்) அவர்களது நற்பண்புகளை எடுத்துக் கூறுவதற்கான ஆற்றல் சஹாபாக்களிடமும் இல்லை என்று தெரிகிறது. ஓர் உயரிய பண்பை எடுத்துக் கூற முயற்சிக்கும் போது மற்ற பல பண்புகள் அவர்களுக்கு முன்னால் வந்து விடுகின்றன. எதை கூறுவது ? எதை விட்டு விடுவது ? என்று அவர்களுக்கு தெரியவில்லை.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்களிடம் சில அன்ஸார் எதையாவது கொஞ்சம் வழங்குமாறு வேண்டினர். அன்னார் அவர்களுக்கு வழங்கினார்கள். அன்ஸார் மீண்டும் கேட்டார்கள். மீண்டும் வழங்கினார்கள். மீண்டும் அவர்கள் கேட்டனர். மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள். எதுவரை என்றால் அவர்களிடம் இருந்ததெல்லாம் முடிந்து விட்டது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம் என்ன செல்வம் இருக்கின்றதோ அதை நான் உங்களுக்கு வழங்காமல் தடுத்து வைத்திருப்பதில்லை என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுஸ் ஸக்காத் பாபுல் இஸ்திஃபாஃபி அனில் முஸ்லிமா. ஹதீஸ் 1469)

ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்களிடம் எங்கிருந்தோ 90,000 திர்ஹம்கள் வந்தன. அவர்கள் அதனை அங்கேயே பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். (உயூனில் அஸர் தொகுதி 2 பக்கம் 398. பாபு ஸிக்ரி ஜமலுன் மினல் கிலாகா. பைரூத்திலுள்ள தாருல் ஹிக்மில் 1993 ல் அச்சிடப்பட்டது)

ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளத்தாக்கு முழுவதும் பரவியிருந்த ஆடுகளின் ஒரு பெரும் மந்தையை அவர்களிடம் வந்த ஒரு நபருக்கு வழங்கினார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில் ஹதீஸ் 2312)

ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் பஹ்ரைனிலிருந்து பெருள்கள் கொண்டு வரப்பட்டன. அப்பொருள்கள் குவியல் குவியல்களாக இருந்தன. பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் அவற்றை குவித்து வைத்திருந்தார்கள். அவர்கள் தொழுகைக்காக வந்தபோது அதன் பக்கம் பார்க்கவே இல்லை. தொழுகை முடித்த பிறகு அவர்கள் அந்த எல்லா செல்வங்களையும் பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். (சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸலாத் ஹதீஸ் 421)

அவர்களது மென்மை குணம் மற்றும் வள்ளல் தன்மையின் காரணமாக காட்டரபிகள் கூட சில நேரங்களில் மிகவும் அவமரியாதையாக நடந்து கொண்டவாறு அவர்களிடம் ஏதாவது வழங்குமாறு வேண்டினர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களிடம் எல்லா விதமான சக்தியும் இருந்தும் கூட ஆட்சியிருந்தும் கூட அவர்கள் அவமரியாதையாக நடந்து கொண்டதை அவர்கள் பொருட்படுத்தவே இல்லை. அவர்களுக்கு எதையாவது வழங்கியே வந்தார்கள். (சஹீஹ் புகாரி, கிதாபில் ஜிஹாதி வஸ்ஸைர். ஹதீஸ் 2821, சஹீஹ் புகாரி கிதாபுல் லிபாஸ் ஹதீஸ் 5809)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கருத்தை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: நபிமார்கள் மீதும் இறை நேசர்கள் மீதும் வறுமையின் காலமும் வருகின்றது. வசதி நிறைந்த வெற்றிகள் கிடைக்கின்ற காலமும் வருகின்றது. இந்த இரு காலகட்டங்களும் வருவது அவசியமானதாகும். அதன் மூலமாக எல்லா நிலைமைகளிலும் அவர்கள் வெளிப்படுத்தும் முன்மாதிரி உலகத்தின் முன்னால் வர வேண்டும். ஓர் உலகவாதி வறுமை மற்றும் பலகீனமான காலகட்டத்தில் பணிவுடன் நடந்து கொள்பவராக இருக்கின்றார். துன்பங்களில் வீழ்கின்ற போது அல்லாஹ்வின் பக்கம் அவர் குனிகின்றார். மக்களிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளவும் செய்கின்றார். தனக்கு கிடைத்திருக்கும் வசதி வாய்ப்பிற்கேற்ப ஏழைகளுக்கு உதவியும் செய்கிறார். தனக்கு துன்பம் இழைத்தவர்களுக்கு எதிராக எதிர் நடவடிக்கையில் ஈடுபட அவருக்கு சக்தி இல்லாததன் காரணமாக அமைதியாக இருக்கின்றார். நாம் பொறுமையை கடைபிடிக்க வேண்டும் என்று அவர் கூறுகின்றார். ஆனால் ஆட்சியும், அதிகாரமும் அவரிடம் வரும் போது மக்களை கருத்தில் கொள்வதும், உயர்வான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுவதும், பிறரை மன்னிப்பதும் தான் உண்மையான நற்பண்பாகும்.

எனவே பலகீனமான நிலையும் ஆற்றல் கிடைத்த நிலையும் உண்மையில் ஒருவரது உயர்வான நல்லொழுக்கத்தை அளக்கின்ற கருவியாக இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆற்றலைப் பெறுவதும், வெற்றி கிடைப்பதும் அவசியமானதாகும். ஏனென்றால் தனக்கு துக்கம் இழைத்தவர்களின் பாவங்களை மன்னிப்பதும், தனக்கு தொல்லை தந்தவர்களை கண்டும் காணாமல் விட்டு விடுவதும், தனது எதிரிகளிடம் அன்பு காட்டுவதும், தனக்கு தீங்கு விளைவிப்பவர்களுக்கு நல்லதை நாடுவதும், நல்லதை செய்வதும் செல்வத்தின் மீது பற்று வைக்காமல் இருப்பதும், செல்வம் கிடைத்ததினால் ஆணவம் கொள்ளாமல் இருப்பதும், செல்வந்தராக இருக்கும் நிலையில் செல்வத்தை தடுத்து வைத்துக் கொண்டு கருமித்தனம் காட்டாமல் இருப்பதும், தாராளமாக வள்ளல் தன்மையை வெளிப்படுத்தியவாறு பிறருக்கு வழங்குவதற்காக கதவுகளை திறந்து வைத்திருப்பதும், செல்வத்தை மன இச்சைகளை நிறைவேற்றுவதற்கான வழியாக ஆக்கிக் கொள்ளாமல் இருப்பதும், ஆட்சியை அநீதி இழைத்தல், பிறர் மீது கொடுமை இழைத்தல் ஆகியவற்றிற்கான வழியாக ஆக்கிக் கொள்ளாமல் இருப்பதும் ஆகிய இவை அனைத்தும் எத்தகைய நற்பண்புகளாக இருக்கின்றனவென்றால் இவற்றை நிரூபித்துக் காட்டுவதற்கு ஒருவர் செல்வம் படைத்தவராகவும், ஆற்றல் உள்ளவராகவும் இருப்பது நிபந்தனையாகும். அப்போது தான் இவற்றை அவரால் நிரூபிக்க முடியும். மனிதனிடம் செல்வம் அதிகாரம் ஆகிய இரண்டும் இருக்கும் போதுதான் இவற்றை அவனால் நிரூபிக்க முடியும்.

எனவே, துன்பங்களின் காலகட்டமும் செல்வமும் அதிகாரமும் இருக்கும் காலகட்டமும் வர வேண்டியது அவசியமானதாகும். அது அல்லாமல் இந்த இரு வகையான நல்லொழுக்கங்களும் வெளிப்பட முடியாது.

எனவே, இறைவனது நுட்பமான ஞானமானது நபிமார்கள் மீதும் இறைநேசர்கள் மீதும் இந்த இரு வகையான நிலைமைகளும் வர வேண்டும் என்பதை விரும்புகின்றது. இதற்காக ஆயிரக்கணக்கான அருட்கொடைகள் நிரம்பிய நிலைமை வர வேண்டும். ஆனால் இந்த இரு நிலைமைகளும் ஏற்படும் காலகட்டம் ஒவ்வொருவருக்கும் ஒரே வரிசைக் கிரமத்தில் வருவதில்லை. மாறாக, இறைவனின் நுட்பமான ஞானத்தின் அடிப்படையில் சிலருக்கு அமைதி மற்றும் வசதியின் காலகட்டம் அவரது வாழ்நாளில் முதலில் வருகிறது. கஷ்டத்தின் காலகட்டம் அதற்குப் பிறகு வருகிறது. சிலருக்கு கஷ்டம் மற்றும் துன்பத்தின் காலகட்டம் முதலில் வருகிறது. பிறகு இறுதியில் இறைவனின் உதவி அவர்களுக்கு கிடைக்கின்றது. சிலரிடம் இந்த இரண்டு நிலைமைகளுமே மறைவாகவே இருக்கின்றது. சிலரிடம் முழுமையான நிலையில் அது வெளிப்படுகின்றது. இதில் எல்லாரையும் விட முதல் தரத்தில் ஹஸ்ரத் காத்தமுர் ருசுல் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் மீது இந்த இரு நிலைமைகளும் மிகத் தெளிவாக வெளிப்பட்டுள்ளன. எந்த வரிகைக் கிரமத்திற்கேற்ப அவை வந்தன என்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் எல்லா உயரிய நல்லொழுக்கங்களும் சூரியனைப் போன்று ஒளி வீசின.

اِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ நீர் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர் (அல் கலம்:5) என்பதை நிரூபிக்கும் வகையில் அவை உள்ளன. பெருமானார் (ஸல்) அவர்களிடம் இந்த இரு காலகட்டத்திலும் வெளிப்படும் நல்லொழுக்கங்கள் முழுமையான முறையில் இருந்தது நிரூபிக்கப் –பட்டிருக்கின்றது. இது எல்லா நபிமார்களின் நல்லொழுக்கத்தையும் நிரூபிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் பெருமானார் (ஸல்)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த ஓர் இறையறிவிப்பு**

صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ سَیِّدِ وُلْدِ اٰدَمَ وَخَاتَمِ النَّبِیِّیْنَ

முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் ஸலவாத் ஓதுங்கள். அவர் ஆதமின் மக்களின் தலைவரும், நபிமார்களின் தலைசிறந்தவரும் ஆவார்.

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி மற்றும் குடும்பத்தினர் (திட்டச்சேரி)**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

அன்பான இறைவா ! இந்த அன்பான நபி (ஸல்) மீது உனது கருணையையும் அருளையும் பொழிவாயாக. உலகம் தோன்றிய நாள் முதல் நீ எவர் மீதும் செய்திராத அளவில் இவர்கள் மீது கருணையையும் அருளையும் பொழிவாயாக. (இத்மாமுல் ஹுஜ்ஜா)

**மர்ஹூம் முஹம்மது சாலிஹ் மற்றும் குடும்பத்தினர் (மேலப்பாளையம்)**

அவர்கள் அந்த அனைத்து நபிமார்களையும் உண்மைப்படுத்தியுள்ளார்கள். அவர்களுக்கு இறக்கப்பட்டட வேதங்களையும் உண்மைப்படுத்தி –யுள்ளார்கள். அவர்கள் இறைவனுக்கு நெருக்கமானவர்கள் என்பதையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 282 – 285. அடிக்குறிப்பு நம்பர் 11)

நன்றியுணர்வு என்பது இன்னொரு உயரிய நற்பண்பாகும். இதைப்பற்றிய சரியான அறிவும் இதன் உயர்ந்த தரமும் நமக்கு பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியில் தெரிய வருகிறது. அவர்கள் அல்லாஹ்விற்கு நன்றி தெரிவிப்பதிலும் மிக உயர்வான முன்மாதிரினை நிலைநாட்டினார்கள். அவ்வாறே அடியார்களுக்கு நன்றி தெரிவிப்பதிலும் மிக உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். அல்லாஹ்வே! என்னை உனக்கு நன்றி செலுத்துபவனாகவும் உன்னை நினைவுகூறுபவனாகவும் ஆக்கி விடு என்று அன்னார் துஆ செய்து வந்தார்கள். (சுனன் அபி தாவூத். அப்வாபுல் வித்ர். பாபு மாயகூலா ரஜுலு இதா ஸல்லம ஹதீஸ் 1510)

முதலில் மழை பெய்யும் போது அதன் முதல் துளியை அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி கூறும் வகையில் தனது நாவில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஏந்திக் கொள்வார்கள். இதுவே அவர்களது வழிமுறையாக இருந்து வந்தது. அவர்களது உணவு மிகவும் எளிமையானதாக இருந்தது. ஆனால் உணவு உண்ட பிறகு அவர்கள் அல்லாஹ்வுக்கு மிக அதிகமாக நன்றி செலுத்தி வந்தார்கள். அதற்காக துஆவையும் அவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். சில நேரங்களில் ஒரு பேரீத்த பழத்துடன் அவர்கள் ரொட்டியை சாப்பிட்டிருக்கின்றார்கள். சில நேரங்களில் வினாக் கரியை அவர்கள் கூட்டாக வைத்துக் கொண்டு ரொட்டியை சாப்பிட்டுள்ளார்கள். உண்பதற்கும் குடிப்பதற்குமுரிய வழிவகைகளை ஏற்படுத்தி தந்தமைக்காக அல்லாஹ்விற்கு அவர்கள் நன்றி கூறியுள்ளார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் அத்யிமா பாபு மா யகூலு இதா ஃபரக மின் தஆமிஹி ஹதீஸ் 5459)

புதிய ஆடையை அணியும் போது அவர்கள் அல்லாஹ்விற்கு நன்றி கூறியுள்ளார்கள். (சுனன் திர்மதி, கிதாபுல் லிபாஸ் பாபு மா யகூல இதா லவிஸ ஸவ்பன் ஜதீதன் ஹதீஸ் 1767) சுருக்கமாக, எந்தவொரு பொருளை பயன்படுத்துவதற்கு முன்னதாகவும் அவர்களை அல்லாஹ்வை புகழாமலும் அவனுக்கு நன்றி செலுத்தாமலும் இருந்ததில்லை. அவர்கள் தமது இறை வணக்கங்களில் மிக அதிகமாக அழுது மன்றாடுவதை பார்த்து விட்டு இறை வணக்கத்திற்காக நிற்கும் போது அவர்களது கால்கள் வீங்கி விடுவதையும் சஜ்தாக்களில் மிகவும் நிம்மதி இழந்த நிலையில் அவர்கள் இருப்பதையும் தரை அவர்களது கண்ணீரால் ஈரமாகி விடும் அளவிற்கு அவர்கள் அழுவதையும் பார்த்து விட்டு அல்லாஹ் கடந்த காலத்திலும் வருங்காலத்திலும் உங்களது எல்லா பாவங்களையும் மன்னித்து விட்டான். உங்களிடமிருந்து எந்தவொரு பாவமும் இதற்கு முன்னரும் நிகழ்ந்ததில்லை. இனியும் நிகழாது. பிறகு நீங்கள் இந்த அளவு அழுது மன்றாடுவதன் காரணம் என்ன ? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் நான் நன்றியுள்ள ஒரு அடியானாக இருந்தவாறு அவன் இந்த அளவு எனக்கு வழங்கியிருப்பதற்காக நன்றி செலுத்தியவாறு அவன் முன்னால் அழாமல் எவ்வாறு இருக்க முடியும் ? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சஹீஹ் புகாரி, கிதாபுல் தஃப்ஸீருல் குர்ஆன் பாபு லியஃபிர கல்லாஹு மா தகத்தமா மின் ஸம்பிக ஹதீஸ் 4836)

அடியார்களுக்கு நன்றி செலுத்துவதில் பெருமானார் (ஸல்) அவர்களது தரம் எவ்வாறு இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு நண்பராக இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு கடினமான தருணத்திலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்திருக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் கூட அவர்களது உணர்வுகளை அதிகமாக கருத்தில் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு முறை ஒரு நபர் ஏதோவொரு ஒரு கருத்து வேறுபாட்டின் காரணமாக ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களைப் பற்றி ஏதோ ஒன்றை கூறினார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ் என்னை நபியாக அனுப்பிய போது எல்லாரும் என்னை பொய்யர் என்று கூறினர். அபூபக்கர் அவர்கள் எனது உண்மைக்கு சாட்சி பகர்ந்தார்கள். தனது உயிராலும் செல்வத்தாலும் எனக்கு உதவி செய்தார்கள். என்ன நீர் எனது தோழரின் உள்ளத்தை புண்படுத்துவதிலிருந்தும் விலகிவிட மாட்டீரா? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் என்மீது எல்லாரையும் விட அதிகமாக அபூபக்கரின் பேருபகாரம் இருக்கின்றது என்றும் கூறினார்கள். (சஹீஹ் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர் பாபு குல் யா அய்யுஹன்னாஸு இன்னி ரஸூலுல்லாஹி இலைக்கும் ஜமீஆ ஹதீஸ் 466)

பெருமானார் (ஸல்) அவர்கள் மீது யார் பேருபகாரம் செய்திருக்க முடியும் ? அவர்களுக்காக எந்த தியாகத்தை செய்திருந்தாலும் தியாகத்தை செய்பவர்களுக்கே அதில் பெருமை இருக்கின்றது.

பிறகு வெளிப்படையாக பார்க்கும்போதும் ஒருவர் செய்த தொண்டிற்கான சிறந்த பிரதியுபகாரத்தை மிகவும் அதிகமாக அவர்கள் செய்துள்ளார்கள். அவ்வாறு இருந்தும் கூட நன்றியுணர்வை அவர்கள் வெளிப்படுத்தியே வந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தொடர்பாக அவர்களைப் புகழ்ந்து பேசுவதை கேட்டு விட்டு நீங்கள் எப்போதும் அந்த மூதாட்டியைப் பற்றி தான் குறிப்பிட்டுக் கொண்டிக்கின்றீர்கள். ஆனால் அல்லாஹ்வோ அவர்களை விட சிறந்த மனைவியரை உங்களுக்கு வழங்கி இருக்கின்றான் என்று கூறினார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், மக்கள் என்னைப் பொய்ப்படுத்திய போது கதீஜா என்னை ஏற்றுக் கொண்டார். மக்கள் என்னை மறுத்த போது அவர் என்மீது நம்பிக்கை கொண்டார். செல்வத்தை இழந்தவனாக நான் ஆன போது அவர்கள் தனது செல்வத்தால் எனக்கு உதவி செய்தார்கள். சந்ததிகளையும் கூட அல்லாஹ் அவர்கள் மூலமாகவே எனக்கு வழங்கினான் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வகையில் பெருமானார் (ஸல்) அவர்கள் தனது கணவருக்காக கதீஜா (ரலி) அவர்கள் செய்த தொண்டுகளை ஒருபோதும் மறக்கவில்லை. அதனை பேருபகாரமாக கருதினார்கள். எப்போதும் அதற்காக நன்றி செலுத்தி வந்தார்கள்.

மனைவிமார்களின் செல்வத்தை விழுங்கி விடுகின்ற கணவர்களுக்கு இதில் படிப்பினை இருக்கின்றது. பார். இன்று வரை நான் உனக்கு மனைவி என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளேன் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களுக்கு இதில் படிப்பினை இருக்கின்றது.

பிறகு நஜ்ஜாஷி என்ற அரசர் காஃபிர்கள் இழைக்கும் அநீதிகளை பொறுத்துக் கொள்ளாமல் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்த முஸ்லிம்களுக்கு தனது நாட்டில் அடைக்கலம் கொடுத்தார். ஹப்ஷாவின் அரசராக இருந்த நஜ்ஜாஷி என்ற இந்த அரசர் செய்த பேருபகாரத்தை பெருமானார் (ஸல்) அவர்கள் எப்போதும் நினைவில் வைத்திருந்தார்கள். தனது சொல்லாலும் செயலாலும் இதற்காக தனது நன்றியுணர்வை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

ஒரு முறை இந்த அரசரின் குழு ஒன்று பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தது. அப்போது அவர்களை வரவேற்பதற்காக சுயமே பெருமானார் (ஸல்) அவர்களே எழுந்து நின்றார்கள். சஹாபாக்கள் அவர்களை வரவேற்பதற்கு நாங்களே போதுமான அளவு இருக்கின்றோம். அதற்காக நாங்கள் நிற்கின்றோம் என்று கூறினர். அதற்கு பெருமானார்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

இந்த அரபி நபி எந்த அளவு உயர்வான தகுதியை பெற்ற நபியாக இருக்கின்றார். அவரது பெயர் முஹம்மது ஆகும். ஆயிரக்கணக்கான தரூதும் ஸலாமும் அவர்கள் மீது உண்டாவதாக. அவர்களது உயர்ந்த அந்தஸ்தின் உச்சத்தை எவரும் அறிந்து கொள்ள முடியாது.
(ஹகீக்கத்துல் வஹீ)

**A.பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

எந்த நபருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழைப்பு எட்டி விட்டதோ அன்னாரது வருகை பற்றி தகவல் தெரிந்து விட்ட பிறகு..... அவர் அதனை மறுக்கின்ற நிலையில் மரணித்தால் பிறகு எப்போதும் நரகின் தண்டனையைப் பெறுபவராக அவர் ஆகி விடுவார். (ஹகீகத்துல் வஹீ)

**பீ.ஜே.சுலைமான் மற்றும் குடும்பத்தினர்**
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், கோயம்புத்தூர்.

(ஸல்) அவர்கள் இந்த அரசர் நமது தோழர்களுக்கு மதிப்பளித்தார். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார். எனவே அவர் செய்த நன்மைக்கு பிரதியுபராகம் செய்யும் வகையில் இவ்வாறு நடந்து கொள்வதை நான் விரும்புகின்றேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 72)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களை நல்லொழுக்கத்தை கற்றுத் தரும் ஆசிரியராகவும் நாம் பார்க்கின்றோம். அதில் வியக்கத்தக்க மகிமையுள்ள காட்சிகளை நம்மால் பார்க்க முடிகின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்கள் குட்டையாக இருப்பதை சுட்டிக் காட்டியவாறு கேலி செய்யும் வகையில் எதையோ கூறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் ஆயிஷாவே! நீ கூறிய வார்த்தை எத்தகையது என்றால் அதைக் கடலில் கலந்தாலும் அதைக் கூட அது அழுக்காக்கி விடும் என்று கூறினார்கள். (சுனன் திர்மதி. கிதாப் ஸிஃபத்துல் கியாமா ஹதீஸ் 2502)

குழந்தைகளின் தர்பிய்யத் மற்றும் அவர்களுக்கு நல்லொழுக்கத்தை கற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரி நம்முன் இருக்கின்றது.

நபித்தோழரான அப்துல்லாஹ் பின் ஆமிர் அவர்கள் அறிவிக்கின் –றார்கள்: ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். நான் அப்போது சிறுவனாக இருந்தேன். நான் விளையாடுவதற்காக வெளியே சென்றேன். அப்போது எனது தாய் என்னை அழைத்து அப்துல்லாஹ்வே ! இங்கே வா. நான் உனக்கு ஒரு பொருளை தருவேன் என்று கூறினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் அவருக்கு எதையாவது கொடுக்க விரும்புகின்றீர்களா? என்று எனது தாயாரிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் நான் பேரீத்தம் பழத்தை கொடுப்பேன் என்று கூறினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே அவனுக்கு எதையாவது கொடுக்கும் எண்ணம் உங்களுக்கு இல்லாமலும், குழந்தையை சமாளிப்பதற்காக நீங்கள் பொய் கூறி இருந்தால் அது பாவமாகி விடும். பொய் அல்லாஹ்வின் பார்வையில் மிகப்பெரிய பாவமாகும் என்று கூறினார்கள். (சுனன் அபீதாவூது, கிதாபுல் அதப் ஹதீஸ் 4991)

ஆக, உண்மையில் இந்த தரத்தை தான் பெருமானார் (ஸல்) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் நிலைநிறுத்த விரும்பினார்கள்.

அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் போதிக்கிறது. இது தொடர்பாகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு பயிற்சி வழங்கியுள்ளார்கள்.

ஒரு முறை ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! நான் நல்லதையே செய்கின்றேன். அல்லது தீயதை செய்கின்றேன் என்பதை எப்படி நான் தெரிந்து கொள்வது என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உமது அண்டை வீட்டுக்காரார்கள் உம்மை பற்றி நீர் மிகவும் நல்லவர் என்று கூறுவதை நீர் கேட்டால் உமது செயல் நல்லதாக இருக்கின்றது என்று அதற்கு பொருளாகும். உமது அண்டை வீட்டுக்காரார்கள் உம்மைப் பற்றி இவர் மிகவும் தீயவர் என்று நீர் கூறுவதை கேட்டால் நீங்கள் நடந்து கொள்ளும் விதம் தீயதாக இருக்கின்றது. நீங்கள் தவறிழைக்கின்றீர்கள் என்று அதற்குப் பொருள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனன் இப்னி மாஜா கிதாபுஸ் ஸுஹத் ஹதீஸ் 4222)

நான் கூறிய இவை அனைத்தும் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின் சில அம்சங்களாகும். எந்தவொரு உயர்வான நல்லொழுக்கத்திலும் பெருமானார் (ஸல்) அவர்கள் மிக உயர்ந்த தகுதியை பெற்றிருந்தார்கள். தன்னை ஏற்றுக் கொண்டவர்களும் அவர்களைப் போன்றே இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். நாம் நாவளவில் மட்டும் வாதம் செய்பவர்களாக இருந்து விடாமல் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரிக்கேற்ப நடந்தவாறு உண்மையான நற்செயல்களை செய்பவர்களாகவும் அவர்களைப் பின்பற்றி வாழ்பவர்களாகவும் அதன் மூலமாக நமது மன்னிப்பிற்கான வழிவகைகளை செய்து கொள்பவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை உங்கள் முன்னால் எடுத்து வைக்கின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த மனிதர் தனது இருப்பாலும், தனது பண்புகளாலும், தனது செயல்களாலும், தனது ஆன்மீக மற்றும் தூய ஆற்றல்களின் வேகமாக ஓடுகின்ற நதியின் மூலமாகவும் முழுமை பெற்ற ஒரு முன்மாதிரியை அறிவின் அடிப்படையிலும் செயலின் அடிப்படையிலும் உண்மையின் அடிப்படையிலும் உறுதியாக நிலை நிற்பதன் அடிப்படையிலும் நமக்கு காட்டியுள்ளார்கள். அதனால் அவர்கள் முழுமை பெற்ற மனிதர் என்று அழைக்கப்பட்டார்கள். அந்த மனிதர் எல்லாரையும் விட சிறந்த முழுமை பெற்ற மனிதராகவும் முழுமை பெற்ற நபியாகவும் திகழ்ந்தார்கள். முழுமையான அருள்களோடு அவர்கள் வந்தார்கள். அவர்களது ஆன்மீக தோற்றம் மற்றும் ஆன்மீக ஒன்று திரள்தல் ஆகியவற்றின் காரணமாக உலகில் முதல் கியாமத் வெளிப்பட்டது. மரணித்துப் போயிருந்த ஓர் உலகம் அவரது வருகையால் உயிர் பெற்றது. அந்த அருளுக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா, இமாமுல் அஷ்ஃபியா, கதமுல் முர்ஸலீன், ஃபக்ருன் நபிய்யீன் ஆக இருக்கின்ற ஜனாப் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

அன்பான இறைவா! இந்த அன்பான நபியின் மீது உனது கருணையையும் அருளையும் பொழிவாயாக. உலகம் தோன்றிய நாள் முதல் நீ எவர் மீதும் செய்திராத அளவில் இவர்கள் மீது கருணையையும் அருளையும் பொழிவாயாக. இந்த மகத்தான நபி உலகில் வராமல் இருந்திருந்தால் யூனுஸ், அய்யூப், மர்யமின் மகன் ஈஸா, மலாக்கி, யஹ்யா, ஸகரிய்யா போன்ற எண்ணற்ற சிறு சிறு நபிமார்களைப் பற்றி நமக்குத் தெரிந்திருக்காது. அவர்களது உண்மைக்கு நம்மிடம் எந்தவொரு ஆதாரமும் இருந்திருக்காது. இவர்கள் அனைவருமே இறைவனுக்கு நெருக்கமானவர்களாகவும் அவனது அன்பிற்குரியவராகவும் இருந்தாலும் இது அந்த நபியின் பேருபகாரமாகும். ஏனென்றால் அவரின் காரமாகவே இந்த மக்களும் உலகில் உண்மையாளராக கருதப்பட்டிருக்கின்றனர்.

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ وَاٰلِهٖ وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ وَاٰخِرُ دَعْوَانَا اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

(இத்மாமுல் ஹுஜ்ஜா, ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 308)

இப்போது துஆ செய்யுங்கள். (இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கைகளை உயர்த்தி கூட்டுத் துஆ செய்தார்கள். அதில் M.T.A மூலமாக அதில் பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் கலந்து கொண்டனர்). துஆ செய்த பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். இப்போது காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை **14,240** ஆகும் என்று கூறப்படுகிறது. இம்முறை பாகிஸ்தானிலிருந்து சகோதரர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அவ்வாறிருந்தும் கூட வெளியிலிருந்து அதிகமான சகோதரர்கள் வருகை தந்துள்ளனர். இந்தோனேஷியாவிலிருந்தும் கூட ஒரு தனி விமானம் அங்குள்ளவர்களை அழைத்து வந்திருக்கின்றது. இது அல்லாஹ்வின் அருளாகும். இப்போது இங்கு (இலண்டன்) மாநாட்டு திடலில் அமர்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை 5,230 ஆகும்.

✻✻✻✻✻

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றிலிருந்து**

மனிதன் எதுவரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஒன்றிவிட மாட்டானோ அதுவரை ஏகத்துவத்தை அவனால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. (குத்பாத்தே மஹ்மூது)

**S. முஹம்மது இஸ்மாயீல் மற்றும் குடும்பத்தினர்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து**

இறைவனை சென்றடைய வேண்டும் என்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நீங்கள் பின்பற்ற வேண்டும். அவர்களே இரட்சிப்பிற்குரிய வழியாக உள்ளார்கள். (காதியான்கே ஆரியே அவ்ர் ஹம்)

**S.H. வஸீம் அஹ்மது மற்றும் குடும்பத்தினர்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், கோடம்பாக்கம்.

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

## (நீதி, நேர்மையின் ஒளியில்)

**- மவ்லானா முஹம்மது இன்ஆம் கவ்ரீ சாஹிப் -**

“அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும்”. (திருக்குர்ஆன் 5:9)

(நீதி என்பதைக் குறிப்பிடும்) ‘அத்ல்’ என்ற சொல்லுக்கு அடிப்படையான பொருள், இரண்டு புறமும் சரிசமமாக இருப்பது என்பதாகும். அதிகமகா இருப்பது, குறைவாக இருப்பது ஆகியவற்றில் இருந்து விலகியவாறு இடைப்பட்ட வழியை மேற்கொள்வதற்கு ‘அத்ல்’ (நீதி) என்று கூறப்படுகிறது. நீதி, நேர்மைக்கு திருக்குர்ஆனில் இன்னொரு சொல் கிஸ்த் என வந்துள்ளது. உதாரணமாக, தற்போது ஓதப்பட்ட வசனமாகிய சூரா மாயிதாவின் 9 –வது வசனம். இதில் அத்ல், கிஸ்த் ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இரண்டும் ஒன்றுபட்ட பொருளைக் கொண்டதாகும். ஆயினும் சிறிய வித்தியாசம் என்னவெனில், இரண்டு நபர்களுக்கு மத்தியில் நீதியுடன் நடந்து கொள்வது அத்ல் (நீதி) எனப்படும். ஆனால் கிஸ்த் என்ற சொல்லில் மற்றவர்களுடன் ஒப்பீடு காணப்படுகிறது. அதாவது கிஸ்த் என்பதன் பொருள், ஒருவருடைய உரிமையையும் கடமைகளையும் முழுமையாக நிறைவேற்றுவது; அதில் எவ்வித குறைவையும் வைக்காதிருப்பது என்பதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அரபு நாட்டின் நிலை எப்படி இருந்தது என்றால், அதில் நீதி நேர்மையின் எந்த அடையாளமும் இருக்கவில்லை. Might is right என்ற நிலை இருந்தது. எவரிடம் தடி இருக்கிறதோ அவருக்கே எருமை சொந்தம் என்ற பழமொழிக்கேற்ப இருந்தது. பழமையான சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூகமாக இருந்தது. கோத்திரங்களுக்கிடையில் சண்டை சச்சரவுகள் பொதுவானதாக இருந்தது. தம்மைச் சார்ந்தவர்களை உதவிக்காக குரல் கொடுப்பதே போதுமானதாக இருந்தது. உடனே நூற்றுக்கணக்கான கோத்திரங்களுக்கிடையில் கொலைக்கு பழிக்குப் பழி வாங்கும் தொடர் தொடர்ந்து நடந்து வந்தது. எதிரியின் கோத்திரத்தைச் சார்ந்த ஓர் ஒட்டகத்தை கொன்று விட்டதற்குப் பழிவாங்குவதற்காக ஆரம்பமான போரின் காரணமாக 40 ஆண்டு காலமாக போர் தொடர்ந்து நடைபெற்றது. ஆண்களையும், பெண்களையும் சிறைப்பிடிப்பதும், ஆண் அடிமைகளையும் பெண் அடிமைகளையும் உருவாக்கும் சம்பிரதாயம் பொதுவானதாக இருந்தது. பெண்களைப் பொருத்த வரை அவர்களுக்கு மகள் என்ற முறையிலும், தாய் என்ற முறையிலும் எந்த மதிப்பும் இருந்ததில்லை. அப்படிப்பட்ட சமூகத்தில் மனித குலத்தின் அருளாளர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். திருக்குர்ஆன் எனும் ஷரீஅத் இறங்குகிறது. மேலும் மிருகத்தனமான மனிதர்களை படிப்படியாக மனிதர்களாக மாற்றுவதும், மனிதர்களை நல்லொழுக்கம் உள்ள மனிதர்களாக, நலொழுக்கம் உள்ள மனிதர்களை இறை தொடர்பு உள்ள மனிதர்களாக மாற்றுவதும், இன்னும் கூறுவதென்றால் அவர்களை இறை பண்புகளை வெளிப்படுத்தும் மனிதர்களாக மாற்றுவதும் ஆகிய அற்புதம் வெளிப்பட்டது.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இது பற்றி தமது கவிதையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

*“இந்த நபி முழுமை பெற்றவர் இல்லை என ஐரோப்பியர்கள் கூறுகின்றனர்.*

*மிருகத்தனமான மனிதர்களுக்கு மத்தியில் மார்க்கத்தைப் பரப்புவது எளிதான வேலையா என்ன ?*

*மிருகத்தனமானவரை மனிதனாக மாற்றுவது ஓர் அற்புதமாகும்.*

*நுபுவ்வத்தின் பொருள் இதிலிருந்தே தெளிவாகிறது”.*

அவ்வாறே தமது அரபி கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

*“சாதஃப்தஹுஃம் கவ்மின் கரவ்ஸின் ஸில்லத்தின்.*

*ஃபஜஅல்த்தஹுஃம் கசபீக்கத்தில் இக்யானி”.*

பொருள்: முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் இந்த அரபு சமுதாயத்தை சாணத்தைப் போன்று கீழ்த்தரமானவராகக் கண்டீர். பிறகு உமது பரிசுத்தமாக்கும் ஆற்றலினால் நீர் அவர்களை தங்கக் கட்டியாக மாற்றி விட்டீர்.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவரே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நீதி, நேர்மை பற்றி எடுத்துரைப்பது ஒரு வகையில் கடினமானதாகும். ஏனெனில் அன்னாரின் கால்கள் எல்லா அடியிலும் நீதி என்ற அந்தஸ்தைக் கடந்து இஹ்ஸான் (பேருதவி செய்தல்) என்ற படித்தரம் வரை சென்றடைகின்றது. ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருவரிடம் கடன் வாங்கி அதனை திருப்பிக் கொடுக்கும்போது அதை விட அதிகமாக அல்லது அதை விட சிறந்ததைக் கொடுக்காமல் இருந்ததில்லை என கூறப்படுகிறது.

இந்த சுருக்கமான முன்னுரைக்குப் பிறகு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பொருத்தவரை அன்னாரின் குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஓரளவுக்கு எடுத்துக் கூறுவேன். ஏனெனில் எவர் தமது வீட்டில் நீதி நேர்மையை கடைபிடிக்க மாட்டாரோ அவர் எவ்வாறு வெளி உலகில் இந்த பண்புக்கு சிறந்த முன்மாதிரியாக ஆக முடியும்?

நமது எஜமானர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மகத்துவத்தைப் பாருங்கள்! இரவு பகலாக அவர்கள் இறைதியானத்தில் மூழ்கியிருக்கிறார்கள். காத்தமுன் நபிய்யீன் என்ற அந்தஸ்து அவர்களுக்குக் கிடைக்கிறது. ‘அவர் இரண்டு விற்களுக்குரிய நாணைப் போன்றவராக அல்லது அதை விடவும் மிக நெருக்கமானவராக ஆகி விட்டார்’ என்ற நற்செய்தி அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. (53:10) அன்னாரின் அருளுக்குரிய கையை அல்லாஹ் தனது கையாகக் குறிப்பிடுகின்றான். நீங்கள் அல்லாஹ்வின் நேசத்தை விரும்புகிறீர்கள் என்றால் நீங்கள் இந்த தூதரைப் பின்பற்றுவதும், அன்பு கொள்வதும் கட்டாயமாகும் என எல்லா மனிதகுலத்திற்கும் தூது விடுக்கப்படுகிறது. மறுபுறம் அவர்களின் நிலை என்னவென்றால், அனன் நபிய்யு லாகஸிப். சந்தேகமின்றி நான் நபியாவேன். அவனுடைய நெருக்கமான அடியானாவேன். இதில் எந்த சந்தேகமும், மிகைப்படுத்துதலும் இல்லை எனக் கூறுகிறார்கள். அத்துடன், அனப்னு அப்தில் முத்தலிப் எனவும் கூறுகிறார்கள். அதாவது, ஆனால் நான் ஓர் அடியானும் அப்துல் முத்தலிபின் பேரன் மட்டுமே ஆவேன். அவ்வாறே இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றார்கள்: வல்லாஹி மாஅத்ரீ வஅனா ரஸூலுல்லாஹி. மாயுஃப்அலுபீ. அதாவது நான் அல்லாஹ்வின் தூதராவேன். எனினும் என்னுடன் எப்படி நடந்து கொள்ளப்படும் என்பது எனக்குத் தெரியாது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒருமுறை நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்களும் அல்லாஹ்வின் அருளினால் சுவர்க்கத்தில் நுழைய வைக்கப்பட மாட்டீர்களா? எனக் கேட்டேன். அதற்கு அவர்கள், வலா அனா இல்லா அன்ய்யதகம் மதனியல்லாஹு பிஃபழ்லிஹீ வ ரஹ்மதிஹீ எனக் கூறினார்கள். அதாவது ஆம். அல்லாஹ்வின் அருளும் அவனது கருணையும் என்னை போர்த்திக் கொள்ளாத வரை நானும் சுவர்க்கத்தில் நுழைந்து விட முடியாது.

அன்னாரின் இல்லற வாழ்க்கையை நாம் பார்க்கும்போது, முதன் முதலில் மிகவும் செல்வச் சீமாட்டியான, அனுபவமிக்க வணிகத் திறமை கொண்ட, 40 வயதையுடைய, உறுதிமிக்க பருவமுள்ள ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு முன் வந்து நிற்கிறது. அவர் 25 வயதுள்ள இளைஞரின் நன்மை, இறையச்சம், நீதி, நேர்மை பற்றி கேள்விப்பட்டது

மட்டுமல்லாமல் தமது வணிகப் பொருட்களை அவர்களுடன் அனுப்பி அனுபவம் பெற்ற பிறகு அவர்களுக்கு திருமண தூதுச் செய்தியை அனுப்புகிறார்கள். திருமணமான பிறகு நீதி, நேர்மையால் நிரம்பிய அன்னாரின் வாழ்வையும், அவர்களின் கண்ணியமிக்க பண்புகளையும் கண்டு பரவசப்பட்டு அல்லாஹ்விட மிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வந்த முதல் வஹியின் போதே அந்தப் பெண்மணி உண்மையான உள்ளத்துடன் ஈமான் கொண்டு விடுகிறார். அன்னாருக்கு இந்த இறை யறிவிப்பு கிடைப்பதால் ஏற்பட்ட பதற்றத்தை நீக்கியவாறு, ஆறுதல் கூறுகிறார். என் தலைவரே! தாங்கள் ஏன் பதற்றமடைகிறீர்கள்? தாங்கள் ஒருபோதும் தோல்வி அடைய மாட்டீர்கள். இன்னும் சொல்லப்போனால் நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்: அல்லாஹ் உங்களை ஒருபோதும் தோல்வியடையச் செய்ய மாட்டான். ஏனெனில் தாங்கள் இரத்த உறவுகளைப் பேணுபவர்களாக இருக்கிறீர்கள். பலவீனமானவர்களின் சுமைகளை தாங்கிக் கொள்கிறீர்கள். உலகில் இல்லாது மறந்த போன நன்மைகள் தங்களிடம் காணப்படுகின்றன. நான் உங்களிடம் விருந்தினர்களை உபசரிக்கும் பண்பைக் காண கின்றேன். மக்களின் உண்மையான துன்பங்களில் அவர்களுக்கு உதவி செய்கின்றீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் தியாக உணர்வையும் அர்ப்பணிக்கும் பண்பையும் அவர்களுடைய வாழ்விலேயே கண்டார்கள். அவருடைய மரணத்திற்குப் பிறகும் அன்பு மற்றும் நன்றியுணர்வுடன் அதனை நினைவில் வைத்திருந்தார்கள். வீட்டில் ஏதாவது கால்நடை அறுக்கப்பட்டால் கதீஜாவின் தோழிகளுக்கும் கொடுக்குமாறு வலியுறுத்திக் கூறுவார்கள்.

இன்னொரு மனைவியைப் பற்றி எடுத்துக் கூறுகிறேன். அவர் யூத கோத்திரத்தைச் சேர்ந்த பனூ நளீர், குரைஸாவின் மகளாக இருந்த ஹஸ்ரத் ஸஃபிய்யா பின்த் ஹை என்பவர் ஆவார். கைபர் போரில் அவருடைய தந்தை, சகோதரர், கணவர் மற்றும் பிற உறவினர்கள் கொல்லப்பட்டனர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஸஃபிய்யா அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டவராக வந்தார். மன்னரின் இந்த மகள் உங்களைத் தவிர வேறு யாருக்கும் பொருத்த மில்லை என நபித்தோழர்கள் விண்ணப்பித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு கண்ணியமளித்தார்கள். **நீங்கள் உங்கள் மார்க்கத்தில் நிலைத்திருக்க விரும்புகின்றீர்கள் என்றால் அதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது; ஆயினும் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஏற்றுக் கொள்வீர்கள் என்றால் அதில் உமக்கு நன்மை இருக்கிறது என்று கூறினார்கள். ஸஃபிய்யா அவர்கள், நான் உங்களை உண்மையாளர் எனக் கருதுகிறேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சந்தேகமின்றி நான் உண்மையாளன்தான்; ஆயினும் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று கூறினார்கள். ஸஃபிய்யா அவர்கள் அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் தூதர் அவர்களையும் இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.** அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். அத்துடன் அவர்கள் ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கு, நீங்கள் விரும்பினால் உங்கள் வீட்டினரிடம் திரும்பிச் செல்லலாம் அல்லது தனது நிகாஹ்வின்கீழ் வந்து விடலாம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிகாஹ்வின் கீழ் வருவதை விரும்பினார்கள். இவ்வாறு அவருடைய விருப்பத்தினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரை திருமணம் செய்தார்கள். மேலும் அவரை விடுதலை செய்வதையே அவருக்கான மஹராக நியமித்தார்கள்.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது அவர்களை விட அதிகமாக வெறுப்பான மனிதர் எனது பார்வையில் வேறு யாரும் இருந்ததில்லை. ஆனால் அவர்கள் என்னிடம், உங்கள் சமுதாயம் எங்களுடன் இன்னின்ன கொடுமை களை செய்தது. உங்கள் தந்தை எனக்கு எதிராக எல்லா அரபு மக்களையும் ஒன்று திரட்டிக் கொண்டு வந்தார். மேலும் எங்களை தாக்குவதில் அவரே முதலில் ஈடுபட்டார். அதன் காரணமாக எங்களுக்கு உங்கள் சமுதாயத்துடன் போர் செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது என்றெல்லாம் விளக்கிக் கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் இந்த உண்மைகளைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நீதி, நேர்மை மற்றும் எதிரிகளுடன் நடந்து கொண்ட பரிவு, பேரருள் ஆகியவற்றைக் கேட்டு அவருக்கு எந்த அளவுக்கு தாக்கம் ஏற்பட்டது என்றால் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவர்களிடமிருந்து எழுந்து வரும்போது அன்னாரை விட அதிக அன்பான, பிடித்தமான நபர் வேறு யாரும் எனக்கு இருந்ததில்லை. அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம்.

கண்ணியத்திற்குரிய செவி யேற்பவர்களே! மதீனா வாழ்வில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வயது 50 –ஐ விட அதிகமாகிவிட்டிருந்தது. ஆனால் தர்பிய்யத் மற்றும் சமுதாய தேவைகளை கவனத்தில் கொண்டவாறு அவர்களுக்கு அதிகமான திருமணங்கள் செய்ய வேண்டியது ஏற்பட்டது. ஒரே நேரத்தில் 9 மனைவியர்கள் அன்னாரின் தர்பிய்யத்திலும், பராமரிப்பிலும் இருந்தனர். ஆயினும் அவர்களுக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அன்னார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பதற்றமடைய வில்லை. இன்னும் சொல்லப் போனால் மிகவும் அழகிய ஏற்பாட்டுடன் முழுமையான நீதியுடனும் நேர்மையுடனும் அனைவருக்கும் அவரவர்களுடைய உரிமைகளையும் கொடுத்தார்கள்; அனைவரையும் கவனத்தில் கொண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சில நேரத்தில் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு தமது எல்லா மனைவியர்களையும் எந்த மனைவியின் வீட்டில் தமது முறை இருக்கிறதோ அந்த வீட்டிற்கு அழைப்பார்கள். சில நேரத்தில் தாமே எல்லா மனைவியரின் வீட்டிற்கு சென்று அவர்களின் நிலைமைகளை விசாரிப்பார்கள்.

இந்த எல்லா மனைவியரிடமும் நீதியுடனும் நேர்மையுடனும் நடந்து கொண்டாலும் அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள்: அல்லாஹ்வே! மனிதன் என்ற முறையில் எந்த அளவுக்கு சரிசமமான நீதியான முறையில் பங்கிட்டுக் கொடுக்க முடியுமோ நான் அதை செய்திருக்கிறேன் என்பதை நீ அறிவாய். அதை நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் இறைவா! உள்ளத்தின் மீது எனக்கு அதிகாரமில்லை. ஒருவருடைய மேன்மை மற்றும் சிறப்பின் காரணமாக ஒருவருடன் அதிகமாக சாய்வு எனக்கு இருக்குமென்றால் நீ என்னை மன்னிப்பாயாக!

அரபு நாட்டு மக்களின் அநீதி, கொடுமை, தான்தோன்றித்தனம் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. ஆனால் அது வலிமை வாய்ந்த –வர்கள் பலவீனமானவர்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கும் அநீதி ஆகும். நாளுக்கு நாள் சண்டை சச்சரவுகளினால் கொள்ளை யடிப்பதனால் நூற்றுக்கணக்கான வீடுகள் நாசமாகிக் கொண்டிருக் கின்றன என்பதையும், ஆயிரக் கணக்கான குழந்தைகள் அநாதை யாகிக் கொண்டிருக்கின்றன; இவ்வாறு நாடு முழுவதும் ஒரு நாளில் நாசமாகி விடும் என்பதையும் அவர்களிலேயே அறிவு படைத்த நல்ல இயல்புடைய மக்கள் புரிந்தனர். அப்போது வாருங்கள். இந்த அநீதி, கொடுமையிலிருந்து விடுதலை கிடைப்பதற்காக நாம் ஒரு திட்டம் தீட்டுவோம் என்ற முடிவுக்கு வந்தனர். எனவே ஃபஸ்ல் பின் ஹாரிஸ், ஃபஸ்ல் பின் வராஆ, பஸ்ல் பின் பதாதா ஆகியவர்களைக் கொண்ட தலைவர்கள் ஒருவருக் கொருவர் உறுதிமொழி எடுத்தனர். அதில், அநீதிக்குள்ளானவர்களுக்கு உதவி செய்யப்படும் என்றும் எவருடைய உரிமைகள் பறிக்கப் படுமோ அவர்களுக்கு உரிமைகள் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் உடன்படிக்கை எடுத்தனர். இந்த உடன்படிக்கை எடுப்பவர் களில் அதிகமானவர்களின் பெயருடன் ஃபஸ்ல் என்ற சொல் இணைந்திருந்ததால் அதற்கு ஹில்ஃபுல் ஃபுளூல் என பெயர் வைக்கப்பட்டது. ஆனால் இந்த உடன்படிக்கையும் நீர்க்குமிழியைப் போன்று மறைந்து விட்டது. அதன்படி செயலாற்றுவதற்கு எவருக்கும் வாய்ப்பு கிடைக்க வில்லை. ஃபுஜ்ஜார் போன்ற போரில் பல குடும்பங்கள் மரணித்தன. எனவே ஹில்ஃபுல் ஃபுளூல் குழுவை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும் என குரைஷிகளின் சில

கண்ணியத்திற்குரியவர்கள் தீர்மானித்தனர். இதன்படி குரைஷி தலைவர்களின் ஒரு கூட்டம் நடந்தது. அதில் பனூ ஹாஷிம், பனூ அசத், பனூ ஹுஸைரா, பனூ தமீம் ஆகியோர் கலந்து கொண்டனர். அந்த தலைவர்களுடன் நமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரும் இருந்தது. ஆனால் இந்த உடன்படிக்கையை உயிர்ப்பித்த பிறகும் கூட எந்தக் குழுவுக்கும் தமது சமுதாய மரபுகளைக் கடந்து அநீதிக்குள்ளானவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை; இழப்பிற்குரியவர்களுக்கு எந்த உதவியும் செய்வதற்கான முயற்சி செய்யப்படவில்லை. அந்த உடன்படிக்கையின்படி செயல்படுவதற்கான நல்வாய்ப்பு ஒருவருக்கு கிடைத்ததென்றால் அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தான் கிடைத்தது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நபித்துவ வாதத்திற்குப் பின்னுள்ள ஒரு சம்பவம் என்னவென்றால், கஅபாவிற்கு அருகில் கூடியிருந்த குரைஷி தலைவர்களிடம் ஒரு காட்டரபி வந்தார். அபூஜஹ்ல் எனது செல்வத்தை தம் கைவசம் வைத்திருக்கிறார். அவர் தருவதில்லை. நீங்கள் எனக்கு உதவி செய்யுங்கள். குரைஷி தலைவர்கள் விஷமத்தனம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் உமக்கு இந்த நபர் உதவி செய்வார் என்று கூறி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டைச் சுட்டிக் காட்டினார்கள். அவர்களின் நோக்கமெல்லாம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உதவிக்காக வந்தால் அபூஜஹ்ல் அவர்களை அவமானப்படுத்தி வெளியேற்றி விடுவான் – நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உதவிக்காக வெளிவரவில்லை என்றால் நீங்களும்தான் ஹில்ஃபுல் ஃபுளூல் குழுவில் இருந்தீர்கள். நீங்கள் இவருக்கு ஏன் உதவி செய்யவில்லை என்று கேட்போம் என்பதாக இருந்தது.

அந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று தனது முறையீட்டை எடுத்து வைத்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உடனே அவருடன் வெளியே வந்தார்கள். அபூஜஹ்லின் வீட்டை அடைந்ததும் அவரிடம், இவருடைய கடனை நீங்கள் ஏன் திருப்பிக் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். இதைக் கேட்ட அபூஜஹ்ல் அப்படியே திரும்பி வீட்டிற்குள் சென்றவாறு அவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார். அந்த காட்டரபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு நன்றி செலுத்தியவாறு திரும்பிச் சென்றார்.

இது பற்றி குரைஷி தலைவர்களுக்குத் தெரிய வந்தபோது, அவர்கள் அபூஜஹ்லிடம், நீர் முஹம்மதுக்கு எதிராக பழித்துரைத்துக் கொண்டிருக்கிறீர். ஆனால் அவரை உமது வீட்டிற்கு நாங்கள் அனுப்பி வைத்தபோது நீர் அச்சப்பட்டு பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டீரே என்றனர். அதற்கு அபூஜஹ்ல், நான் என்ன சொல்வேன்? என்ன நடந்தது என்றால், நான் கதவைத் திறந்ததும் அவருடைய இரு புறங்களிலும் மதம் பிடித்த இரு ஒட்டகங்கள் இருந்தன. நான் கொஞ்சமாவது சாக்குப் போக்கு கூறியிருந்தால் அவை என்னை கொன்று விடும் என அஞ்சினேன். எனவே அவருடைய கட்டளையை ஏற்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லாமல் இருந்தது. ஆக, இதுதான் அநீதிக்குள்ளானவர்களுக்கு உதவி செய்பவர், நீதி, நேர்மையின் வடிவமாகத் திகழ்ந்த ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள். சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அழீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மத்.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவரே! மனிதன் இன்னொருவரின் துக்கத்தைக் கண்டு கருணையின் பக்கம் திரும்பி விடுகிறான். ஒரு குற்றவாளிக்கு தண்டனை கொடுப்பதைக் காணும் போது வருத்தப்படுகிறான். அவரை எப்படியாவது தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என முயற்சி செய்யப்படுகிறது. ரஹ்மத்துன்லில்ஆலமீன் (ஸல்) அவர்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் ரவூஃபுர் ரஹீம் (அதிகம் பரிவு காட்டுபவர், அதிகம் கருணை காட்டுபவர்) என்று சாட்சி பகர்ந்துள்ளான். ஆனால் எந்த சமுதாயம் வீழ்ச்சியின் பக்கம் சென்று கொண்டிருக்கிறதோ, பலவிதமான தீமைகளில் மூழ்கி விடுகின்றதோ அங்கு பெரிய மக்கள் சட்டத்திற்குப் புறம்பாக செயல்பட்டாலும் அவர்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றனர். ஆனால் ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்கள் மட்டுமே தண்டிக்கப்படும் பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரஹ்மத்துன்லில்ஆலமீன் ஆகவும் ரவூஃபுர் ரஹீமாகவும் இருந்தாலும் அவர்கள் ஷரீஅத்தின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் எல்லையற்ற தன்மானம் கொண்டிருந்தார்கள். நீதியையும் நேர்மையையும் ஒருபோதும் கைவிட்டதில்லை. புகாரியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

பனூ மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த ஃபாத்திமா என்ற பெயரைக் கொண்ட ஒரு பெண் திருடினாள். அந்தப் பெண்ணின் விவகாரத்தில் மென்மையாக நடந்து கொள்ளுமாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் நாம் பரிந்துரை செய்வோம் என மக்கள் விரும்பினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் செல்லமானவராகவும், அன்பிற்குரியவராகவும் இருந்த ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களை அதற்காக ஆயத்தம் செய்தனர். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பரிந்துரை செய்தபோது அன்னார் மிகவும் வெறுத்தார்கள். மேலும் கோபத்தினால் அவர்களின் முகம் சிவந்து விட்டது. அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"இஸ்ரவேல் சமுதாயத்தின் பழக்கம் எப்படி இருந்ததென்றால் அவர்களில் பணக்காரர் ஒருவர் திருடினால் அவரை விட்டு விடுவார்கள். ஓர் ஏழை திருடினால் அவருடைய கையை வெட்டினார்கள். ஆனால் எனது நிலை என்னவென்றால் முஹம்மதின் மகள் ஃபாத்திமாவின் மகள் திருடி இருந்தாலும் நான் அவளுடைய கையையும் வெட்டி விடுவேன்."

பத்ர் போரில் இணை வைப்பவர்களில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களாக இருந்தவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அப்பாஸ் அவர்களும் ஒருவராக இருந்தார்கள். சிறைப்பிடிக்கப்பட்டவர்களை கண்காணிப்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் உட்பட சிறைப்பிடிக்கப்பட்ட அனைவரின் கைகளையும் கயிற்றால் இறுகக் கட்டினார்கள். அவர்கள் மஸ்ஜிதே நபவிக்கு சுற்றியுள்ள இடத்திலேயே இருந்தனர். அப்பாஸ் முனங்க ஆரம்பித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அப்பாஸ் அவர்களின் முனகல் சத்தம் கேட்டதோடு அவர்களின் தூக்கம் கலைந்தது. அன்சார் சகோதரர்களில் ஒருவருக்கு இது பற்றி தெரிய வந்தபோது அவர் அப்பாஸ் அவர்களின் கயிறை சற்று தளர்த்தி விட்டார். அதனால் அவர் முனங்குவது நின்று விட்டது. உடனே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அப்பாஸ் அவர்களின் முகங்கும் சத்தம் ஏன் கேட்கவில்லை என வினவினார்கள். அப்போது நபித் தோழர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுக்கு ஏற்படும் துன்பத்தின் காரணமாக நாங்கள் அப்பாஸின் கயிற்றை சற்று தளர்த்தி விட்டோம் எனக் கூறினர். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இது நீதிக்குப் புறம்பானதாயிற்றே! ஒன்று, சிறைப்பிடிக்கப்பட்ட மற்றவர்களின் கயிறுகளையும் தளர்த்தி விடுங்கள். அல்லது அப்பாஸின் கயிற்றையும் இழுத்துக் கட்டுங்கள் என்றார்கள். அப்போது அன்ஸார் சகோதரர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட அனைவரின் கயிற்றையும் தளர்த்தி விட்டனர்.

ஹுனைன் போரில் 24 ஆயிரம் ஒட்டகங்கள், 40 ஆயிரம் ஆடுகள், 40 ஆயிரம் அவ்கிய்யா வெள்ளி மற்றும் சிறைப்பிடிக்கப்பட்ட 6 ஆயிரம் பேர் முஸ்லிம்களின் கையில் கிடைத்தன. ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் எனது மற்றும் பனூ முத்தலிபின் கைதிகளை எவ்வித ஈட்டுத் தொகையுமின்றி விடுதலை செய்கின்றேன் எனக் கூறினார்கள். அன்ஸார் சகோதரர்கள், முஹாஜிரீன் சகோதரர்கள் ஆகியோரும் நாங்களும் எங்களின் கைதிகளை எவ்வித ஈட்டுத் தொகையுமின்றி விடுதலை செய்கிறோம் எனக் கூறினர். அடுத்து பனூ ஸலீமா, பனூ ஃபஸாரா கோத்திரத்தினர் எஞ்சியிருந்தனர். தாக்குதல் நடத்திய எதிரிகள் வெற்றி கொள்ளப்பட்டு விட்டபோது (அவ்வாறு வீழ்த்துவது தமது நற்பேறாக இருக்கும்போது) இவ்வாறு கைதிகளுடன் கருணையாக நடந்து கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களை அழைத்தார்கள். மேலும் ஒவ்வொரு கைதிக்கு ஈடாக 14 ஒட்டகங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மேலும் இந்தத்

தொகையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கொடுத்து விட்டார்கள். இவ்வாறு மற்ற கைதிகளையும் விடுதலை செய்து விட்டார்கள்.

இந்த சம்பவம் அன்னாரின் கருணையான உள்ளத்தை வெளிப்படுத்துவதுடன் சில கைதிகள் தமது உறவினர்களாக இருப்பதனால் விடுதலை பெறுவதும், மற்றவர்களை வழக்கம் போல் கைதிகளாகவே வைப்பதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நீதியை விரும்பும் பண்பு ஒருபோதும் விரும்ப வில்லை என்பதையும் வெளிப்படுத்து கிறது. எனவே அவர்கள் எஞ்சி இருந்த கைதிகளுக்காக தாம், ஈட்டுத் தொகை கொடுத்து அவர் களுக்கு விடுதலை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நிலைநாட்டப்பட்ட நீதியின் அமைப்பில் அரசாங்கத்தின் உயர் அதிகாரியும் சாதாரண மக்களும் சட்டத்திற்கு முன் சரிசமமானவர்களாக இருந்தனர். ஒரு வழக்கில் ஒரு காட்டரபிக்கு எதிராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே வாதியாக இருந்தார்கள். அவர்களின் வாதத்திற்கு சான்றாக சாட்சி கொண்டு வருமாறு அன்னாரிடம் கூறப்பட்டது. அப்போது ஹஸீமா பின் ஸாபித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக சாட்சி பகர்ந்தார்கள். இது பற்றிய விபரம் சுனன் அபீதாவூதில் இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு காட்டரபியிடமிருந்து ஒரு குதிரையை விலைக்கு வாங்கினார் கள். மேலும் அதற்கான பணத்தை வாங்குவதற்காக தமக்குப் பின்னால் வருமாறு அவரிடம் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிக விரைவாக சென்று விட்டார்கள். அந்த காட்டரபி தனது சோம்பேறித் தனமான நடையின் காரணமாக பின்தங்கி விட்டார். அந்தக் காட்டரபியை மக்கள் சந்தித்தனர். அவர்கள் அந்தக் குதிரைக்கு விலை பேசினர். அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்தக் குதிரையை விலைக்கு வாங்கி விட்டார்கள் என்பது தெரியாது. காட்டரபி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அழைத்து, நீங்கள் இந்தக் குதிரையை விலைக்கு வாங்கி விட்டீர்களா? அல்லது நான் இதை இன்னொரு வருக்கு விற்கட்டுமா? எனக் கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நின்றவாறு, நான் உம்மிடம் அந்தக் குதிரையை விலைக்கு வாங்கி விடவில்லையா என்ன? எனக் கேட்டார்கள். அதற்கு காட்டரபி இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுக்கு இந்தக் குதிரையை விலைக்கு விற்கவில்லை எனக் கூறினார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏன் விற்கவில்லை? நான் இதை உம்மிடமிருந்து விலைக்கு வாங்கி விட்டேனே? என்றார்கள். அப்போது காட்டரபி, அதற்கு சாட்சியைக் கொண்டு வாருங்கள் என்றார். அதற்கு ஹஸீமா பின் ஸாபித் (ரலி) அவர்கள், தாங்கள் இதை இவரிடமிருந்து விலைக்கு வாங்கி விட்டீர்கள் என நான் சாட்சி கூறுகிறேன் என்றார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அருகில் சென்று நான் இவரிடம் விலைக்கு வாங்கி விட்டேன் என்பதற்கு எந்த அடிப்படையில் நீர் சாட்சி கூறுகிறீர்? எனக் கேட்டார் கள். அப்போது அந்த நபித்தோழர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களை உண்மைப்படுத்தும் வகையில்தான் அவ்வாறு கூறினேன் என்றார்.

எனவே இந்த ஷாஹிது (சாட்சியாளர்) எந்த அளவுக்கு தூய உள்ளம் கொண்டவராகவும், நன்றியுணர்வு கொண்டவராகவும் விளங்கினார்! இந்த மஷ்ஹூது (சாட்சி பகரப்பட்டவர்) எந்த அளவுக்கு தூய உள்ளம் கொண்டவராகவும், நன்றியுணர்வு கொண்டவராகவும் விளங்கினார். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்வ் வஆலி முஹம்மத்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு மத்தியிலும் மிகவும் முழுமையான நீதியுடன் தீர்ப்பளித்தார்கள். ஆனால் அத்துடன் பாருங்கள். நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான். நீங்கள் உங்களின் சண்டை சச்சரவுகளை என்னிடம் கொண்டு வருகின்றீர்கள். உங்களில் ஒருவர் தனது பிரதிவாதிக்கு எதிராக தனது சான்றை தனது நாவன்மையின் காரணமாக மிகத் திறமையாக எடுத்து வைக்கலாம். நான் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கி விடலாம். அவர் அதனை நியாயமின்றி வாங்குவார் என்றால் அவர் ஒரு நெருப்புத் துண்டை வாங்கிச் செல்வார். அவர் விரும்பினால் அதை அவர் எடுத்துக் செல்லட்டும். விரும்பினால் அதை அவர் விட்டு விடட்டும் என்றும் எச்சரிக்கை செய்தார்கள். (காண்க: புகாரி)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: காஸீ (தீர்ப்பளிப் பவர்கள்) மூன்று வகைப்படுவர். ஒருவர் சுவர்க்கவாசி; இன்னொரு –வர் நரகவாசி. சுவர்க்கவாசி என்பவர் உண்மையை கண்டறிந்து, அதற்கேற்ப தீர்ப்பு வழங்குபவர் ஆவார். மேலும் எந்த காஸீ உண்மையை கண்டறிந்தவாறு அநீதியான தீர்ப்பு கூறுகிறாரோ அவர் நரகவாசி ஆவார். மூன்றாவது எந்த காஸீ சிந்திக்காமல் தீர்ப்பு வழங்குகிறாரோ அவரும் நரகவாசி ஆவார். (அபூதாவூது)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எவர் மக்களுக்கு கஸீ (தீர்ப்பளிப்பவர்) ஆக நியமிக்கப்பட்டாரோ அவர் கத்தியின்றி வெட்டப்பட்டார் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி, அபூதாவூது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். எவர் காஸீயின் பதவியைக் கேட்டு வாங்குவாரோ அவர் தனது நஃப்ஸின் சுழற்றியில் சிக்குண்டு விடுவார். மேலும் எவருக்கு கட்டாயமாக்கி இந்த பதவி ஒப்படைக்கப்படுமோ அவர் மீது வானவர் இறங்கி அவரை நேரான வழியில் நடத்திச் சென்று கொண்டிருப்பார் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி, அபூதாவூது)

எந்தப் பொருள்களை விநியோகம் செய்வதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அதிகாரம் இருந்ததோ அவற்றிலும் அவர்கள் நீதி, நேர்மை யைக் கவனத்தில் கொண்டார்கள். ஆயினும் சில நோக்கங்களின் அடிப்படையில் உரிமை பெற்றவரின் உரிமையை பறிக்காத வகையில் மற்றவர்களுக்கு அதிகமாகவும் வழங்கினார்கள். ஹுனைன் போரில் இருந்து திரும்பும்போது மற்றவர்களை விட அதிக முன்னுரிமை வழங்கிய வாறு சில அரபு தலைவர்களுக்கு அவர்களின் உள்ளங்களை இணைத்து வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்கு வழங்கினார்கள். இவ்வாறு வழங்கியதன் விளைவாக அந்த அரபு தலைவர்கள் முஸ்லிம்களாக மாறியது மட்டுமின்றி அவர்களின் மக்களும் முஸ்லிம்களாக மாறினர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். சில நேரத்தில் நான் மக்களின் உள்ளங்களை ஈர்ப்பதற்காக அவர்களுக்கு வழங்குகிறேன். ஆனால் அவர்களை விட அதிகமாக எனக்கு பிரியமானவர்கள் வேறு பலர் இருக்கின்றனர். ஆனால் அவர்களை இஸ்லாத்திற்கு அருகில் கொண்டு வருவதற்காக நான் அவ்வாறு செய்கின்றேன். (காண்க: புகாரி)

ஆனால் இந்த விவகாரங்களில் நீதியுடன் நடந்து கொள்ளப்பட வில்லை என ஓர் அறிவிலி ஆட்சேபணை செய்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்தபோது அவர்கள் இவ்வளவுதான் கூறினார்கள்:

''அல்லாஹ் மற்றும் அவனது தூதர் நீதியை நிலைநாட்டவில்லை என்றால் வேறு யார் நிலை நாட்டுவார்? அல்லாஹ் மூஸா (அலை) அவர்கள் மீது கருணை புரிவானாக. இதை விட அதிகமான குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டன. ஆனால் அவர்கள் பொறுத்துக் கொண்டார்கள்.'' (காண்க: புகாரி)

அவ்வாறே ஒரு சந்தர்ப்பத்தில் அன்ஸார் சகோதரர்களில் ஒருவர், போரில் கிடைத்த பொருள்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விநியோகம் செய்ததில், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! போரில் எங்கள் இரத்தம் சிந்தப்படு கிறது. தாங்கள் போரில் கிடைத்த பொருள்களை முஹாஜிர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றீர் களே என ஆட்சேபணை செய்து விட்டார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ன அருமையான பதிலைக் கூறினார்கள்! போரில் கிடைத்த பொருள்களை முஹாஜிர்கள் தமது வீட்டிற்கு எடுத்துக் கொண்டு செல்வதையும் நீங்கள் அல்லாஹ் வின் தூதரை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வதையும் நீங்கள் விரும்பவில்லையா? எனக் கேட்டார்கள்.

இந்த பதிலின் காரணமாக ஆட்சேபனை செய்தவர் வெட்கம் அடைந்ததுடன், அன்ஸார் சகோதரர்கள் அனைவரும் அந்த சகோதரரின் ஆட்சேபனையால் தம்மை பழித்துரைத்துக் கொண் டிருந்தனர். உண்மையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செல்வத்தை விநியோகம் செய்வதில்

சில நோக்கங்களை கவனத்தில் கொண்டவாறு எங்கு முன்னுரிமை வழங்கினார்களோ அதுவும் நீதி, நேர்மையை கைவிட்டவாறு செய்யவில்லை. மாறாக, எந்த செல்வங்களின் ஐந்தில் ஒரு பகுதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முழுமையாக அதிகாரத்திற்குட்பட்டதாக இருந்ததோ அதிலிருந்தும் தம்மையும் தமது அன்பிற்குரியவர்களையும் விலக்கி வைத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கைதிகள் அதிகமாக வருவதையும், தேவையானவர்களுக்கு அவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விநியோகம் செய்வதையும் அன்னாரின் பிரியமான மகள் கண்டபோது அவர்களும் தனது வீட்டில் வேலைகள் செய்வதற்கு ஓர் அடிமையைக் கேட்டார்கள். ஆட்டு உரலை ஆட்டுவதனால் கைகளில் புண்ணாகி விட்டன எனக் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நான் உனக்கு பணியாளரைத் தந்த அஹ்லே சுஃப்பாவை (ஏழைகளை) விலக்கி வைக்க முடியாது எனக் கூறினார்கள். அவர்கள் பசியால் துன்பத்திற்குள்ளாகி இருக்கின்றனர். அவர்களுடைய உணவுக்காக எதுவுமில்லை. நான் இந்தக் கைதிகளை விற்று அவர்களுக்காக செலவு செய்வேன் எனக் கூறினார்கள்.

மேலும் தனது மகளின் துன்பத்திற்கு ஒரு மருந்தைக் கூறினார்கள்: ஃபர்ழ் தொழுகைக்குப் பிறகு சுப்ஹானலல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் என்று ஓதுங்கள். இது கைதி, பணியாளரின் அன்பளிப்பை விட மிகச் சிறந்ததாகும் எனக் கூறினார்கள்.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! துவக்கத்தில் நான் சூரா மாயிதாவின் 9 –ஆவது வசனத்தை ஓதினேன். அதில் எதிரிகளுடனும் நீதி, நேர்மையுடன் நடந்து கொள்ளுமாறு போதனை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சில சம்பவங்களை எடுத்துரைக்கிறேன்.

ஒருமுறை சில சஹாபிகள் வெளியில் சென்று செய்தி அறிவதற்காக அனுப்பப்பட்டனர். ஏனெனில் போர் காலமாக இருந்தது. நிலைமையை அறிய வேண்டியது அவசியமாக இருந்தது. அப்போது எதிரிகளில் சிலர் எல்லைப் புறத்தில் இருப்பதை சஹாபிகள் கண்டனர். நாம் இவர்களை உயிருடன் விட்டு விட்டால் இவர்கள் மக்கத்தினரிடம் சென்று செய்தியை தெரிவிப்பர்; நாம் கொல்லப்படுவோம் என முஸ்லிம்கள் எண்ணினர். அதனால் அவர்கள் அந்த காஃபிர்களைத் தாக்கினர். அந்தக் காஃபிர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். செய்தி அறியச் சென்ற இந்தக் குழு மதீனா திரும்பிச் சென்றபோது மக்கத்தினரும் பின்னாலேயே வந்து எங்களுடைய இரண்டு பேர் கொல்லப்பட்டு விட்டனர் என்று முறையிட்டனர். ஆனால் இதற்கு முன்பும் இந்த மக்கத்தினர் இந்த எல்லைக்குள் வந்து முஸ்லிம்களுக்கு கொடுமைகள் இழைத்துள்ளனர். அந்த வகையில் அவர்களுக்கு முறையிடுவதற்கு எந்த உரிமையுமில்லை. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடைய நீதியையும் நேர்மை யையும் பாருங்கள்! அவர்கள், உங்களுடன் நீதிக்குப் புறம்பாக நடந்து கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறினார்கள். மேலும் கொலையுண்ட அந்த இரு நபர்களுக்கான ஈட்டை கொலையுண்டவர்களின் வாரிசுகளுக்கு கொடுக்க வைத்தார்கள்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையில் இருந்த ஒரு நிபந்தனை என்னவெனில், முஹம்மதுடன் யார் சேர விரும்புகிறாரோ அவர் அவருடன் சேர்ந்து கொள்ளலாம். முஹம்மதின் தோழர்களில் எவராவது குரைஷிகளிடம் வந்து விட்டால் அவர் திருப்பித் தரப்பட மாட்டார். ஓர் ஆண் – அவர் முஸ்லிமாகவே இருந்தாலும் மதீனாவுக்கு வந்து முஸ்லிம்களுடன் சேர்ந்து விட்டால் அவரை மக்கத்தினரிடம் திருப்பி அனுப்பி விட வேண்டும் என்பதாகும்.

இப்போது பாருங்கள். மிகவும் மகத்தான நீதிமானாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த உடன்படிக்கையை எந்த அளவுக்கு உணர்வுகளை தியாகம் செய்தவாறு நிறைவேற்றினார்கள்! இந்த உடன்படிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போதே குரைஷிகளின் பிரதிநிதியாக இருந்த சுஹைல் பின் அம்ர் என்பவரின் மகனாகிய அபூ ஜன்தல் முஸ்லிமாகி இருந்தார். மக்கத்தினர் அவரை சிறைப்பிடித்து கடுமையான தண்டனை கொடுத்து வந்தனர். அவர் எப்படியோ சங்கிலியுடன் தட்டுத் தடுமாறியவாறு ஹுதைபிய்யா இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடைய தந்தை சுஹைல் இந்த நிபந்தனையை எழுத வைத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவரது மகன் அபூ ஜன்தல் தற்செயலாக அங்கு வந்து சேர்ந்தார். அவர் முஸ்லிம்களை நோக்கி வேதனை உடைய குரலில் இவ்வாறு கூறினார்:

முஸ்லிம்களே! இறைவனுக்காக என்னைக் காப்பாற்றுங்கள். முஸ்லிம்கள் இந்தக் காட்சியைப் பார்த்து துடித்தனர். ஆனால் சுஹைலும் தனது பிடிவாதத்தில் இருந்தார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், இது இந்த உடன்படிக்கையின்படி நான் உங்களிடம் கேட்கும் முதல் கோரிக்கையாகும். எனவே அபூ ஜன்தலை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள் என்றார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், உடன்படிக்கை இன்னும் முடிவுக்கு வரவில்லையே என்று கூறினார்கள். அதற்கு சுஹைல், நீங்கள் அபூஜன்தலை திருப்பித் தரவில்லை என்றால் உடன்படிக்கை முடிவுக்கு வந்து விட்டதாகக் கருதுங்கள் என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுஹைலுக்கு புரிய வைக்க முயற்சி செய்தார்கள். ஆனால் அவருடைய பிடிவாதத்தினால் கடைசியில் அவர்கள் அபூஜன்தலிடம், அபூஜன்தலே! பொறுமையை மேற்கொள்வீராக. இறைவன் பக்கம் பார்ப்பீராக. இறைவன் உமக்காகவும் உம்முடன் இருக்கும் மற்ற முஸ்லிம்களுக்காகவும் கண்டிப்பாக, தானே ஒரு வழியைத் திறப்பான். ஆனால் நாம் இப்போது கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம். ஏனெனில் மக்கத்தினருடன் உடன்படிக்கை ஏற்பட்டு விட்டது. இனி நாம் இந்த உடன்படிக்கைக்கு எதிராக காலெடுத்து வைக்க முடியாது எனக் கூறினார்கள். (சீரத் இப்னு ஹிஷாம், ஹாலாத்தே சுலஹ் ஹுதைபிய்யா)

இது எத்தகைய உடன்படிக்கை என்றால், உமர் (ரலி) போன்ற உறுதியான உள்ளம் கொண்டவர்களும் உருகிய நிலையில் இருக்கும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மாபெரும் உணர்வுகளை தியாகம் செய்து அந்த உடன்படிக்கையின் ஒவ்வொரு நிபந்தனையையும் நிறைவேற்றினார்கள். அதன் விளைவாக அல்லாஹ் இந்த ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே பரிசுத்தமான 10 ஆயிரம் பேர்களுடன் வெற்றி வாகை சூடியவாறு மக்காவில் நுழையும் நல்வாய்ப்பை வழங்கினான்.

செவியேற்கும் கண்ணியத்திற்குரியவர்களே! ஒரு காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கஅபாவின் திறவுகோலை வைத்திருந்த தல்ஹாவின் மகன் உஸ்மானிடம், பைத்துல்லாஹ்வின் வாசலைத் திறப்பீராக எனக் கூறினார்கள். ஆனால் அவர் மறுத்து விட்டார். மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதே திறவுகோலை தல்ஹாவின் மகன் உஸ்மானிடமிருந்து வாங்கி, பைத்துல்லாஹ்வின் கதவைத் திறந்து அதிலுள்ள சிலைகளை உடைத்து தூய்மையாக்கினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், இனி இந்தத் திறவுகோலை ஹாஷிம் சந்ததிகளிடம் கொடுங்கள் எனக் கூறினார்கள். நீதியை நிலைநாட்டிய அந்த நபியின் மீது அருள் உண்டாவதாக! அவர்கள் அந்தத் திறவுகோலை நீண்ட காலமாக பைத்துல்லாஹ்வை பராமரித்து வந்த தல்ஹாவின் மகன் உஸ்மானுக்கே திருப்பிக் கொடுத்து விட்டார்கள்!! மேலும் இனி இந்தத் திறவுகோல் எப்போதும் உம்மிடமும் உமது சந்ததியிடமும் இருக்கும் எனக் கூறினார்கள். அப்போது தல்ஹாவின் மகன் உஸ்மான் உடனே முஸ்லிமாகி விட்டார். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்வ் வஅலா ஆலி முஹம்மதின். வபாரிக் வஸல்லிம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் உரிமைகளை நிறைவேற்றுவதை மிகவும் கவனத்தில் கொண்டார்கள். கடன் வாங்கியவர்கள் தமது கடனை திருப்பிக் கொடுப்பது தொடர்பாக அதிகமாக வலியுறுத்தி வந்தார்கள். எதுவரையெனில், ஒருவர் கடனைத் திருப்பிக் கொடுப்பது கடமையாக இருக்கும் நிலையில் மரணித்தார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தால் அவர்கள் அவருடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்ததில்லை.

ஒருவருக்கு இன்னொருவர் மூலமாக துன்பம் ஏற்பட்டிருக்கிறதென்றால் அவர் அவரிடமிருந்து மன்னிப்பைப் பெறாத வரை அன்னார் அவரிடம் திருப்தி கொள்ளமாட்டார்கள். தமது நிலை

எப்படி இருந்ததென்றால், சூரா நஸ்ர் இறங்கியபோது (அதில் ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணத்தைப் பற்றிய செய்தி இருக் கிறது). ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு சொற்பொழிவு வழங்கினார்கள். அதைக் கேட்டு மக்கள் அதிகமாக அழுதனர். அதற்குப் பிறகு அவர்கள், உங்களில் எவராவது பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்றால் மறுமைக்கு முன் இன்று இங்கேயே வாங்கிக் கொள்ளலாம் என அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு நான் கூறுகிறேன் என்று கூறினார் கள். அக்காஷீ என்ற பெயரைக் கொண்ட ஒரு முதியவர் எழுந்து நின்று, எனது தாய் தந்தையர் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! தாங்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு இவ்வாறு வேண்டி இருக்காவிட்டால் நானும் இவ்வாறு முன்வந்திருக்க மாட்டேன். நான் இன்ன போரில் தங்களுடன் இருந்தேன். எனது ஒட்டகம் தங்களின் ஒட்டகத்திற்கு அருகில் வந்தபோது நான் தங்களின் காலை முத்தமிடுவதற்காக ஒட்டகத்தில் இருந்து கீழே இறங்கினேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கம்மை எடுத்து அடித்தபோது அது எனது முதுகில் அடிபட்டது. தாங்கள் என்னை வேண்டுமென்றே அடித்தீர் களா? அல்லது ஒட்டகத்தை அடிக்கும் போது அது என் மீது பட்டதா? என்பது எனக்குத் தெரியாது எனக் கூறினார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், தமது வீட்டில் இருக்கும் அதே கம்பை எடுத்து வருமாறு கூறினார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஃபாத்திமாவிடமிருந்து அந்த கம்பை எடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அக்காஷீ (ரலி) அவர்களிடம் கம்பைக் கொடுத்து, பழிக்குப் பழி வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். அப்போது அபூபக்ர், உமர் எழுந்து நின்று, நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பதிலாக எங்களிடம் பழிவாங்கிக் கொள்ளுங்கள் என்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவ்விருவரையும் அமர வைத்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் அலி (அலை) அவர்கள் என்னிடம் இருந்து பழிவாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரையும் தடுத்து விட்டார்கள். அதற்குப் பிறகு ஹஸன், ஹுஸைன் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோரும் எழுந்து நாங்கள் நபி (ஸல்) அவர்களின் பேரர்களாவோம். அக்காஷீயிடம், நாங்கள் பழியை வாங்கிக் கொள்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. எங்களிடம் பழிக்குப்பழி வாங்குவதும் நபி (ஸல்) அவர்களிடமிருந்து பழிவாங்குவதைப் போன்றதுதான் என்று கூறினர். அவர்களையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்து விட்டார்கள். மேலும் அகாஷியிடம், நீர் பழிவாங்குவீராக எனக் கூறினார்கள். அப்போது அக்காஷீ, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் என்னை அடித்தபோது எனது உடலில் ஆடை இருக்கவில்லை என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உடலில் இருந்து ஆடையைக் கழற்றியதும் முஸ்லிம்கள் பைத்தியம் பிடித்தது போன்று நின்று விட்டனர். மேலும் அக்காஷீ நமது எஜமானரை கயிற்றால் அடிப்பாரா என மனதிற்குள் கூறிக் கொண்டிருந்தனர். அக்காஷீ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உடலைப் பார்த்ததும் தாவிச் சென்று அன்னாரின் உடலைப் பற்றிப் பிடித்துக் கொண்டு முத்தமிட்டார். அத்துடன் எனது தாய் தந்தை தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! உங்களிடமிருந்து பழிக்குப்பழி வாங்க யாருடைய உள்ளம் விரும்பும்? எனக் கூறிக் கொண்டே சென்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஒன்று, நீர் பழிக்குப்பழி வாங்க வேண்டும் அல்லது மன்னிக்க வேண்டும் எனக் கூறினார்கள். அப்போது அக்காஷீ அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்வும் என்னை மறுமையில் மன்னிப்பான் என்ற நம்பிக்கையில் நான் தங்களை மன்னிக்கின்றேன் எனக் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் மறுமையில் சுவர்க்கத்தில் என்னுடன் இருக்கும் தோழரைக் காண விரும்புகின்றவர் இந்த முதியவரைக் காணுங்கள் எனக் கூறினார்கள். பிறகு முஸ்லிம்கள் அக்காஷீயின் நெற்றியில் முத்தமிடத் தொடங்கினர். மேலும் நீர் மிகப் பெரிய அந்தஸ்தைப் பெற்று விட்டீர் என வாழ்த்துக்களைக் கூறினர். (மஜ்மவுஸ் ஸவாயிது தொகுதி 9 பக்கம் 289, தாருல் குதுபில் அர்பிய்யி. பைரூது)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகிறார்கள்:

“இக்காலத்தில் அஹ்மதி களாகிய நம் மீது நீதி, நேர்மையை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அதிகமாக இருக்கிறது. ஏனெனில் நாம் இந்தக் காலத்தின் இமாமை அடையாளங்கண்டு கொண்டோம் என்றும் அவருடைய பைஅத்தில் இணைந்து விட்டோம் என்றும் நாம் வாதிக்கின்றோம். எந்த இமாமை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீதியாளராகவும், தீர்ப்பு வழங்குபவராகவும் குறிப்பிட்டுள் ளார்களோ அந்த இமாம் அந்த சிறப்புத் தன்மைகளைக் கொண்டவ ராக இருக்கும்போது அவரை ஒப்புக் கொள்பவர்களும் நீதியின் உயர்ந்த படித்தரங்களை நிலைநாட்ட வேண்டும் என நம்பிக்கை வைக்கப் படுகிறது.”

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இப்னு மர்யம் நீதியாளராகவும் தீர்ப்பு வழங்குபவராகவும் இறங்குவார் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 94 பைரூத் வெளியீடு)

பிறகு இன்னொரு ரிவாயத் இருக்கிறது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உலக வாழ்வின் ஒரு நாள் எஞ்சியிருந் தாலும் அல்லாஹ் கண்டிப்பாக எனது குடும்பத்திலிருந்து ஒருவரை நியமிப்பான். இதற்கு முன்னர் உலகம் அநீதி கொடுமையால் நிரம்பி இருந்ததைப் போன்று அவர் அதை நீதி, நேர்மையால் நிரப்புவார். (அபூதாவூது, கிதாபுல் ஃபித்ன். அவ்வல் கிதாபுல் மஹ்தி)

அதாவது இமாம் மஹ்தி வருவது எந்நிலையிலும் அவசியமானதாகும். மறுமைக்கு ஒரு நாள் எஞ்சியிருந் தாலும் அவர் தோன்றுவார். அதற்குப் பிறகு இவையெல்லாம் நடக்கும். நாம் இமாம் மஹ்தியைக் கண்டோம். அவர்களை அடையாளங் கண்டோம். அவர்களின் ஜமாஅத்தில் இணைந்தோம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை நிறைவேறக் கண்டோம். நாம் நற்பேறு பெற்றவர் களாவோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறு கிறார்கள்: தற்போது வாக்களிக்கப் –பட்ட மஸீஹின் காலகட்டம் வந்து விட்டது. இப்போது அல்லாஹ் வானத்திலிருந்து வழிவகைகளை உருவாக்குவான். பூமி அநீதி, கொடுமை ஆகியவற்றால் நிரம்பி இருந்ததைப் போன்று இனி அது நீதி, சாந்தி, சமாதானம் ஆகிய வற்றால் நிரம்பி விடும். இதிலிருந்து கொஞ்சம் பங்கைப் பெறுகின்ற செல்வந்தரும், மன்னரும் அருளுக் குரியவர்களாவர். (கவர்ன்மென்ட் அங்ரீஸீ அவ்ர் ஜிஹாது. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 19)

அல்லாஹ் நமது ஹுஸூர் (அலை) அவர்களின் அழகிய முயற்சியில் அருளை வழங்கு வானாக. உலகில் சீக்கிரம் நீதி, நேர்மை நிலைபெறட்டுமாக. அமைதி இழந்த காலகட்டம் முடிவுக்கு வரட்டுமாக. இது உலகம் இறை தூதரை நேசிக்கும்போதுதான் நடக்கும். அதாவது உலகம் இக்காலத்தின் இமாமையும் நீதியாளரையும் தீர்ப்பளிப்பவரையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களின் மூலமாக நிலைபெறும் கிலாஃபத்தின் நிழலின் கீழ் புகலிடம் பெற வேண்டும்.

வ ஆகிரு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

✧ ✧ ✧ ✧ ✧



# ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்களின் வாழ்க்கை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர் என்ற நிலையில்...

(ஷேக் முஜாஹிது அஹ்மது ஷாஸ்திரி - ஆசிரியர் பத்ர் பத்திரிகை - இந்தி பதிப்பு - காதியான்)

அல்லாஹ் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து,

يٰۤاَيُّهَا الرَّسُوْلُ بَلِّغْ مَاۤ اُنْزِلَ اِلَيْكَ مِنْ رَّبِّكَ

தூதரே! உமது இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதை நல்ல முறையில் பிறருக்கு எட்ட வைப்பீராக (5:68) என்று கூறுகின்றான்.

பிறகு இந்த அழைப்பிற்கான அதாவது தப்லீக் செய்வதற்கான வழிமுறை பற்றி சுட்டிக் காட்டியவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

فَلِذٰلِكَ فَادْعُ ۚ وَاسْتَقِمْ كَمَاۤ اُمِرْتَ

இதன் அடிப்படையிலேயே நீர் அவர்களுக்கு அழைப்பு விடுப்பீராக. உமக்கு கட்டளையிட்டவாறு நிலைத்திருப்பீராக. (42:16)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِىْ هِىَ اَحْسَنُ ؕ اِنَّ رَبَّكَ هُوَ اَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيْلِهٖ وَهُوَ اَعْلَمُ بِالْمُهْتَدِيْنَ

விவேகத்துடனும் அழகிய அறிவுரையுடனும் உமது இறைவனின் பாதையை நோக்கி அழைப்பீராக. அவர்களுடன் சிறந்த ஆதாரத்துடன் விவாதம் செய்வீராக. உமது இறைவன் தனது பாதையை விட்டு விலகியவரை எல்லாரையும் விட நன்கு அறிந்தவனாவான். மேலும் நேர்வழி பெற்றவராகவும் எல்லாரையும் விட அவன் நன்கு அறிந்தவன் ஆவான். (16:126)

இந்த இறை வசனங்களில் இருந்து பெருமானார் (ஸல்) அவர்களது அடிப்படைத் தகுதியானது அழைப்பு விடுப்பவர் என்ற நிலையிலேயே இருந்தது.

அல்லாஹ் கூறுகின்றான்:

يٰۤاَيُّهَا النَّبِىُّ اِنَّاۤ اَرْسَلْنٰكَ شَاهِدًا وَّمُبَشِّرًا وَّنَذِيْرًا وَّدَاعِيًا اِلَى اللّٰهِ بِاِذْنِهٖ وَسِرَاجًا مُّنِيْرًا

நபியே! நிச்சயமாக உம்மை சாட்சியாகவும், நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும், அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப அவன் பக்கம் அழைப்பவராகவும், ஒளி வீசும் சூரியனாகவும் நாம் அனுப்பியுள்ளோம். (33:45,46)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய வாழ்க்கை பற்றி படிக்கின்றபோது இந்த உண்மை நமக்கு தெளிவாகி விடுகின்றது. அதாவது அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுகின்ற பணிக்கு ஏனைய எல்லா பணிகளையும் விட முன்னுரிமை வழங்கினார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு நிலையிலும் அதன் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் எப்போதும் அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். வாருங்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் இறைவன் பக்கம் அழைக்கும் பணியின் சில முக்கிய அம்சங்களை பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி மற்றும் அவர்களது அருளுக்குரிய கட்டளைகள் ஆகியவற்றின் ஒளியில் அன்னாரது உண்மைப் பேரன்பரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியிலும் நாம் தெரிந்து கொள்வோம். அதன் மூலமாக நாம் நமது பொறுப்புகளை பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின் ஒளியில் சிறந்த வழிமுறை மூலம் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய முடியும். ஏனென்றால், இந்த உம்மத்தின் மீதும் பெருமானார் (ஸல்) அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றவாறு இறைவன் பக்கம் அழைக்கும் பணி கடமையாக்கப்பட்டிருக்கின்றது.

அல்லாஹ் சூரா ஆல இம்ரானில் இவ்வாறு கூறுகின்றான்:

وَلْتَكُنْ مِّنْكُمْ اُمَّةٌ يَّدْعُوْنَ اِلَى الْخَيْرِ وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ ؕ وَاُولٰۤئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ

மக்களை நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்ல பணிகளைச் செய்யுமாறு கட்டளையிட்டு தீய விஷயங்களிலிருந்து அவர்களைத் தடுக்கின்ற கூட்டம் இருந்து வர வேண்டும். (3:105)

### அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணிக்குள்ள சிறப்பு

ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் ஸஹல் பின் சஅது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பார்த்து, ''இறைவன் மீது ஆணையாக! உன் மூலமாக ஒரு மனிதர் நேர்வழியைப் பெறுவது உமக்கு உயர்ந்த ரகத்திலுள்ள சிவப்பு ஒட்டகங்கள் கிடைப்பதை விட சிறந்ததாகும்'' என்று கூறினார்கள். (முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில் பாபு ஃபஸாயிலு அலி இப்னு அபீதாலிப்)

### நன்மையின் பக்கம் அழைப்பதற்கான நற்கூலி

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நன்மையின் பணி மற்றும் நேர்வழியின் பக்கம் அழைக்கக் கூடியவருக்கு அதைச் செய்பவருக்கு கிடைக்கக்கூடிய அதே அளவு நற்கூலி கிடைக்கும். வழிகேடு மற்றும் தீமையின் பக்கம் அழைப்பவருக்கு அந்த தீமையைச் செய்யக் கூடியவருக்கு கிடைக்கக் கூடிய அதே அளவு பாவம்தான் கிடைக்கும். அவரது பாவங்களில் எந்த குறைவும் ஏற்படாது. (முஸ்லிம் கிதாபுல் இல்ம்)

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தப்லீக் பணிகள்

ஹிஜ்ரத்திற்கு சிறிது காலம் முன்னதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் அபூஸர் கஃப்பாரி (ரலி) அவர்களை முஅல்லிமாக அவரது சமுதாயத்திற்கு அனுப்பினார்கள். அவர்கள் அங்கு சென்று இஸ்லாத்தை பிரச்சாரம் செய்தார்கள். அப்போது அவரது கோத்திரத்தில் உள்ளவர்களில் பாதி பேர் அப்போதே முஸ்லிம்களாகி விட்டனர். எஞ்சி இருந்த மக்கள் நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களை ஹிஜ்ரத் செய்த பிறகு அவர்கள் மீது நம்பிக்கை கொள்வோம் என்று கூறினர். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது அம்மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அதைப் பார்த்து அஸ்லம் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்கூட இஸ்லாத்தின் முன்னால் தலைகுனிந்து விட்டனர். (முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில் பாபு ஃபஸாயில் அபீஸர்)

### பெருமானார் (ஸல்) அவர்களது தப்லீகின் துவக்கம்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எம்.ஏ அவர்கள் தமது புகழ்பெற்ற நூலான சீரத் காத்தமுன்னபிய்யீனில் இவ்வாறு கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களது இயல்பில் நிதானமும் நிம்மதியும் இருந்தது. அவர்கள் மக்களை அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் பக்கம் அழைக்க ஆரம்பித்தார்கள். ஷிர்கிற்கு எதிராக போதனை செய்தார்கள். ஆனால், ஆரம்ப நாட்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது பிரச்சாரத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை. மாறாக, மிகவும் அமைதியுடன் தமது பணியைச் செய்ய ஆரம்பித்தார்கள். தம்மைச் சந்திக்க வருபவர்களுக்கு மட்டுமே அவர்கள் தப்லீக் செய்து வந்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது M.A அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன்னபிய்யீன் பக்கம் 120)

### பெருமானார் (ஸல்) அவர்கள் தமது உறவினர்களுக்கு விடுத்த அழைப்பு

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் விருந்தினருக்கான ஏற்பாட்டைச்


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாமாக வந்த துஆ**

رَبِّ اَصْلِحْ اُمَّةَ مُحَمَّدٍ

என் இறைவா ! முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தை சீர்திருத்துவாயாக.

**A. ஷம்சுல் ஆலம்**

காயித்,மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

செய்யுமாறு கூறினார்கள். அந்த விருந்தில் பனூ அப்தில் முத்தலிப் கோத்திரத்தினரை அழைக்குமாறும் அவர்கள் கூறியிருந்தார்கள். இந்த வழிமுறையின் மூலம் அவர்கள் வரை உண்மையின் தூதுச் செய்தியை எட்ட வைக்க விரும்பினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தமது எல்லா நெருங்கிய உறவினர்களையும் விருந்திற்கு அழைத்தார்கள். அவர்கள் ஏறக்குறைய 40 பேர் இருந்தனர். அவர்கள் உணவு உண்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தமது உறவினர்களிடம் சிறிது நேரம் சொற்பொழிவாற்ற விரும்பினார்கள். ஆனால், தீயவனான அபூலஹப் அவர்களிடம் சில விஷயங்களைக் கூறினான். அதன் காரணமாக இந்த எல்லா மக்களும் அங்கிருந்து கலைந்து சென்று விட்டனர். அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் இந்த சந்தர்ப்பமும் கை நழுவிப் போய் விட்டது. இப்போது மீண்டும் விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களது உறவினர்கள் மீண்டும் ஒன்று திரண்டனர். அப்போது அவர்கள் அந்த உறவினர்களைப் பார்த்து, பனூ அப்துல் முத்தலிபே! நான் உங்களிடம் கொண்டு வந்துள்ள விஷயத்தை விட சிறந்த விஷயத்தை எந்தவொரு நபரும் தனது கோத்திரத்தினரிடம் கொண்டு வந்ததில்லை. நான் உங்களை இறைவன் பக்கம் அழைக்கின்றேன். நீங்கள் நான் கூறுவதைக் கேட்டால் நீங்கள் மார்க்கம் மற்றும் உலகத்தின் சிறந்த அருட்கொடைகளுக்கு வாரிசாகி விடுவீர்கள். இப்போது இந்தப் பணியில் எனக்கு உதவி செய்பவராக உங்களில் யார் இருப்பார்? என்று கேட்டார்கள். எல்லாரும் அமைதியாக இருந்தனர். எல்லா பக்கத்திலிருந்தும் சபையில் அமைதி நிலவியது. அப்போது திடீரென்று ஒரு பக்கத்திலிருந்து 13 வயதுள்ள மெலிந்த ஒரு சிறுவன் எழுந்து நின்றான். அவனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவன் நான் உங்கள் எல்லாரையும் விட பலவீனமானவனாகவும் உங்கள் எல்லாரையும் விட சிறுவனாக இருந்தாலும் நான் உங்களுக்கு இவ்விஷயத்தில் துணை நிற்பேன் என்று கூறினான். இது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் குரலாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறிய இந்த சொற்களைக் கேட்ட பிறகு தமது உறவினர்களைப் பார்த்து, நீங்கள் விரும்பினால் இந்த சிறுவன் கூறுவதைக் கேட்டு அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். வந்திருந்தவர்கள் இந்தக் காட்சியைப் பார்த்தனர். அவர்கள் அதைப் பார்த்து படிப்பினையைப் பெறுவதற்குப் பதிலாக எல்லாரும் எள்ளி நகையாடி சிரிக்க ஆரம்பித்தனர். அபூ லஹப் தனது மூத்த சகோதரரான அபீதாலிபிடம், பாருங்கள். முஹம்மது உங்களுக்கு இப்போது இந்தக் கட்டளைத் தந்துள்ளார். அதாவது நீங்கள் உங்கள் மகன் கூறுவதைப் பின்பற்றிச் சென்றவாறு அதற்கேற்ப செயல்படுங்கள் என்று கூறினார். பிறகு இம்மக்கள் இஸ்லாம் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் பலவீனமான நிலையைப் பார்த்து எள்ளி நகையாடி பரிகாசம் செய்தவாறு அங்கிருந்து பிரிந்து சென்றனர். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத் காத்தமுன்னபிய்யீன் பக்கம் 128–129)

## அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணியும் மக்கத்து குறைஷியர்களின் நடைமுறையும்

இறைவனுக்கு இணை வைப்பவர்கள் அசுத்தமானவர்கள் ஆவர். அறிவீனர்கள் ஆவர். ஷய்த்தானின் சந்ததிகள் ஆவர். அவர்கள் வணங்கும் கடவுளர்கள் நெருப்பின் எரிபொருளாகவும் நரகத்தின் எரிபொருளாகவும் இருக்கின்றனர் என்ற வசனங்கள் இறங்கியபோது அபூதாலிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை அழைத்து எனது சகோதரரின் மகனே! நீங்கள் கூறும் கடுமையான வார்த்தைகளைக் கேட்டு உமது சமுதாயத்தினர் மிகவும் ஆத்திரமடைந்துள்ளனர். விரைவில் அவர்கள் உம்மை அழித்து விடலாம். அத்துடன் என்னையும் அவர்கள் அழித்து விடலாம். நீ இவர்களில் அறிவு படைத்த மக்களை முட்டாளாக்கி விட்டாய். இவர்களில் பெரியவர்களாக இருப்பவர்களைப் படைப்பினங்களிலேயே மிகவும் தீயவர்கள் என்று கூறி விட்டாய். அவர்களது கண்ணியமிக்க கடவுளர்களுக்கு நெருப்பின் எரிபொருள்கள் என்றும் நரகத்தின் எரிபொருள்கள் என்றும் நீ பெயர் வைத்துள்ளாய். பொதுவாக இவர்கள் அனைவரையுமே நீங்கள் அசுத்தமானவர்கள் என்றும் ஷய்த்தானின் சந்ததிகள் என்று கூறுகின்றீர்கள். உங்களுக்கு நல்லதை விரும்பியவாறு நான் இதைக் கூறுகின்றேன். நீங்கள் உங்களது நாவைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். கடுமையான சொற்களைக் கூறுவதிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். அது அல்லாமல் சமுதாயத்தை எதிர்த்து நிற்பதற்கு என்னிடம் சக்தி இல்லை என்று கூறினார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் எனது சிறிய தந்தையே! இவை கடுஞ்சொற்கள் அல்ல. மாறாக, இது உள்ளதை உள்ளபடி கூறுவதே ஆகும். உண்மையான விஷயத்தை எடுத்துக் கூறுவதாகும். இந்தப் பணிக்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். இதனால் நான் மரணிக்க வேண்டியது வந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இந்த மரணத்தை ஏற்றுக் கொள்கிறேன். எனது வாழ்க்கை இதே வழியில் அர்ப்பணமாகி விட்டது. நான் மரணத்திற்கு அஞ்சி உண்மையை வெளிப்படுத்தி கூறுவதிலிருந்து விலகிவிட முடியாது. எனது சிறிய தந்தையே! உங்களுக்கு உங்களது பலவீனம் மற்றும் உங்களுக்கு ஏற்படும் துன்பம் பற்றிய எண்ணம் இருந்தால் என்னை உங்களது அடைக்கலத்தின்கீழ் வைப்பதில் இருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். எனக்கு உங்களது எந்த தேவையும் இல்லை. இறைவனின் கட்டளைகளை எட்ட வைப்பதிலிருந்து நான் ஒருபோதும் விலக மாட்டேன். எனது எஜமானனின் கட்டளை எனது உயிரை விட எனக்குப் பிரியமானதாகும்.

இறைவன் மீது ஆணையாக! நான் இந்த வழியில் கொலை செய்யப்பட்டால் மீண்டும் மீண்டும் உயிர் பெற்று எப்போதும் இதே வழியில் மரணித்துக் கொண்டிருப்பதையே நான் விரும்புகின்றேன். இது அச்சத்திற்குரிய இடம் அல்ல. மாறாக, இந்த வழியில் துக்கத்தைச் சகித்துக் கொள்வதில் எனக்கு அளவு கடந்த இன்பம் இருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள். அவர்களது முகத்தில் உண்மை மற்றும் ஒளியால் நிரம்பி இருந்த உருக்கம் தெளிவாகத் தென்பட்டுக் கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் கூற வந்ததைக் கூறி முடித்த பிறகு உண்மையின் ஒளியைப் பார்த்து தன்னையும் அறியாமல் அபூ தாலிப் அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து நான் உங்களது இந்த உயர்வான நிலையைப் பற்றி அறியாதவனாக இருந்தேன். நீங்கள் வேறு ஒரு வடிவத்தில் மகிமையுடன் இருக்கின்றீர்கள். செல்லுங்கள்! உங்களது பணியைச் செய்யுங்கள். நான் உயிருடன் இருக்கும் வரை எனது சக்திக்கேற்ப நான் உங்களுக்கு துணையாக இருப்பேன். (சய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அடிக்குறிப்பில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அபூ தாலிப் பற்றிய இந்த எல்லா விஷயங்களும் நூல்களில் எழுதப்பட்டிருந்தாலும் இந்த எல்லா சொற்றொடர்களும் எனக்கு இல்ஹாமாக இறங்கியதாகும். அதனை இறைவன் இந்த எளியவனின் உள்ளத்தில் இறக்கியுள்ளான். சில வார்த்தைகள் மட்டும் விளக்கத்திற்காக இந்த எளியவன் தரப்பிலிருந்து கூறப்பட்டவையாகும்). (இஸாலே அவ்ஹாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 110–111)



### தாயி.்.ப் நகரத்திலுள்ள மக்களை இறைவன் பக்கம் அழைத்தல் மற்றும் அம்மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் நடந்து கொண்ட விதம்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அபூ தாலிப் அவர்களை பள்ளத்தாக்கில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இந்த நாட்கள் முடிந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தப்லீக் செய்ய ஆரம்பித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சுதந்திரமாகச் செயல்படுகின்ற வாய்ப்பு கிடைத்ததும் அவர்கள் தாயிஃபிற்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைக்க எண்ணினார்கள். தாயிஃப் ஒரு புகழ்பெற்ற இடமாகும். அது மக்காவிலிருந்து தென் கிழக்கில் அங்கிருந்து 40 மைல்களுக்கு அப்பால் இருந்தது. அந்த காலத்தில் பனூ ஹனீஃப் கோத்திரத்தினர் அங்கு குடி புகுந்திருந்தனர். கஅபாவிற்குரிய தனிச் சிறப்பை தனியாக வைத்து விட்டு நிகராக இருக்கின்ற ஒரு நகரமாக இருந்தது. அங்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பெருமக்களும் செல்வந்தர்களும் இருந்தனர். தாயிஃபிற்கு இருக்கின்ற இந்த முக்கியத்துவத்தை சுயமே மக்காவிலுள்ளவர்களே ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இது மக்காவில் உள்ளவர்கள் கூறியது ஆகும்.

لَوْلَا نُزِّلَ هٰذَا الْقُرْاٰنُ عَلٰى رَجُلٍ مِّنَ الْقَرْيَتَيْنِ عَظِيْمٍ

அதாவது, இந்தக் குர்ஆன் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டிருந்தால் பிறகு மக்கா மற்றும் தாயிஃபிலுள்ள ஏதாவதொரு பெரிய மனிதர் மீது அது ஏன் இறக்கப்படவில்லை? என்று அவர்கள் கூறினர். இரண்டு ஊர்கள் என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது மக்கா மற்றும் தாயிஃப் ஆகும். நபித்துவத்தின் 10–வது ஆண்டில் ஷவ்வால் மாதத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்திற்குத் தனியாகச் சென்றார்கள். சில அறிவிப்புகளில் செய்து பின் ஹாரிஸா அவர்களும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அங்கு சென்று பெருமானார் (ஸல்) அவர்கள் பத்து நாட்கள் தங்கினார்கள். நகரத்திலுள்ள பல தலைவர்களையும் அவர்கள் சந்தித்தார்கள். ஆனால், இந்த நகரத்தில் உள்ளவர்களுக்கும் மக்காவில் உள்ளவர்களைப் போன்று அக்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்ற நற்பாக்கியம் கிடைக்கவில்லை. அங்குள்ள அனைவருமே இஸ்லாத்தின் தூதுச் செய்தியை மறுத்து விட்டனர். பரிகாசம் செய்தனர். இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் தாயிபின் பெரும் தலைவரான அப்து பில் லைலிடம் சென்று அவனை இஸ்லாத்திற்கு அழைத்தார்கள். ஆனால் அவனும் தூதுச் செய்தியை மறுத்து விட்டு பரிகாசம் செய்யும் வகையில், நீங்கள் உண்மையாளராக இருந்தால் எனக்கு உங்களிடம் பேசுவதற்கான தைரியம் இல்லை. நீங்கள் பொய்யராக இருந்தால் உங்களிடம் பேசுவது பயனற்றதாகும் என்று கூறினான்.

பிறகு நகரத்திலுள்ள இளைஞர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும் விஷயத்தின் தாக்கம் ஏற்பட்டு விடகூடாது என்ற எண்ணத்தில் அவன் அவர்களிடம் நீங்கள் இங்கிருந்து சென்று விடுவதுதான் சிறந்தது என்று கூறினான். ஏனென்றால், இங்கு எவருமே நீங்கள் கூறுவதை கேட்பதற்குத் தயாராக இல்லை என்று கூறினான். இதற்குப் பிறகு இந்த தீயவன் நகரத்திலிருந்த குண்டர்களை அவர்களுக்கு எதிராக ஏவி விட்டான். பெருமானார் (ஸல்) அவர்கள் நகரத்திலிருந்து புறப்பட்டுச் சென்றபோது இந்த குண்டர்கள் கூச்சலிட்டவாறு அவர்களுக்குப் பின்னால் சென்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கற்களை வீசத் தொடங்கினார்கள். அதனால் அவர்களது முழு உடலும் இரத்தத்தால் நனைந்து விட்டது. தொடர்ந்து மூன்று மைல் தூரம் வரை இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை ஏசியவாறு அவர்கள் மீது கற்களை வீசிக் கொண்டே வந்தனர்.

தாயிஃபிலிருந்து மூன்று மைல் தூரத்தில் மக்கத்து தலைவரான உத்பா பின் ரபிய்யாவின் ஒரு தோட்டம் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த தோட்டத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். அநீதி இழைத்த அம்மக்கள் சோர்வடைந்து திரும்பிச் சென்றனர். இங்கு ஒரு நிழலில் நின்றவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اِلَيْكَ اَشْكُوْ ضُعْفَ قُوَّتِيْ وَقِلَّةَ حِيْلَتِيْ وَ هَوَانِيْ عَلَى النَّاسِ
اَللّٰهُمَّ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ اَنْتَ رَبُّ الْمُسْتَضْعَفِيْنَ وَ اَنْتَ رَبِّيْ

அதாவது, என் இறைவா! நான் எனது ஆற்றலுள்ள பலவீனம், எனது திட்டத்திலுள்ள குறைபாடு, மக்களை எதிர்த்து நிற்பதில் எனது சக்தியின்மை ஆகியவற்றைப் பற்றி உன்னிடமே முறையிடுகின்றேன். என் இறைவா! நீ எல்லாரையும் விட அதிகமாக கருணை காட்டக் கூடியவனாக இருக்கின்றாய். நீயே பலவீனமானவர்களையும் ஆதரவற்றவர்களையும் கண்காணிப்பவனாகவும் அவர்களைப் பாதுகாப்பவனாகவும் இருக்கின்றாய். மேலும் நீயே எனது இறைவனாவாய். நான் உனது முகத்தின் ஒளியில் அடைக்கலம் தேட விரும்புகின்றேன். ஏனென்றால் நீயே இருள்களை அகற்றி மனிதனை இவ்வுலகம் மற்றும் மறுமையின் நன்மைகளுக்கு வாரிசாக ஆக்குகின்றாய்.

உத்பாவும், ஷைபாவும் அந்த நேரத்தில் தங்களது இந்தத் தோட்டத்தில் இருந்தனர். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது இந்த நிலைமையைப் பார்த்து தங்களது தூரத்து உறவினர் அல்லது நெருங்கிய உறவினர் என்ற நிலையிலோ அல்லது சமுதாய உணர்வின் அடிப்படையிலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ தங்களது அடிமையான அத்தாஸ் என்ற பெயரை உடைய கிறித்தவர் ஒருவரிடம் ஒரு குவளையில் கொஞ்சம் திராட்சைப் பழங்களை வைத்து அதை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கொடுத்து அனுப்பினர். பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பழங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அத்தாஸைப் பார்த்து நீங்கள் எந்த ஊரைச் சார்ந்தவர்? மேலும் எந்த மதத்தை நீங்கள் பின்பற்றுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அத்தாஸ் நான் நினேவா பட்டணத்தைச் சார்ந்தவன். நான் கிறித்தவ மதத்தைப் பின்பற்றுகின்றேன் என்று கூறினார். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், என்ன? இறைவனது ஒரு நல்லடியாரான மதாவின் மகன் யூனுஸ் வாழ்ந்து வந்த அந்த நினேவா பட்டணத்தில் இருந்தா தாங்கள் வந்துள்ளீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அத்தாஸ் ஆம் அங்கிருந்துதான் நான் வந்துள்ளேன். ஆனால், உங்களுக்கு யூனுஸ் அவர்களின் நிலைமை பற்றி எப்படி தெரியும்? என்று கேட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர் எனது சகோதரர் ஆவார். ஏனென்றால், அவரும் அல்லாஹ்வின் நபியாக இருந்தார். நானும் அல்லாஹ்வின் நபியாக இருக்கின்றேன் என்று கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு இஸ்லாம் பற்றி தப்லீக் செய்தார்கள். அதன் மிகப் பெரும் தாக்கம் அத்தாஸ் மீது இருந்தது. அத்தாஸ் முன்னால் வந்து பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அவருக்கு ஏற்பட்ட கலப்பற்ற அன்பின் உணர்வின் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களது கைகளை முத்தமிட்டார். இந்தக் காட்சியைத் தொலைவில் நின்று கொண்டிருந்த உத்பாவும் ஷைபாவும் கூட பார்த்தனர். அத்தாஸ் அவர்களிடம் திரும்பிச் சென்ற போது அவர்கள் அத்தாஸே! நீ இந்த நபரின் கைகளை ஏன் முத்தமிட்டாய்? உனக்கு என்ன ஆயிற்று? என்று கேட்டனர். மேலும் அவர்கள், இந்த நபர் உமது மார்க்கத்தை சீர்குலைத்து விடுவார். ஆனால், உமது மார்க்கம் அவரது மார்க்கத்தை விட சிறந்த மார்க்கமாகும் என்று அத்தாஸிடம் கூறினர்.

நபிமொழியில் இவ்வாறு வருகின்றது. ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் உங்களுக்கு எப்போதாவது உஹது போரில் நடந்த நாளை விட அதிகமாக துன்பம் ஏற்பட்டிருக்கின்றதா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! உமது சமுதாயத்திடமிருந்து பெரும் பெரும் கடினமான நேரங்களைப் பார்க்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டிருக்கின்றது என்று கூறினார்கள். பிறகு அவர்கள் தாயிபிற்குப் பயணம் சென்ற நேரத்தில் தனக்கு ஏற்பட்ட நிலைமைகளைப் பற்றி கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த பயணத்திலிருந்து நான் திரும்பி வந்த நேரத்தில் என்னிடம் மலைகளின் மலக்கு வந்தார். அவர் என்னிடம் என்னை இறைவன் உங்களிடம் அனுப்பி வைத்திருக்கின்றான். நீங்கள் கட்டளையிட்டால் நான் எனக்கு அருகில்

உள்ள இந்த இரண்டு மலைகளை இம்மக்கள் மீது விழச் செய்து இவர்களை அழித்து விடுவதற்–காகவே நான் வந்துள்ளேன் என்று கூறினார். அதற்கு நான் ஒருபோதும் அவ்வாறு செய்ய வேண்டாம். அல்லாஹ் இந்த மக்களிலிருந்தே ஏக இறைவனை வணங்கக்கூடிய மக்களை உருவாக்கி விடுவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்று அவரிடம் நான் கூறினேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல் பக்கம் 181–184)

### கடிதம் மூலம் தப்லீக்

இந்த சந்தர்ப்பத்தில் அனுப்பப்பட்ட தப்லீக் கடிதங்கள் அரபு நாட்டின் நாலாப்புறமும் இருந்து வந்த ஆட்சியாளர்களின் பெயரில் அனுப்பப்பட்டன. அதாவது வடக்கு திசையில் இருந்த புகழ்பெற்ற ரோமானியப் பேரரசின் மன்னரான கெய்ஸர் அவர்களின் பெயரிலும், வடகிழக்குத் திசையில் பாரசீகத்தின் புகழ்பெற்ற பேரரசின் மன்னரான கிஸ்ரா அவர்களின் பெயரிலும், அரபு நாட்டின் வடமேற்குப் பகுதியிலுள்ள எகிப்தின் மன்னர் முகவ்கிஸின் பெயரிலும், கிழக்கில் உள்ள யமாமாவின் தலைவரான ஹோஸா பின் அலி அவர்களின் பெயரிலும், அரபு நாட்டிற்கு மேற்கில் உள்ள அபிசீனியாவில் அரபு நாட்டிற்கு எதிரில் ஆப்பிரிக்கக் கண்டத்தில் இருந்து வந்த கிறித்தவ ஆட்சியின் மன்னரான நஜ்ஜாஷி அவர்களின் பெயரிலும் இந்த தப்லீக் கடிதங்களை பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். இவ்வாறே வடக்கில் அரபு நாட்டின் எல்லையுடன் ஒட்டியிருந்த பிரதேசமான கஸ்ஸான் நாட்டின் மன்னரது பெரியலும், அரபு நாட்டிற்குத் தெற்கிலுள்ள ஏமன் நாட்டின் தலைவருக்கும் அரபு நாட்டிற்கு கிழக்கில் இருக்கின்ற பெஹ்ரைன் நாட்டுத் தலைவருக்கும் தப்லீக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் நாலாபுறமும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்து தனது தப்லீக் கடமையை நிறைவேற்றினார்கள். ஆனால் இவை எல்லாமே ஹுதைபிய்யாவில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு ஒரே சமயத்தில் அனுப்பப்பட்ட கடிதங்கள் ஆகும் என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் சில கடிதங்கள் ஒரே நேரத்தில் அனுப்பப்பட்டிருக்கலாம். சில கடிதங்கள் அனுப்புவதில் சிறிது கால இடைவெளி இருந்திருக்கலாம். எந்நிலையிலும் ஹுதைபிய்யாவில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைக்கு பிறகே இந்த தப்லீக் கடிதங்கள் அனுப்பப்பட்டன என்பது உறுதியான விஷயமாகும். முதலாவது கடிதம் ரோமானிய மன்னர் ஹெராகிளியஸ் அவர்களின் பெயரில் எழுதப்பட்டது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல் பக்கம் 798)

### அரபு கோத்திரத்தினருக்கு இஸ்லாத்தின் பக்கம் வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பு

ஹஜ்ஜின் நாட்களில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரபு கோத்திரத்தினரிடம் சென்றார்கள். அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். நான் நபியாகவும் ரஸூலாகவும் இருக்கின்றேன். நீங்கள் என்னை உண்மைப்படுத்தி எனக்கு உதவி செய்யுங்கள். பிறகு அல்லாஹ் என்னை ஏன் அனுப்பினான் என்று சுயமே உங்களுக்கு புரிந்து விடும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இது தொடர்பாக உபைதுல்லாஹ் பின் அப்பாஸ் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: நான் ரபீஅ பின் இபாது அவர்கள் தமது தந்தையிடமிருந்து கேட்டு இந்த சம்பவத்தைப் பற்றி கூறுவதை நான் கேட்டேன்.

ரபீஅ இவ்வாறு கூறினார்: நான் இளைஞராக இருந்தேன். அப்போது நான் எனது தந்தையுடன் மினாவில் இருந்தேன். ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அரபு கோத்திரத்தினரின் தங்குமிடங்களுக்குச் சென்று அங்கு நின்றவாறு ஒவ்வோரு கோத்திரத்தின் பெயரையும் கூறி அழைத்தவாறு இந்தக் கோத்திரத்தைச் சார்ந்தவர்களே! நான் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றேன். நான் உங்களிடம் வந்துள்ளேன். நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். எதையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள். இதைத் தவிர எந்த தேவதைகளை நீங்கள் வணங்கி வருகின்றீர்களோ அவற்றிடமிருந்து உங்களது தொடர்புகளை முற்றிலுமாக முறித்துக் கொள்ளுங்கள். என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். என்னை உண்மைப்படுத்துங்கள். எனக்கு உதவி செய்யுங்கள் என்று நான் உங்களுக்கு கட்டளையிடுகின்றேன். பிறகு எந்த தூதுச் செய்தியை வழங்கி அல்லாஹ் என்னை அனுப்பி வைத்துள்ளானோ அதை நான் உங்களுக்கு கூறுவேன் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் ஒரு நபர் நின்று கொண்டிருந்தான். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது சொற்பொழிவை நிறைவு செய்த பிறகு இந்த நபர் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக இவ்வாறு கூறினார்: இந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களே! நீங்கள் லாத்தையும் உஸ்ஸாவையும் (இவை சிலைகளின் பெயர்களாகும்) கை விட்டு விட வேண்டும் என்று இந்த நபர் கூறுகின்றார். மேலும் உங்களது சக கோத்திரத்தினரான பனீ மாலிக் பின் அஸீஸிடமிருந்து உங்களது உறவை துண்டித்துக் கொண்டு முழுக்க முழுக்க மார்க்கத்திற்குப் புறம்பானதும் வழிகேடுமாகிய அவரது அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகின்றார். நீங்கள் ஒருபோதும் முஹம்மது கூறுவதை ஏற்றுக் கொள்ளாதீர்கள். அதைக் கேட்கவும் செய்யாதீர்கள். நான் எனது தந்தையிடம் முஹம்மது கூறுவதற்கு எதிராக அதை மறுத்து தனது கருத்தைக் கூறிக் கொண்டே செல்கின்ற இந்த நபர் யார்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இந்த நபர் முஹம்மதின் சிறிய தந்தையான அப்துல் உஸ்ஸா அபூலஹப் பின் அப்தில் முத்தலிப் ஆவார் என்று கூறினார்கள். (தாரீஹ் தப்ரீ தொகுதி 2 முதல் பகுதியின் மொழியாக்கம் பக்கம் 88. கராச்சியிலுள்ள நஃபீஸ் அகாடமியில் அச்சிடப்பட்டது.)

பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்–பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த ஆண் மகனின் மகத்துவம் எவ்வளவு உயர்ந்தது என்பதைப் பாருங்கள். அவர் சிறிது காலத்தில் ஆயிரக்கணக்கான மனிதர்களிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்தியுள்ளார். குழப்பத்திலிருந்து நன்மையின் பக்கம் அவர்களைக் கொண்டு வந்துள்ளார். எதுவரையென்றால், அவர்களது குஃப்ர் (நிராகரிப்பு) துண்டு துண்டாகி விட்டது. உண்மை மற்றும் நேர்மையின் எல்லா அம்சங்களும் ஒட்டு மொத்தமாக அவர்களிடம் ஒன்று சேர்ந்து விட்டன. அவர்களது உள்ளங்களில் தீமையிலிருந்து விலகியிருத்தல் என்பதன் ஒளி மின்னியது. அவர்களது நெற்றியில் உள்ள அடையாளங்களில் எஜமானனாகிய இறைவன் மீதுள்ள அன்பின் இரகசியம் ஒளிமயமான தோற்றத்தில் வெளிப்பட்டது. அவர்–களது தைரியம் மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதற்காக உயர்ந்து நிற்கின்றது. அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுப்பதற்காக மேற்கத்திய நாடுகளுக்கும் கிழக்கத்திய நாடுகளுக்கும் சென்றனர். அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தைப் பரப்புவதற்காக தெற்கிலுள்ள மற்றும் வடக்கிலுள்ள நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டனர். இஸ்லாத்தைப் பரப்புகின்ற முயற்சிகளில் எல்லா துயரங்களையும் அவர்கள் தாங்கிக் கொண்டனர். எதுவரையென்றால், மார்க்கத்தை அவர்கள் ஈரான், சினா, ரோமாபுரி மற்றும் சிரியா வரை சென்றடையச் செய்தனர். எங்கெல்லாம் மறுப்பு தனது வாசலைத் திறந்து வைத்திருந்ததோ இறைவனுக்கு இணை வைக்கின்ற செயல் தனது வாளை உருவி வைத்திருந்ததோ அங்கெல்லாம் இவர்கள் சென்றனர். அவர்களுக்கு முன்னால் இருந்த மரணத்தை விட்டு அவர்கள் தங்கள் முகங்களை திருப்பிக் கொள்ளவில்லை. ஒரு அடி கூட அவர்கள் பின்வாங்கிச் செல்லவில்லை. (நஜ்முல் ஹுதா. ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 41)

### அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்கான பொன்னான வழிமுறைகள்

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதிலும் தப்லீக் செய்வதிலும் ஒவ்வொருவரது தகுதியையும் கருத்தில் கொண்ட–வாறு செயல்பட வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையில் நம்பிக்கை கொண்டவருக்கு மார்க்கத்தை தப்லீக் செய்வதில் ஒவ்வொருவரது

தகுதியையும் கருத்தில் கொள்வது அவசியமானதாகும். எங்கு மென்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமோ அத்தகைய சந்தர்ப்பங்களில் கடுமை காட்டக் கூடாது. எங்கு கடுமை காட்டாமல் பணி நடக்காது என்று தெரிய வருகின்றதோ அங்கு மென்மையுடன் நடந்து கொள்வதும் கூட பாவம் ஆகும். அவ்வாறே ஒவ்வொருவரது தகுதியையும் கருத்தில் கொள்ளாமல் இருந்தால் நீங்கள் மறுப்பு மற்றும் மார்க்கத்தை இழக்கின்ற செயலைச் செய்தவராக ஆகி விடலாம். பாருங்கள். வெளிப்படையாகப் பார்க்கும்போது ஃபிர்அவ்ன் எவ்வளவு கடுமையான காஃபிராக இருந்தாலும் அல்லாஹ்விடமிருந்து ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அல்லாஹ் அவர்களை நோக்கி فَقُوْلَا لَهٗ قَوْلًا لَّيِّنًا அதாவது நீங்கள் இருவரும் அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும் ஹாரூன் (அலை) அவர்களும் அவரிடம் மென்மையான வாக்கைக் கூறுங்கள் (20:45) என்று கூறுகின்றான்.

ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கும் திருக்குர்ஆனில் இதேபோன்ற கட்டளைதான் கூறப்பட்டிருக்கின்றது.

وَ اِنْ جَنَحُوْا لِلسَّلْمِ فَاجْنَحْ لَهَا

அவர்கள் சமாதானத்திற்கு இணங்கினால் (தூதரே!) நீரும் சமாதானத்திற்கு இணங்குவீராக (8:62) என்று அவர்களை நோக்கி அல்லாஹ் கூறுகின்றான். அதாவது நம்பிக்கை கொண்டவர்களுடனும் முஸ்லிம்களுடனும் மென்மையாகவும் பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அவர்களது சஹாபாக்களின் நிலைமை தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ وَالَّذِيْنَ مَعَهٗۤ
اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ رُحَمَآءُ بَيْنَهُمْ

முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார். அவருடனிருப்பவர்கள் நிராகரிப்பவர்களுக்கு எதிரில் கடினமானவர்களும் தங்களுக்குள் மிக்க மென்மையாக நடந்து கொள்பவர்களுமாவார்கள். (48:30)

பிறிதோரிடத்தில் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

يٰۤاَيُّهَا النَّبِيُّ جَاهِدِ الْكُفَّارَ
وَالْمُنٰفِقِيْنَ وَاغْلُظْ عَلَيْهِمْ

நபியே! நிராகரிப்பவர்களுடனும் நயவஞ்சகர்களுடனும் அறப்போர் நிகழ்த்துவீராக. மேலும் அவர்களுக்கு எதிரில் கடுமையாக இருங்கள். (9:73)

சுருக்கமாக, இந்த வசனங்களிலிருந்து சுயமே இறைவனும் கூட ஒவ்வொருவரது தகுதியையும் கருத்தில் கொண்டுள்ளான் என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது. நம்பிக்கை கொண்டவர்களுடன் எந்த அளவு மென்மையாக நடந்து கொள்ள வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 526; 2003 ஆம் ஆண்டு பதிப்பு – காதியானில் அச்சிடப்பட்டது)

### கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பதில் பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டிய உயர்வான முன்மாதிரி

பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் உறுதியாக கொண்ட கொள்கையில் நிலைத்திருப்பதில் உயர்வான முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டினார். அனைத்து நபிமார்களை விட அவ்விஷயத்தில் அவர்களது மகிமை உயர்வானதாக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாருங்கள். மக்காவில் அவர்கள் வாழ்ந்தபோது அவர்களுக்கு எந்த அளவு துக்கங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டியது வருகின்றது. தாயிபிற்கு அவர்கள் சென்றபோது எந்த அளவு அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டது என்றால், அவர்களது உடலிலிருந்து இரத்தம் வழிந்தோட ஆரம்பித்தது. அப்போது அவர்கள் இது எத்தகைய ஒரு நேரமாக இருக்கின்றது? நான் பேசுகின்ற போது மக்கள் தமது முகங்களைத் திருப்பிக் கொண்டு சென்று விடுகின்றனர் என்று கூறினார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் என் இறைவா! இந்த துக்கத்தின் மீது பொறுமையை கடைபிடிப்பேன். நீ என் மீது திருப்தி அடையும் வரை நான் பொறுமையைக் கடைபிடிப்பேன் என்று கூறினார்கள். (அல்ஹகம் 10 அக்டோபர் 1902 பக்கம் 14)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு நபிக்கும் வழி இறங்காத வரை அவரால் எதுவும் கூற முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு விஷயத்தின் உண்மை நிலையும் இறைவனின் வஹியின் மூலமாகவே திறக்கின்றது. இதன் காரணமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து

مَا كُنْتَ تَدْرِيْ مَا الْكِتٰبُ وَلَا الْاِيْمَانُ

அதாவது வேதம் என்றால் என்ன? ஈமான் என்பது என்ன? என்று உமக்கு தெரியாது என்று கூறுகின்றான். ஆனால், அல்லாஹ் அவர்கள் மீது வஹியை இறக்கிய போது وَاُمِرْتُ اَنْ اَكُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ நான் நம்பிக்கை கொண்டவனாக விளங்க வேண்டுமென்று எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது (10:105) என்று அவர்களுக்கு கூற வேண்டியது வந்தது. இவ்வாறே அவர்களுக்கு வஹி இறங்குவதற்கு முன்னுள்ள காலத்தில் மக்காவில் சிலை வணக்கமும், இறைவனுக்கு இணைவைத்தலும் தீமைகளைச் செய்வதும் இருந்து வந்தது. ஆனால், இறைவனிடமிருந்து அவர்களுக்கு வஹி வருவதற்கு முன்னரும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் சிலைகளுக்கு எதிராகப் பேசியதாக எவராவது கூற முடியுமா? அவர்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்ததாக எவராவது கூற முடியுமா? ஆனால், فَاصْدَعْ بِمَا تُؤْمَرُ உமக்கு கட்டளையிடப்பட்ட செய்தியை நீர் தெளிவாக அறிவிப்பீராக (15:95) என்ற கட்டளை வந்ததும் ஒரு நொடிப்பொழுது கூட அவர்கள் தாமதிக்கவில்லை. ஆயிரக்கணக்கான கடினங்களையும் துன்பங்களையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. விஷயம் இதுவேயாகும். அதாவது ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக இறைவனின் வஹி வருகின்றபோது அதற்கென்று நியமிக்கப்பட்டவர் அதைப் பிறருக்கு எட்ட வைப்பதில் எவரையும் பொருட்படுத்துவதில்லை. இறைவனது வஹியிலிருந்து எந்தவொரு தகவலையும் பெறாமலேயே ஏதாவது ஒரு விஷயத்தைப் பரப்புவதை எவ்வாறு அவர்கள் ஷிர்க் என்று கருதுகின்றனரோ அதைப்போன்றே அந்த வஹியை மறைப்பதையும் அவர்கள் ஷிர்க் என்றே கருதுகின்றனர். இறைவனின் வஹியின் மூலமாக அறிவிக்கப்படாத ஒரு விஷயத்தை ஒருவர் கூறுகின்றார் என்றால் அவர் இறைவனுக்கு தோன்றாத ஒன்று தனக்கு தெரிய வந்திருப்பதாகக் கருதுகின்றார். இத்தகைய அவமரியாதையான செயலின் காரணமாக அவர் இறைவனுக்கு இணை வைப்பவராக ஆகி விடுகின்றார். திருக்குர்ஆன் இறங்குவதற்கு முன்னதாக அதில் கூறப்பட்டுள்ள அனைத்து விஷயங்களையும் ஒருவர் கூறி விடுகின்றார் என்றால் பிறகு திருக்குர்ஆன் இறங்குவதற்கு என்ன தேவை இருக்கின்றது? எனவே, இறைவன் எவற்றையெல்லாம் நமக்கு திறந்து தந்துள்ளானோ, மேலும் எப்போது அவற்றை திறந்து தந்தானோ அப்போதே நாம் அவற்றை எடுத்துக் கூறி விட்டோம். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 392; 2003 ஆம் ஆண்டு பதிப்பு – காதியானில் அச்சிடப்பட்டது)

★ ★ ★ ★ ★




**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிலிருந்து**

ஒவ்வொரு நபிக்கும் ஏதாவதொரு விருப்பம் இருந்திருக்கின்றது. எனது உள்ளத்தின் விருப்பம் இரவில் செய்யும் இறை வணக்கமாகும். (கன்ஸுல் உம்மால்)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான் மற்றும் குடும்பத்தினர் (சாத்தான்குளம்)**